DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளக்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

Member of National Ethnic Press and Media Council of Canada
27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1465 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 3, 2024

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ KUMAR 416.843.3333 416.453.7777

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneservices.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

# “ஜனநாயக நெறிமுறைகளுக்கு அமைவாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பலப்படுத்தப்பட வேண்டுமென்று நான் தொடர்ச்சியாகக் கூறி வந்திருக்கிறேன்”

## பொதுமக்கள்-ஊடகவியலாளர்கள் சந்திப்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி. தெரிவிப்பு

### சமூகமளித்திருந்த ரொறன்ரோ ஊடகப் பிரதிநிதிகள் கூட்டாக எழுந்து நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடிய தேர்தல் ஆணையம் நடத்தவுள்ள தேர்தல் தள்ளிப்போட வேண்டும் என கூட்டாக கோரிக்கை.





ஜனநாயக நெறிமுறைகளுக்கு அமைவாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பலப்படுத்தப்பட வேண்டுமென்று நான் தொடர்ச்சியாகக் கூறி வந்திருக்கிறேன். வளர்ச்சி நிலைக்கு ஏற்ப மாற்றங்கள் அவசியம் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறேன். என்னைப் போலவே இன்னும் பலரும் கருத்து கொண்டவர்களாக இருந்தார்கள். ஆனால் எமது வேண்டுகோள்களை சரியாக விளங்கிக் கொள்ள முன்வராதவர்களாகிய ஒரு குழுவினர் இவ்வாறான கோரிக்கைகளை விடுத்தவர்களை இந்த உயரிய அமைப்பின் செயற்பாடுகளிலிருந்து எம்மை விலக்கி வைக்க முடிவெடுத்துள்ளார்கள். அதன் விளைவே, நான் உட்பட பல வேட்பாளர்களின் தேர்தல் மனுக்கள் அந்தக் குழுவினரால் நிராகரிக்கப்பட்டுள்ளன”

ஸ்காபுறோவில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஜேசிஎஸ் மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்கள்-ஊடகவியலாளர்கள் சந்திப்பில் நிமால் விநாயகமூர்த்தி. இவ்வாறு தனது தன்னிலை விளக்கத்தில் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com


INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

உலகெங்கும் நன்கு அறியப்பெற்ற வருடாந்த நிகழ்வு
உதயன் சரவதேச விருது விழா-2024
Uthayan International Awards Festival – 2024
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
மண்டபம்:- The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM

# புத்தகத் திருவிழாவும் கலை நிகழ்ச்சிகளும்







இலங்கைமற்றும் தமிழக அரசின் உயர் விருதுகள் பெற்ற பல்துறைசார்ந்த நூல் ஆசிரியரும் புதிய சிந்தனையாளரும், ஆய்வாளரும், கீதவாணி வானொலியில் இயற்கையும் இயல்பும் நிகழ்ச்சிப் பேச்சாளரும், எழுத்துத் துறையில் கௌரவ கலாநிதிப்பட்டம் பெற்றவருமான எஸ் குருபாதம் (அமரர்) அவர்களது புத்தகத் திருவிழாவிற்கான அழைப்பிதழ்

காலம்: 12.05.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 4:00–8:00

இடம்: சங்கமம் மண்டபம். 42 ரக்சிடோ கோட். ஸ்காபறோ.

**Sankkamam Party Hall. 42 Tuxedo Ct, Scarborough, Ont.**

கலை விருந்து: பரத நாட்டியம், நாடகம் -"ஞான ஒளி", நடனம், மிருதங்கம், வயலின், சிறுவர் திருக்குறள் நிகழ்ச்சி, நூல் நயப்புரை, கிராமிய நடனம், கவிதை. ஆடல்-பாடல்-நடிப்பு

நூல்கள்: மதமற்ற மதம்: பாகம் 1

மதமற்ற மதம்: பாகம் 2

ஆசிரியரது நூல்களை மண்டபத்தில் பெற்றுக் கொள்ளலாம்

ஆசிரியர்: Hon. Dr. எஸ் குருபாதம் (அமரர்)

ஆசிரியரின் முந்திய வெளியீடு: மறுபிறப்பு; போதிதர்மர்; தந்திரா; மனமேமகிழ்ந்திரு; வியத்தகு புராதன விஞ்ஞானிகள்-நாகர்கள், மாயன்கள்; குழந்தைகளை வளர்க்காதீர்கள், வளர விடுங்கள்; அராலியூர்; மயன்கள் அறிவியலும் வரலாறும்,

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்: விழாக்குழு

சுந்தரராஜா (குஞ்சன்): 416 300 9881, மோகன் 416 836 7228, குருஜெயா: 416 398 7241






Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# இலங்கை அரசின் இனப் படுகொலையை தவிர்த்து அதற்கு பொறுப்பானவர்களோடு இணக்க அரசியலை தொடர முனைபவர்களை மக்கள் நிராகரிக்க வேண்டும்

எமது தாய்மண்ணை ஆண்டு சவைப்பதில் ஆசை கொண்டு அங்கு படையெடுத்தவர்கள் பலர். மீன் பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பில் பிறந்த ‘மங்கையர் தியாகி’ அன்னை பூபதி அவர்கள் உண்ணா நோன்பிருந்து தன் இன்னுயிரை மண்ணுக்கு ஈந்து 36 ஆண்டுகள் ஆனதை உலகெங்கும் உள் ஈழத் தமிழர்கள் நேற்றும் நினைவு கூர்ந்தார்கள். அவர் உண்ணா நோன்பிருந்துத எதற்காகவெனில். எம் மண்ணை சுவைக்கவும் சூறையாடவும் முகாம்களை அமைத்து அடக்குமுறைகளைப் பிரயோகித்த இந்திய சமாதானப் படையை மீளவும் தன்நாட்டுக்கு திருப்பி அழைக்கும் படியும் விடுதலைப் புலிகளோடு யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்கவும் என்ற கோரிக்கையை முன்வைத்து தான். ஆனால் அவரது கோரிக்கை நிறைவேற்றப்படாத காரணத்தால், தான் உண்ணா விரதத்தை ஆரம்பித்த ஒரு மாத காலத்திற்கு பின்னர் உடலை வருத்தி உயிரைத் துறந்தார் அந்த ‘மங்கையர் தியாகி’

இதைப் போலவே. இலங்கை ஆங்கிலேயர் என்னும் கொடிய ஆட்சி செய்தவர்களிடமிருந்து விடுதலை பெற்ற 1948ம் ஆண்டு என்பது தமிழர்களுக்கான ஒரு பொற்காலத்தின் ஆரம்பம் என்று கூறிவிட முடியாது. சுதந்திரம் அடைந்ததாகக் கூறப்படும் ஆண்டிலிருந்து அதற்கு முந்திய நூற்றுக்கணக்கான ஆண்டுகளில் வெவ்வேறு வடிவில் இலங்கை என்னும் இயற்கை வளம் நிறைந்த தேசத்தை சுரண்டியும் வரிகளை விதித்தும் பயங்கரமான ஆயுதங்களால் பயத்தை ஏற்படுத்தி ஆட்சி செய்த காலப் பகுதியும் நீண்டதாகவே பார்க்கப்பட்டது.

அதற்கு பின்னைய காலப்பகுதியில் இலங்கையின் அரசியல் அதிகாரம் என்பது மிகவும் பலமும் சுகபோகங்களையும் கொண்டது என்பதை ஆங்கிலேயர் நிரூபித்துச் சென்றதால் அவர்களுக்கு சேவகர்களாக விளங்கியவர்களில் தமிழர்களாகவும் ஆங்கிலேயர்களாகவும் பறங்கியர்களாகவும் இருந்தவர்களில் கல்வி அறிவைத் தேடிக்கொண்டவர்கள் அரசியல் மீது ஆசை கொண்டவர்களாக வெள்ளையர்கள் அனுபவித்த அனைத்து சலுகைகளையும் அனுபவிக்கத் துடித்தார்கள். பின்னர் அதை அனுபவிக்கவும் தொடங்கினார்கள். இவ்வாறான அரசியல் பதவி-களைப் பெற்றுக்கொண்டவர்களான தமிழ் சிங்கள இஸ்லாமியத் தலைவர்கள் தங்களுக்குள் நட்பு பாராட்டிக் கொண்டார்கள். ஆனால் நடுத்தர வர்க்க மக்களும் ஏழைத் தொழிலாளர்களும் வஞ்சிககப்பட்டார்கள். இதனால் இனங்களுக்கு இடையில் பிரிவை ஏற்படுத்தினார்கள். தொடர்ந்து அரசியல் பதவிகளுக்காக இனவாதத்தையும் இன அடக்கு முறைகளையும் பிரயோகித்தார்கள் சிங்கள ஆட்சியாளர்கள்.

தொடர்ந்து தமிழ் இளைஞர்கள் அவர்களது அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராடத் தொடங்கிய போது. அவர்களின் கோரிக்கைகளை கருத்தில் எடுக்காமல் அவர்களை அடக்கவும் அழிக்கவும் நினைத்தார்கள். இதனால் ஏற்பட்ட தொடர் விரிசல்களும் மோதலிகளும் எம் இனத்தை படுகொலை செய்யும் அளவிற்கு வந்தடைந்தது.

எமது மக்களையும் விடுதலைப் போராளிகளையும் கொன்றழித்த இலங்கை அரசும் அதன் காவல்நாய்களான இராணுவம் மற்றும் படைகளும் ‘இனப்படுகொலையாளர்கள்’ என்ற பெயரோடு எம்மோடு பார்க்கப்படுகையில். அந்தக் காரணத்திற்கு பொறுபபானவர்கள் தகுந்த தண்டனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று குரல் எழுப்பி வரும் நீண்ட காலப்பகுதிக்கு பின்னரும். ஏம்மவர்கள் இணக்க அரசியல் செய்யும் நோக்கத்தை கைவிடாமல் உள்ளார்கள். தேர்தல்களை நடத்துங்கள் என்று ஆட்சியாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கும் அதே வேளை அவர்களுக்கு ஆதரவு வழங்கவும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகிவிட்டதாகவும் செய்திகள் கசிந்துள்ளன.

எனவே. அன்னை பூபதி அவர்களைப் போல பலர் செய்த தியாகத்திற்கு மாற்றீடாக நாம் எமது கோரிக்கைகளிலிருந்து விடுபடாமல் இனப்படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு நீதியைத் தேடும் முயற்சியிலிருந்து விலகாமல் செயற்பட வேண்டும் என்பதை இவ்வாரம் முக்கிய விடயமாக பதிவு செய்கின்றோம்!

நூல் வெளியீடு
வியன்களம்
பவித்திராவின் போர்க்காலக் கவிதைகள்


11 MAY 2024
மாலை 6:00 மணி
ஆத்மஜோதி மண்டபம்
7125 RUE WAVERLY
MONTREAL, QC H2S 3J1
மேலதிக தகவல்களுக்கு
(437) 991-8202
(514) 451-5686
(514) 865-5268
பவானி தர்மகுலசிங்கம்
நூலாசிரியர்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!
நம்மவர்களை நாமே கொண்டாடுவோம்!!

வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS...
சமூக உளவளம் பேணும் தொடர் - 75
Psychosocial Educational Series - 75
VASANTHAM HEALTH & WELLNESS CENTRE
நாம் உண்பவை - அருந்துபவை எமக்கு நஞ்சாகுமா? அறிவியல் தடங்கள்
Do We Absorb Poision in our Food and Drinks in Canada? Scienctific Evidence
06 May 2024 (Monday)
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 4:30a.m - 6:30am (Tuesday)

Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588


• உணவுப் பாதுகாப்பில் உங்கள் பங்கு
Your Roll in Food Safety.
• தமிழர் உணவுகள்: தீதும் நன்றும்
Tamil Diet -Pros & Cons
Nesananthar Sundararajah
Frontline Government Regulator
B. Sc Food Science (McGill University, Canada)

Satheesh Kumar
B.Sc., Biological Science; University of Jaffna, Sri Lanka
M.Sc., Biotechnology; University of Peradeniya, Sri Lanka
Post Graduate Diploma in Education: Open University, Sri Lanka
Food Industry specific trainings in Canada.
Join us via zoom: CLICK HERE or go to link below in the email
Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!

Hosted by
Dr. Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA

For All your Renovation Needs!
- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno
Call - Siva
416-706-8160

TELEMARKETERS WANTED
தமிழிலும், ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய Telemarketers உடனடியாகத் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416-754 9492

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# தமிழ் பொது வேட்பாளர் குறுகிய அரசியல்: தெற்குடன் இணைந்த வேட்பாளர் சாத்தியம் — சட்டத்தரணி சுவிஸ்திகா தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் கட்சிகள் இணைந்து தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்பது குறுகிய அரசியல் நோக்கம் கொண்டது எனத் தெரிவித்த சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான சுவஸ்திகா அருலிங்கம் தெற்கு சிங்கள அரசியல்வாதிகளுடன் இணைந்து பேசி தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவாராயின் சாத்தியமான நிலைமைகளை ஏற்படுத்தும் என தெரிவித்தார்.

தமிழ் மக்கள் எதிர்ப்பு வாக்கு அரசியலில் இருந்து மீள்வதுடன் தெற்கு மக்களுடன் இணைந்து எவ்வாறு எமது உரிமைகளை பெற முடியும் என்பதில் கவனம் செலுத்த வேண்டும் என சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான சுவஸ்திகா அருலிங்கம் தெரிவித்தார்.

27-04-2024 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் வல்லமை அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்கள் தேர்தல் காலங்களில் எவ்வாறு அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுதல் தொடர்பான கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் பேசும் மக்கள் இவ்வளவு காலமும் எதிர்பாபு வாக்குகளில் கவனம் செலுத்தி வருகின்ற நிலையில் இனி வரும் காலங்களில் தெற்கு மக்களுடன் இணைந்து எவ்வாறு தமது உரிமைகளை பெற முடியும் என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு வருகிறது நானும் அதை வரவேற்பேன்.

ஆனால் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை குறுகிய அரசியல் நோக்கத்திற்காக பொது வேட்பாளராக நிறுத்துவது தமிழ் மக்களுக்கு ஆரோக்கியமற்ற விடயம்.

ஏனெனில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற மாட்டார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம் ஆனால் அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பது கேள்வியே.

ஏனெனில் தமிழ் பொது வேட்பாளரை நியமிக்கும் தமிழ் அரசியல் தலைமைகள் தெற்கு சிங்கள அரசியல் வாதிகளுடன் இணைந்து பேசி தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைகள் தொடர்பில் சாதகமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள முடியும்.

ஆகவே தமிழ் மக்கள் தொடர்ந்தும் எதிர்ப்பு வாக்கு அரசியலை முன் எடுப்பதை நிறுத்தி தெற்கு மக்களுடன் இணைந்து தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவார்களாயின் தமிழ் மக்கள் சார்ந்து பிரச்சினைகளி சாதகமான நிலைப்பாட்டினை அடைந்து கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு தமிழ் அமைப்பு பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் தீர்மானம்!





ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள் இன்று தீர்மானித்துள்ளனர்.

குறித்த ஒன்று கூடல் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தலைமையில் காலை 11:10 மணியளவில் வவுனியாவில் புகையிரத வீதியில் அமைந்துள்ள சுர் விருந்தினர் விடுதியில் ஆரம்பமானது.

இதில் முதல் நிகழ்வாக ஆய்வாளர் நிலாந்தன் அவர்களது அறிமுக உரையை தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டு உரையடல் இடம்பெற்றது.

இதில் உரையாடலை அகத்தியர் அடிகளார், திருகோணமலை வண. ஆயர் நொயல் இமானுவேல் வேலன் சுவாமிகள் உட்பட 48 சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் வணக்கத்திற்கு உரிய மத தலைவர்கள் என கலந்து கொண்டிருந்தனர்.

# தேசிய மக்கள் சக்தியின் மேதினம் யாழ்ப்பாணத்தில்





தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் "நாட்டைக் கட்டியெழுப்பும் தீர்வுக்கு ஓரணியில் இனம், மதம், சாதி, பேதம் இல்லாத புதிய சுதந்திர போராட்டத்திற்காகப் போராடுவோம் என்னும் கருப்பொருளிலான மேதின கூட்டம் 01-05-2024 அன்று யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜிதகேரத் கலந்து கொண்டு இனம்,மதம், சாதி, பேதம் இல்லாத புதிய சுதந் திர போராட்டத்திற்காகப் குரல் கொடுப்போம் எண்ணும் கருப்பொருளில் உரையாற்றினர்.

இதில் தேசிய மக்கள் சக்தியின் மத்திய செயற்குழுவின் உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட பிரதான அமைப்பாளர் இ.சந்திரசேகரம், மதத்தலைவர்கள், மகளிர் அமைப்பின் செயற்பாட்டாளர்கள், மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்பாளர்கள், இணைப்பாளர், தோட்டதொழிலாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் மக்கள் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ்ப்பாண கோட்டையை சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்றால் போல மேம்படுத்த, திட்டங்களை வகுக்க ஆளுநர் பணிப்புரை



ஒல்லாந்து கோட்டை - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண நகரின் முக்கிய சுற்றுலாத் தலமாக காணப்படும் கோட்டையை, சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கு ஏற்றால் போல மாற்றியமைப்பதற்கான புதிய திட்டங்களை வகுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் பணிப்புரை விடுத்துள்ளார். ஆளுநர் செயலகத்தில் 02-05-2024 அன்று நடைபெற்ற கூட்டத்தின் போதே கௌரவ ஆளுநர் இந்த பணிப்புரையை விடுத்தார்.

யாழ்ப்பாண கோட்டையின் உட்புறம் மற்றும் வெளிப்புறச் சூழலை, சுற்றுலாப் பயணிகளை கவரும் வண்ணம் அழகுபடுத்த தேவையான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியன இணைந்து புதிய திட்டங்களை வடிவமைக்குமாறும், அதற்கான அனுமதியை மத்திய அமைச்சு மற்றும் துறைசார் திணைக்களங்களிடம் பெற்று அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தினார்.

வரலாற்றுச் சின்னமாக காணப்படும் கோட்டையை பாதுகாப்பதற்கும், அதனூடாக வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கும் ஏற்ற வகையில் புதிய திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும் என ஆளுநர் தெரிவித்தார். மேலும் யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய சுற்றுலா இடங்களையும் அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராயுமாறு ஆளுநர் தெரிவித்தார்.

இதேவேளை தொல்பொருள் திணைக்களமும், மத்திய கலாசார நிதியமும் மாகாண சபையுடன் இணைந்து செயற்படும் போது, அதற்கான ஒத்துழைப்புகளை வழங்க முடியும் என ஆளுநர் கூறினார். ஆளுநரின் பணிப்புரைகளை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள், பணிப்புரையை துரிதமாக செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தனர்.

# கட்டைக்காட்டில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 3படகுகளுடன் மூவர் கைது





வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பகுதியில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் 02.05.2024 அன்று மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட முயன்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒளி பாய்ச்சி குறுகிய கண்களை கொண்ட (சுருக்குவலை) வலையை பயன்படுத்தி மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டதால் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக வெற்றிலைக்கேணி கடற்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்கள் கட்டைக்காட்டை சேர்ந்தவர்கள் என்பதோடு உடமைகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கனடிய செய்திகள் Canadian News

# "கனடிய தேர்தல்களில் போட்டியிடும் தமிழ் பேசும் வேட்பாளர்களுக்காக ஆதரவு தேடும் செயற்பாடுகளிலிருந்து கனடிய தமிழர் பேரவை விலகி நிற்க வேண்டும்"

## "மக்கள் கூட்டமைப்பு" என்னும் பெயரில் நிறுவப்பட்ட பொது அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்து

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

"இனிவரும் காலங்களில் கனடாவில் நடைபெறவுள்ள மத்திய, மாகாண மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடும் தமிழ் பேசும் வேட்பாளர்களுக்காக பல அமைப்புக்களும் தனிநபர்களும் ஆதரவு தேடும் பங்களிப்பினைச் செய்து வருகின்றார்கள். குறிப்பாக தமிழ் பேசும் மூத்தோர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தாங்கள் விரும்பும் வேட்பாளர்களுக்கு ஆதரவைத் தேடும் செயற்பாடு தீவிரமாக செயற்பட்டு வருகின்றார்கள். இதேவேளை இலங்கை அரசோடும் பௌத்த பிக்குகளோடும் இணைந்து "இமாலயப் பிரகடனம்" என்னும் தமிழர் விரோத செயற்பாட்டை கையிலெடுத்ததன் காரணமாக கனடாவில் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியும் மக்கள் ஆதரவை இழந்தும் பின் தள்ளப்பட்டுள்ள கனடியத் தமிழர் பேரவையின் முக்கிய உறுப்பினர்களும் சில தொகுதிகளில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களுக்கு ஆதரவைத் தேடும் செயற்பாடுகளிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். கனடாவில் மக்களின் விருப்பைத்தையோ அல்லது சம்மதத்தையோ பெற்றுக் கொள்ளாமல் "இமாலயப் பிரகடனத்தை" தொடர்ச்சியாக நடைமுறைப் படுத்து முயற்சிகளில் இறங்கியுள்ள கனடிய தமிழர் பேரவை இவ்வாறான அரசியல் செயற்பாடுகளிலிருந்து விலகி நிற்க வேண்டும் என்றும் எமது மக்கள் கூட்டமைப்பு" வலியுறுத்துகின்றது.

இவ்வாறு ரொறன்ரோ பெரும்பாகத்திலும் மொன்றியால் நகரிலும் "மக்கள் கூட்டமைப்பு" என்னும் பெயரில் நிறுவப்பட்ட பொது அமைப்பு வெளியிட்டு விநியோகம் செய்துள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில் தொடர்ந்து பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய தமிழர் பேரவை தொடர்ந்து தமிழ் மக்கள் சார்ந்த அமைப்பாக விளங்க வேண்டுமானால் அந்த அமைப்பினர் "இமாலப் பிரகடனம்" என்று தமிழ் மக்கள் விரோத செயற்பாட்டிலிருந்தும் அதை அமுல் செய்யும் முனைப்பிலிருந்தும் விலகி நிற்க வேண்டும். ஆனால் கனடிய தமிழர் பேரவை அவ்வாறு இதுவரை செயற்படவில்லை. மக்களின் கோரிக்கைகளையும் விண்ணப்பங்களையும் கனடிய தமிழர் பேரவை ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே அந்த அமைப்பின் ஆதரவை வேண்டி நிற்கும் வேட்பாளர்கள் கூட இலங்கை அரசின் "இமாலயப் பிரகடனத்திற்கு" ஆதரவு வழங்குபவர்களாகவே அடையாளம் காட்டப்படுவார்கள்.

மேலும் தற்போது பதவி விலகியுள்ள கனடிய தமிழர் பேரவையின் முன்னாள் தலைவியான ரவீனா ரட்ணசிங்கம் அவர்களும் கனடிய பொதுத் தேர்தலில் போட்டியிடும் வகையில் தன்னை தயார்படுத்தி வருகின்றார். அவருக்கு ஆதரவு வழங்கும் செயற்பாடுகளிலும் தற்போது கனடிய தமிழர் பேரவையின் முக்கிய உறுப்பினர்கள் கூட்டாக செயற்பட்டு வருகின்றார்கள். குறிப்பாக கனடிய தமிழர் பேரவையின் முக்கிய உறுப்பினரான ஜே. ஜெயராசலிங்கம் அவர்களும் கனடிய தமிழர் பேரவையின் முன்னாள் தலைவியான ரவீனா ரட்ணசிங்கம் அவர்களுக்கு ஆதரவு தேடும் பணிகளில் முழு நேரமாக அமர்த்தப்பட்டுள்ளார் எனவும் அறியப்படுகின்றது.

இவ்வாறான செயற்பாடுகளை நாம் உற்று நோக்கினால், கொன்சர்வேட்டிவ் கட்சி சார்பில் போட்டியிடவுள்ள தமிழ் பேசும் வேட்பாளரா ரவீனா போன்றவர்கள் தற்போதைய லிபரல் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிராகவே பிரச்சாரம் செய்து வருகின்றார்கள்.

இலங்கை ஆட்சியாளர்கள் மேற்கொண்ட தமிழினப் படுகொலைகளுக்குரிய தண்டனையைப் பெறவேண்டும் அல்லது பொறுப்புக் கூற வேண்டும் என்று குரல் கொடுத்த வருகின்ற லிபரல் அரசாங்கத்திற்கு எதிராக பிரச்சாரம் மேற்கொள்ளும் ஒரு வேட்பாளருக்கு வழங்கும் ஆதரவு மூலம் கனடிய தமிழர் பேரவையின் முக்கிய உறுப்பினர்கள் "இமாலயப் பிரகடனத்தை தொடர்ச்சியாக ஆதரிப்பவர்கள் என்ற வகையில் அவர்களுடைய ஆதரவு எமது தமிழ் பேசும் வேட்பாளர்களுக்கு அவசியம் இல்லை என்றே நாம் கருத வேண்டியுள்ளது".

இவ்வாறு "மக்கள் கூட்டமைப்பு" என்னும் பெயரில் நிறுவப்பட்ட பொது அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# ஊடகவியலாளர் தராக்கியின் 19ஆம் ஆண்டு நினைவு தினம் வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் அனுஸ்டிப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

(28-04-2024)




ஊடகவியலாளர் தராக்கி சிவராம் அவர்களின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் 28-04-2024 அன்று அனுஸ்டிக்கப்பட்டது.

அமையத்தின் செயலாளரும் ஊடகவியலாளருமான பரமேஸ்வரன் கார்த்தீபன் தலைமையில் இடம்பெற்ற இவ் நிகழ்வில் அன்னாரது திருவுருவ படத்திற்கு ஒளிதீபம் ஏற்றி மலர்தூவி அஞ்சலிசெலுத்தப்பட்டது.

அவர் தொடர்பான நினைவுப்பேருரையினை சிரேஸ்ட ஊடகவியலாளர் நடராசா ஜனகதீபன் நிகழ்த்தியிருந்தார்.

குறித்த நிகழ்வில் மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# ஊடகவியலாளர் எஸ்.ஜெகன் எழுதிய "மகா வம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரை பிரதேசமும்" நூல் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தரிடம் கையளிப்பு

(01-05-2024)

மன்னார் ரோட்டரி கழகத்தின் நிதி அனுசரணையில் மன்னார் ஊடகவியலாளர் எஸ்.ஜெகன் எழுதிய "மகா வம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரை பிரதேசமும்" எனும் இலக்கிய நூல்கள் மூலமாக இடப்பெயர் வரலாற்று ஆய்வு நூல் வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் ரி.மங்கேளேஸ்வரன் அவர்களிடம் வவுனியா பல்கலைக்கழகத்தில் மன்னார் ரோட்டரி கழகத்தின் செயலாளர் தி.தனேஸ்வரன் மற்றும் நூலாசிரியர் எஸ்.ஜெகன் ஆகியோர் இணைந்து 30-04-2024 செவ்வாய்க்கிழமை மாலை கையளித்துள்ளனர்.

இந்த நூலானது மகாவம்ச விஜயனும் 700 தோழர்களும் இலங்கையில் வந்து இறங்கிய இடமானது மன்னார் கட்டுக்கரை பிரதேசம் என்பதை சங்ககால இலக்கிய நூல் களான கம்பராமாயணம், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் உட்பட மகாவம்சம் போன்ற நூல்களின் ஆதாரத் தோடும் தற்கால வரலாற்றாசிரியர்கள் வெளியீடு செய்த நூல்களின் துணையோடு கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த கட்டுக்கரை பிரதேசத்தின் தோற்றம், வளர்ச்சி அதன் சிறப்பு குன்றுவதற்கான காரணங்களையும் கம்பராமாயணம், மகாவம்சம் உட்பட சங்ககால இலக்கிய நூல்கள் கூறும் இடப் பெயர்களையும் தற்போது மன்னார் மாவட்டத்தில் காணப்படும் இடம் பெயர்களையும் ஒப்பிட்டு ஆய்வு நூலாக வெளிவந்துள்ளது.

இந்த நூலானது கடந்த 23 திகதி மன்னார் மாவட்டச் செயலாளர் முன்னிலையில் உத்தியோக பூர்வமாக வெளியீடு செய்யப்பட்டிருந்தது.

மேலும் பாடசாலை மாணவர்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ,கல்வியாளர்களுக்கும் இந்த நூல் கிடைக்க வேண்டும். அவர்கள் ஒவ்வொருவரும் இந்த நூலை மென்மேலும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும் எனும் நோக்கில் முதற் கட்டமாக வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் ரி.மங்கேளேஸ்வரன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நூல் தொடர்பாக வவுனியா பல்கலைக்கழக துணைவேந்தர் மங்களேஸ்வரன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், ஊடகவியலாளர் ஜெகன் அவர்களால் எழுதப்பட்ட மகாவம்ச விஜயனும் மன்னார் கட்டுக்கரை பிரதேசமும் என்னும் நூல் வெளியீட்டில் என்னால் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது. இருந்தும் இந்த நூலினை ஊடகவியலாளர் ஜெகன், மன்னார் ரோட்டரி கழக செயலாளர் தனேஸ் அவர்களும் நேரில் வந்து கை அளித்திருப்பது மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

இந்த நூலானது சங்க இலக்கிய நூல்கள் மூலம் இடப்பெயர் ஆய்வின் ஊடாக இந்த புத்தகத்தை வெளியிட்டு இருப்பது உண்மையில் சிறந்த விடயமாகும். ஏனெனில் இந்த மாதிரியான நூல்கள் தான் எமது மக்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள், அவர்களது பிரதேசங்கள், அவர்களது வாழ்க்கை வரலாறுகள் போன்றவற்றை சிறப்பாக சொல்லுகின்றது.

சில வரலாற்று புத்தகங்கள் வரலாற்றை திரிபு படுத்துகின்றதாகவோ அல்லது வரலாற்றை மாற்றுவதாக இருக்கின்ற காலத்தில் உண்மையான வரலாற்றை கொண்டு வருவதற்கு இந்த நூலை ஜெகன் எழுதியிருப்பது உண்மையில் பாராட்டப்பட வேண்டிய விடயம். உண்மையில் அவருக்கு எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும். இதில் மன்னார் ரோட்டரி கழகமானது இந்த புத்தகத்திற்கு வெளியீட்டு அனுசரணையை வழங்கியிருப்பது உண்மையில் சிறந்த விடயம்.



குறிப்பாக ரோட்டரி கழகமானது ஒவ்வொரு மாவட்டங்களிலும் செய்கின்றது நான் பார்த்த அளவுக்கு. மன்னார் மாவட்டத்தில் இவ்வாறு ஒரு நூலை வெளியிடுவதற்கு அவர்கள் தங்களது அனுசரணையை வழங்கியிருப்பது என்பது மிகச் சிறந்த விடயம். ஏனெனில் தற்போதைய கால கட்டத்தில் இவ்வாறான அமைப்புக்கள் கூடுதலாக வாழ்வாதார உதவிகள் அல்லது மக்கள் வாழ்வதற்கு உதவிகள் மட்டும் செய்கின்றன.

மன்னார் ரோட்டரி கழகம் அவற்றை மட்டுமின்றி இவ்வாறான புத்தகங்களை வெளியிடுவதற்கு உதவி செய்வது என்பது ஒரு சிறந்த விடயம்.

இந்த ரோட்டரி கழகமானது நூலை வெளியீடு செய்வதற்கு உதவி செய்வதன் ஊடாக எமது வரலாற்றை எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்வதற்கு உதவும்.

நிச்சியமாக இந்த நூலினை எமது பல்கலைக்கழகத்தில் வன்னி நுலாசிரியர்களால் வெளியிடப்படுகின்ற நூல்கள் அனைத்தும் நாங்கள் நூல் களஞ்சியமாக சேர்த்து வைத்திருக்கின்றோம்.

எமது பல்கலைக் கழகத்தில் புதிய நூலகத்தில் இவற்றிற்காக விஷேடமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் இந்த நூல்கள் சேர்க்கப்படுகின்றது.

நிச்சயமாக இந்த நூல் வவுனியா பல்கலை கழகத்தில் ஆவணப் படுத்தப்படும். மேலும் இந்த ரோட்டரி கழகமானது தொடர்ச்சியாக இவ்வாறான அனுசரணைகள் வழங்குவது மன்னார் மாவட்டத்துக்கும் இந்த பிரதேசத்துக்கும் நிச்சயமாக உதவி செய்யும் என்று கூறிக் கொண்டு ஊடகவியலாளர் ஜெகன் என்பவர் ஊடகத்துறையில் இருந்து கொண்டு இவ்வாறு வரலாற்று ஆவணங்களை வெளியிடுவது என்பது உண்மையில் ஒரு சிறந்த விடயம்.

ஒரு வரலாற்று நூலை எழுதுவது என்பது இந்த காலத்தில் இலகுவான காரியமில்லை. பல்வேறுபட்ட சவால்கள் பல்வேறுபட்ட முன்னைய காலங்களில் வெளியீடு செய்யப்பட்ட ஊசாத்துணை நூல்களை படித்து ஆதாரமாக கொண்டு வந்து இந்த நூலை வெளியீடு செய்திருப்பது உண்மையில் சிறந்த விடயமாக கருதப்படுகிறது.

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் என்ற ரீதியில் ஊடகவியலாளர் ஜெகன் அவர்களுக்கும் இங்கு வருகை தந்து இந்த நூலினை எமக்கு தந்த மன்னார் ரோட்டரி கழக செயலாளர் தி.தனேஸ்வரன் அவர்களுக்கும் எமது நன்றிகள் என தெரிவித்தார்.

# மே தினத்தை வெகு விமர்சையாக கொண்டாடிய தலைமன்னார் ஊர்மனை கிராம மக்கள்



(01-05-2024)

தலைமன்னார் ஊர்மனை கிராம மக்கள், இம்முறை மே தினத்தை 01-05-2024 அன்று வெகு சிறப்பாக கொண்டாடியுள்ளனர்.

குறித்த கிராம மக்கள் கடந்த காலங்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் பொருளாதார பின்னடைவு மற்றும் இந்திய மீனவர்களின் அத்து மீறலால் ஏற்பட்ட பாதிப்புகள் உள்ளடங்களாக பல்வேறு பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த கிராம மக்கள் 1ம் திகதி அன்றைய தினம் மே தினத்தை ஒன்று திரண்டு மிகவும் ஒற்றுமையாக கொண்டாடி மகிழ்ந்து உள்ளனர்.

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தின் புனித லோறன்சியார் ஆலய பங்குத்தந்தை சந்தியோகு மார்க்கஸ் அடிகளார் தலைமையில் புனித லோரன்சியார் மீனவ கூட்டுறவு சங்கம் மற்றும் லோரன்சியார் விளையாட்டு கழகம் கூட்டாக இணைந்து மே தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

தலைமன்னார் ஊர்மனை கிராமத்தில் மீன்பிடி துறையில் அமைந்துள்ள சுருபத்தடியில் 01-05-2024 அன்று காலை காலை மே தின கொண்டாட்ட நிகழ்வு திருப்பலியுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதையடுத்து கிராம மக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

குறித்த கிராம மக்கள் யாவரும் ஒன்று திரண்டு மீன்பிடி துறைமுகத்தில் போட்டி நிகழ்வுகளில் ஈடுபட்டனர்.

நீச்சல் போட்டி, தெப்பம் வலிக்கும் போட்டி, பெரிய மற்றும் சிறிய படகுகளின் போட்டி, பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டி நிகழ்வுகள் இடம் பெற்றது.



தலைமன்னார் ஊர்மனை கிராமத்தின் கடற்படையினர் மற்றும் போலீஸ் தரப்பினர் உள்ளிட்ட பல்வேறு பிரதி நிதிகள் குறித்த நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னர் மாவட்டத்தில் பல்வேறு மீன கிராமங்களில் மே தின கொண்டாட்ட நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# புத்தகம் வாசிக்காமல் ஒருநாளும் பொழுதை வீணடிக்கக் கூடாது, என்கிறார் சட்டத்தரணியும், பதில் நீதவானுமான சோ. தேவராசா





புத்தகம் வாசிக்காமல் ஒருநாளும் பொழுதை வீணடிக்கக் கூடாது, தூங்கக் கூடாது, புத்தகம் என்பது எங்களுக்கு பக்குவத்தை தரும் கருவியாகும் என சட்டத்தரணியும், பதில் நீதவானுமான சோ. தேவராசா தெரிவித்துள்ளார்.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் ஆண்மீக வெளியீடான ஞானச்சுடர் 316 வெளியீட்டு நிகழ்வில் மதிப்பீட்டு உரையை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையால் மாதாந்தம் வெளியீடு செய்யப்படும் ஆன்மீக மலரான ஞானச்சுடர் வெளியீடு காலை 10:45 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆச்சிரம முதல்வர் அமுத சுரபி கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம் பெற்றது.

பஞ்ச புராண ஓதுதலுடன் ஆரம்பமான நிகழ்வில் ஆரம்ப உரையினை சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினரும் ஓயவு பெற்ற ஆசிரியருமான சிவநாதன் நிகழ்த்தியதை தொடர்ந்து வெளியீட்டு உரையை விரிவுரையாளர் கணேசமூர்த்தி நிகழ்தியதை தொடர்ந்து மதிப்பீட்டு உரையினை மூத்த சட்டத்தரணியும், பதில் நீதிபதியுமான தேவராசா நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்பு பிரதிகளை வெளியீட்டு உரைகளை நிகழ்த்திய பதில் நீதிபதியும் சட்டத்தரணியுமான தேவராசா வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகிகள், உறுப்பினர்கள், தொண்டர்கள், அடியவர்கள், சிறப்பு பிரதிகள் பெற வந்தவர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# வடக்கில் தகுதியற்றவர்களுக்கு பதவி வழங்கி கல்வியை அழிக்க முயற்சி – ஜே.வி.பி சந்திரசேகரன் குற்றச்சாட்டு!

வடக்கு கல்வியில் தகுதியற்றவர்களுக்கும் குற்றச்சாட்டு உள்ளவர்களுக்கும் உயர் பதவியை வழங்கி வடக்கு கல்வியை அழிக்கும் முயற்சிகள் இடம்பெற்றுவருவதாக தேசிய மக்கள் சக்தி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகரன் குற்றச்சாட்டினார்.

28-04-2024 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண ஊடக அமையத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குற்றம் சாட்டுகின்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு கல்வியில் ஊழல் மலிந்து காணப்படுகிறது குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்படும் அதிகாரிகளுக்கு தண்டனை வழங்கப்படாமல் பதவி உயர்வு வழங்கும் நடைமுறை வடக்கில் காணப்படுவது வடக்கு கல்வியை அழித்துவிடும் செயற்பாடாகவே பார்க்கிறேன்.

ஆசிரிய மற்றும் அதிபர்கள் இட மாற்றத்தில் முறைகேடுகள் இடம்பெறுகின்ற நிலையில் இடமாற்ற சபையின் அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன.

வன்னி ஓட்டி சுட்டான் பாடசாலையில் பாடசாலை வளங்கள் ஊழல் செய்யப்பட்ட நிலையில் குறித்த பாடசாலை அதிபருக்கு எதிராக எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் உள்ளது.

யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலை ஒன்றின் அதிபர் நிதி நிர்வாக விடையங்களில் முறைகேடுகளுடன் தொடர்பட்ட நிலையில் அவருக்கு தண்டனை வழங்கப்படாமல் உயர் பதவி ஒன்றில் அமர்த்துவதற்கான ஏற்பாடுகளை வடக்கு உயர் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கில் காணப்படும் நான்கு அமைச்சுகளில் தகுதியான செயலாளர்கள் இல்லாத காரணத்தினால் நிர்வாக ரீதியான முடிவுகள் எடுப்பதில் பிரச்சனைகள் காணப்படுகிறது.

தகுதியானவர்களை நியமிக்க வாய்ப்புகள் கிடைத்தும் அவர்களை ஒதுக்கி தமக்குத் தேவையான அலிபாபா திருடர்களை பதவியில் வைத்திருப்பதற்கு சிலர் முயற்சி செய்கின்றனர்.

வடக்கு ஆளுநர் இத்தகைய செயல்பாடுகள் இடம் பெறுவதை கண்டும் காணாமல் இருக்கிறாரா அல்லது அவரும் இத்தகைய செயல்பாடுகளின் பின்னணியில் உள்ளாரா என சந்தேகம் எழுகிறது.

ஆகவே வடக்கு கல்வி ஊழல்வாதிகளால் சீரழிந்து வருகின்ற நிலையில் வடமாகாண ஆளுநர் வேடிக்கை பார்க்காமல் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

கனடிய செய்திகள்
Canadian News

# "Uthayan INTERNATIONAL AWARDS FESTIVAL-2024" In Canada

## கனடாவில்
## "உதயன் சர்வதேச விருது விழா-2024"

அனைவரும் வருக! உலகின் பல நாடுகளிலிருந்தும் கனடாவிலிருந்தும் விருதுபெறும் வெற்றியாளர்களை வாழ்த்திச் செல்லுங்கள்.

இசை நடனம் ஆகியவையும் உங்களை மகிழவிக்க காத்திருக்கின்றன.

**அனுமதிச் சீட்டுக்களுக்கு: (416) 732-1608 அல்லது (647) 891-7725**

## "UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL-2024"

### Announcing the names of three Award Recipients from abroad.

## கனடாவில் "உதயன் சர்வதேச விருது விழா – 2024"

### வெளிநாடுகளிலிருந்து சிறப்பு விருதுகளைப் பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மூன்று விருதாளர்கள்.







**1. திருவள்ளுவர் சேதுராமன் - தமிழ்நாடு**

கவிஞர், எழுத்தாளர், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் நீண்ட கால செயற்பாட்டாளர்கள்.

*"உதயன் வாழ்நாள் சாதனையாளர் விருது 2024 - தமிழ்நாடு"*

**2. டத்தோ நாகராஜ் - Malaysia**

கல்வியாளர், சமூகப் பணியாளர், கல்வி நிறுவனங்களின் தலைவர் மற்றும் கொடையாளர்.

*"உதயன் வாழ்நாள் சாதனையாளர் விருது 2024 - மலேசியா"*

**3. ஆர்கேஎஸ் அருள்மொழித்தேவன் - பிரான்ஸ்**

தமிழ்த் தேசிய பற்றாளர். தமிழ் மொழி, தமிழிசை மற்றும் பண்பாடு தொடர்பான செயற்பாடுகளில் நீண்டகாலமாக பிரான்ஸ் நாட்டில் தொடர்ச்சியாக ஈடுபாடு கொண்டு உழைத்து வருபவர் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்பாளர்.

*உதயன் சிறப்பு விருது 2024 - ஐரோப்பா"*

இவர்களோடு நான்கு கனடா வாழ் விருதாளர்கள் 26-05-2024 ஞாயிற்றுக்கிழமையன்று கனடாவ-ின் ஸ்காபுறோ நகரில் நடைபெறவுள்ள உதயன் சர்வதேச விருது விழாவில் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

(416) 732-1608 அல்லது (647) 891-7725

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் இடம் பெற்ற சமூக அபிவிருத்திக்கான பல் கலாச்சார இளைஞயோரின் ஒன்றிணைவு நிகழ்வு



(02-05-2024)

கிராம அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் சமூக அபிவிருத்திக்கான பல் கலாச்சார இளைஞயோரின் ஒன்றிணைவு எனும் தொனிப்பொருளில் நிகழ்வு 02-05-2024 அன்று வியாழக்கிழமை மாந்தை மேற்கு பிரதேச சபை மைதானத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக மாந்தை மேற்கு உதவி பிரதேச செயலாளர், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர், நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது இளைஞர், யுவதிகளின் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்ற தோடு,வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டது.







# தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்வ தேர்த்திருவிழா

தெல்லிப்பழை காசி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்வத்தில் தேர்த்திருவிழா 02-05-2024 அன்று இடம்பெற்றது.

காலை 6.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமான பூசையைத் தொடர்ந்து காலை 7.30 மணிக்கு கொடித்தம்ப பூசையும், 8மணிக்கு வசந்தமண்டப பூசையும் இடம்பெற்று பஞ்சமுக விநாயகப்பெருமான் உள்வீதி நடன திருவுலாவுடன் தேரிலே ஆரோகணித்து அடியவர்களுக்கு அருள்பாலித்தார்.

கடந்த 24ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான வருடாந்த மகோற்சவமானது 03-05-2024 மாலை கொடியிறக்கத்துடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# யாழ்ப்பாணத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞர் சடலம் மீட்பு – மரணத்தில் சந்தேகம்!

01-05-2024 அன்று அதிகாலை 12.30 மணியளவில், சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு, கப்பப்புலம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இதன்போது அதே பகுதியைச் சேர்ந்த சிறீவரதன் சஞ்சிதன் (வயது 22) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞன் மேற்படி விலாசத்தில் உள்ள அவரது காதலியின் வீட்டுக்கு சென்று அங்கு உறங்கியதாகவும் பின்னர் 12.30 மணியளவில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் இந்த மரணம் குறித்து சந்தேகம் இருப்பதாக இளைஞனின் உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அந்தவகையில் சடலம் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# எரிக்சொல்ஹெய்ம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இடையே சந்திப்பு



**- ந.லோகதயாளன்**

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் தேசிய சுற்றுச்சூழல் ஆலோசகரும், இலங்கையின் முன்னாள் சமாதானத் தூதுவருமான எரிக்சொல்ஹெய்ம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இடையே கொழும்பில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

கொழும்பு ஹில்டன் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது இலங்கையின் தற்போதைய அரசியல் சூழல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான செய்திகள் தொடர்பாகவும், புலம்பெயர் தமிழ் மக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சரக வட்டாரங்கள தெரிவிக்கின்றன.

இச் சந்திப்பின் போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா:

"தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சனைகளுக்கும், அரசியல் பிரச்சனைகளுக்கும் சாத்தியமான தீர்வை பெற்றுத்தரக்கூடியவராக தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே இருக்கின்றார். அதை அவர் நிரூபித்தும் வருகின்றார்.

அந்த வகையில் தொடர்ந்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருப்பதே நாட்டுக்கு நன்மையாக அமையும் என்பதே எமது நிலைப்பாடாகும்".

இதேநேரம் காஸா விவகாரம் தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சனைக்கு எவ்வாறான தீர்வைக்கான முடியும் என்று தொடர்ந்தும் கூறிவருகின்றோம் என்பதையும் அதற்கு மாறாக பிரபாகரனின் போக்கு தொடர்ந்தால் 2009ஆண்டு முடிவையே எதிர்கொள்ள நேரிடும் என்று தான் 28 ஆண்டுகளுக்கு முன்னர் எரிக்சொல்ஹெய்ம் அவர்களுக்கு கூறியதை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நினைவூட்டினார்.

பல்வேறு தாக்கங்களுக்கு முகம்கொடுத்து தமது வாழ்வாதாரத்தை நடத்தும் கடற்றொழிலாளர்களுக்கு நோர்வே அரசின் உதவிகளைப் பெற்றுத்தந்து உதவுமாறும் எரிக்சொல்ஹெய்மிடம் கேட்டுக்கொண்டார்.

# இலங்கையில் "ஒரே நாடு ஒரே சட்டம்" செயல்படுகிறதா என்று முன்னாள் அதிகாரி கேள்வி

**- நடராசா லோகதயாளன்**

ஒரே நாடு ஒரே சட்டம் என்பது இலங்கையைப் பொறுத்தமட்டில் வெறும் காகிதத்திலேயே உள்ளது என தமிழர்கள் ஆண்டாண்டு காலம் கூறுவதனை அரசின் செயலே நிரூபணம் செய்வதாக வடக்கில் நீண்டகாலம் நிர்வாக சேவையில் உள்ள மூத்த அரச அதிகாரி ஒருவர் தெரிவிக்கின்றார்.

நிர்வாக அதிகாரி தற்போதும் பணியில் இருப்பதனால் தனது பெயரை தவிர்க்குமாறு கோரியதன் பெயரில் பெயர் பதவி நீக்கபட்டுள்ளது.

தமிழர்கள், தமிழர் பிரதேசம் என்றால் எப்பவுமே இரண்டாம் பட்சம் எனக் கூறும்போது அரசு தொடர்ந்தும் மறுத்து வருகின்றது. இருப்பினும் மீண்டும், மீண்டும் அரசு தமிழர் பிரதேசம் வேற்றுக் கண் கொண்டே பார்க்கப்படுகின்றமை நிரூபணமாகின்றது.

அதாவது இலங்கையின் 25 மாவட்டங்களில் 23 மாவட்டங்களிற்கு நிரந்தர அரச அதிபர்கள் உள்ளனர். ஆனால் வடக்கில் இரு நிர்வாக மாவட்டங்களான யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிற்கு மட்டும் மாவட்ட அரச அதிபர்கள் இல்லை,

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் 2024ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதியும் யாழ்ப்பாணம் அரச அதிபர் மார்ச் மாதம் 8 ஆம் திகதியும் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டனர். இதன்போது மாவட்டத்தில் பணியாற்றும் மாவட்டங்களின் மேலதிக அரச அதிபர்கள் தமது பணியுடன் அரச அதிபர் பதவியினையும் மேலதிகமாக நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இருந்தபோதும் இரு மாவட்டங்களிற்கும் நிரந்தர மாவட்ட அரச அதிபர்கள் இன்றுவரை நியமிக்கப்படவில்லை.

நிர்வாக சேவையில் விசேட தரத்தைச் சேர்ந்தவர்களே மாவட்ட அரச அதிபர்களாக நியமிக்கும் நிலையில் ஆளும் கட்சிக்கு விசுவாசமான விசேட தரத்தைச் சேர்ந்தவர்கள் இன்மைதான் இதற்கு காரணமா எனவும் வினாவப்படுகின்றது.

இலங்கையில் விரைவில் தேர்தல் ஒன்று அறிவக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் சூழலில் அதுவரை காலம் கடத்தி தேர்தலின்போதும் பதில் கடமை அரச அதிபர்கள் மூலம் சாதிக்க முடியும் என அரச விசுவாசிகள் கருதுகின்றனரோ என்ற வினாவிற்கு பதில் தேட முடியவில்லை.

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற நிர்வாக சேவை விசேட தரத்திற்கான அதிகாரிகள் தேர்வில் இருந்தும் 41 அதிகாரிகள் விசேட தரத்திற்கு தேர்வாகியுள்ளனர். இவர்களில் ஐவர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அதிகாரிகளாக இருக்கும் நிலையிலும் அரச அதிபர் நியமனம் மட்டும் வேண்டும் என்றே காலம் கடத்தப்படுகின்றது. இவ்வாறு காலம் கடத்தப்படுவதற்கு இந்த இரு மாவட்டத்திலும் ஆதிக்கம் செலுத்தும் அமைச்சரே காரணம் என அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் இரு மாவட்டங்களில் தற்போது கடமை நிறைவேற்றும் அரச அதிபர்களாக பணியாற்றுபவர்களில. ஒருவர் அமைச்சர் மட்டுமே செய்வதனால் வேறு அரச அதிபர்கள் நியமிக்கப்பட்டால் அவர்கள் சட்டத்தின் பிரகாரம் அல்லது சுற்று நிரூபத்திற்கு உட்பட்டதனை மட்டுமே மேற்கொள்வர் என அமைச்சர் கருதுவதனால் நிரந்தர அரச அதிபர் நியமிக்கத் தடையாக இருப்பதாகவே கருதப்படுகின்றது என நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinic canada.com



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியாவில் வெளியிடப்பட்ட ஒரு கூட்டுத் தீர்மானம்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



ஜனாதிபதித் தேர்தலில் ஒருதமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்துவது என்ற கோரிக்கை அடுத்த கட்ட வளர்ச்சியைப் பெற்றிருக்கின்றது. வவுனியாவில் வாடி வீட்டில் கூடிய வடக்கு கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூகங்கள் ஒரு கூட்டுஅறிக்கையை வெளியிட்டிருக்கின்றன.

அது ஒரு முக்கியமான சிவில் சமூகச் சந்திப்பு. காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 4 மணி வரை நிகழ்ந்த அச்சந்திப்பில் வடக்கு கிழக்கில் இருந்து 50 சிவில் சமூகப் பிரதிநிதிகள் பங்கு பற்றினார்கள்.

மதத் தலைவர்கள், கருத்துருவாக்கிகள், பாதிக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்களாகிய வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பின் பிரதிநிதிகள், அரசியல் கைதிகளுக்கான அமைப்பாகிய குரலற்றவர்களின் குரல் அமைப்பின் பிரதிநிதிகள், வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவ அமைப்புகள், வெளிநாட்டுத் தூதரகங்களோடு தொடர்ச்சியாக சந்திப்புகளை மேற்கொண்டு வரும் குடிமக்கள் சமூகங்கள், மயிலத்த மடுவில் மேச்சல் தரையை மீட்பதற்காக போராடும் அமைப்பின் பிரதிநிதிகள்... முதலாக பல்வேறு வகைப்பட்ட குடிமக்கள் சமூகங்களும் சந்திப்பில் பங்குபற்றினர்.

மிகக்குறிப்பாக பொங்கு தமிழ் எழுச்சியின் முக்கியஸ்தர்கள், எழுத தமிழ் எழுச்சிக்குப் பின்னால் இருந்து உழைத்தவர்கள், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான அமைப்பின் இணைத் தலைவர்கள் என்று, தமிழ்ப் பரப்பில் நிகழ்ந்த மூன்று எழுச்சிகளின் பின்னால் நின்று உழைத்த பிரதிநிதிகளும் அங்கே வந்திருந்தார்கள் என்பது ஒரு சிறப்பம்சம். இம்மூன்று மக்கள் எழுச்சி அமைப்புகளின் முக்கியஸ்தர்கள் அவ்வாறு ஒரு சந்திப்பில் ஒன்றுகூடியமை என்பது கடந்த 15 ஆண்டுகளில் இதுதான் முதல் தடவை.

கிட்டதட்ட 3 மணித்தியாலக் கலந்துரையாடலின் பின் குடிமக்கள் சமூகங்கள் அனைத்தும் இணைந்து ஒரு கூட்டு அறிக்கையை வெளியிட்டன. அந்த அறிக்கை பின்வருமாறு கூறுகிறது...

“தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வதும் சிந்திப்பதும் செயற்படுவதும் காலத்தின் தேவை என்ற அடிப்படையில் 30-04-2024 அன்று வவுனியா வாடிவீடு விடுதியில் ஒன்றுகூடிய தமிழர் தாயகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் சமூகத்தினர் பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டனர்.

1. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமது இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் பிரயோகிப்பதற்கான ஒரு களமாக ஜனாதிபதி தேர்தலை கையாள்வது.

2. ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி தேர்தலை, ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து அத்தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களுக்கான பொது வாக்கெடுப்பாக கையாள்வது.

3. அதற்கு அமைய ஒரு தமிழ் பொது வேட்பாளரை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துவது.

4. அதற்காக சிவில் சமூகமும் தமிழ் தேசிய கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது.

5. தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாசைகளில் ஒன்றான இறைமையுடனான சுயநிர்ணய உரிமையை வெற்றி கொள்வதற்கான பொருத்தமான எதிர்கால கட்டமைப்புக்களை நோக்காகக் கொண்டு செயல்படுவது...”. என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆண்டுகளில் குடிமக்கள் சமூகங்களால் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கைகளில் இது மிகவும் முக்கியமானது. ஏனென்றால் அது தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை அழுத்தமாக வலியுறுத்துகின்றது. அந்த அடிப்படையில் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்றும் கூறுகின்றது. ஜனாதிபதி தேர்தல் எனப்படுவது ஸ்ரீலங்காவின் ஜனாதிபதியைத் தெரிவதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் அதனை நிராகரித்த மேற்படி கூட்டறிக்கையானது அதேசமயம் அந்த தேர்தலை தமிழ் மக்கள் தமது உச்சமான கோரிக்கைகளை முன் வைப்பதற்குரிய மறைமுக பொதுசன வாக்கெடுப்பாக நடைமுறையில் கையாள முடியும் என்று நம்புகின்றது.

இவ்வாறு சிவில் சமூகங்கள் தங்களுக்கு இடையே ஒரு பொது நிலைப்பாட்டை எடுத்தபின், அடுத்த கட்டமாக அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது என்று தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு பொது கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் பொருட்டு கட்சிகளோடு உரையாடுவதற்கு என்று ஒரு குழு உருவாக்கப்பட்டது. அக்குழு கட்சிகளுக்கும் சிவில் சமூகங்களுக்கும் இடையிலான சந்திப்பை ஒழுங்குபடுத்தும்.

பொதுக் கட்டமைப்பானது சிவில் சமூகங்களையும் அரசியல் கட்சிகளையும் கொண்டதாக அமையும். பொதுக் கட்டமைப்பு ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்துவதற்கு தேவையான குழுக்களை உருவாக்கும். ஒரு பொதுத் தமிழ் வேட்பாளர் யார் என்பதை தீர்மானிப்பதற்கான ஒரு உபகுழு, தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரிப்பதற்கான உபகுழு,நிதி விவகாரங்களை கையாள்வதற்கான உபகுழு, பொதுத் தமிழ் வேட்பாளர் என்ற தெரிவை ஏற்றுக் கொள்ளாத ஏனைய தரப்புக்குளோடு உரையாடுவதற்கும் தென்னிலங்கையில் உள்ள கட்சிகளோடு உரையாடுவதற்கும் ஓர் உபகுழு.. என்று வெவ்வேறு உபகுழுக்கள் உருவாக்கப்படும். அதாவது ஒரு தமிழ் பொது வேட்பாளரை நியமிப்பதற்கு கட்டமைப்பு ரீதியாக சிந்திக்கப்படுகின்றது என்று பொருள்.

தமிழ் பொது வேட்பாளர் எனப்படுகின்றவர் தமிழ் பொது நிலைப்பாட்டின் குறியீடு. தமிழ் பொது நிலைபாடு எனப்படுவது ஒரு விதத்தில் தமிழ் ஐக்கியம் தான். தமிழ் ஐக்கியம் என்பது இங்கு தமிழ் கட்சிகளின் ஐக்கியம் என்பதைக் கடந்து கட்சிகளும் குடிமக்கள் சமூகங்களும் இணைந்த ஒரு கட்டமைப்பாக சிந்திக்கப்படுகின்றது. கடந்த 15 ஆண்டுகளில் தமிழ் மக்கள் மத்தியில் நிகழ்ந்த எல்லா எழுச்சிகளும் அவ்வாறு சிவில் சமூகமும் அரசியல் சமூகமும் இணைந்த ஒரு கட்டமைப்புக் கூடாகவே சிந்திக்கப்பட்டது. எழுக தமிழாகட்டும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரிழ்ச்சியாகட்டும் ஏனைய எந்த ஒரு பெரிய மக்கள் எழுச்சியாக இருந்தாலும், அங்கே தனியாகக் கட்சிகள் அதனை முன்னெடுக்கவில்லை. தனிய சிவில் சமூகங்களும் அதனை முன்னெடுக்கவில்லை. கடந்த 15 ஆண்டுகளிலும் வெற்றி பெற்ற எல்லாப் பேரெழுச்சிகளும் சிவில் சமூகங்களும் அரசியல் சமூகமும் இணைந்து பெற்ற வெற்றிகள்தான்.

அப்படித்தான் கடந்த 15 ஆண்டுகளுக்குள் ஐநாவுக்கு அனுப்பப்பட்ட கூட்டுக் கடிதம் உள்ளிட்ட ஐக்கியப்பட்ட பெரும்பாலான நடவடிக்கைகள் கட்சிகளும் சிவில் சமூகங்களும் இணைந்து முன்னெடுத்த நடவடிக்கைகள் தான். இதை இன்னும் சரியான வார்த்தைகளில் சொன்னால், அரசியல்வாதிகளும் சிவில் சமூகங்களும் இணைந்த போதுதான் வெற்றிகள் கிடைத்தன. அந்த அடிப்படையில் தான் இப்பொழுதும் அவ்வாறான ஒரு வெற்றியை நோக்கி சிந்திக்கப்படுகின்றது.

இந்தக் கட்டமைப்பு வெற்றி பெறுமாக இருந்தால் இது ஜனாதிபதி தேர்தலுக்கான ஒரு கட்டமைப்பு என்பதைக் கடந்து தமிழ் பொது விருப்பத்தை வெளிப்படுத்தும் ஒரு பொருத்தமான அரசியல் தளமாக மாற்றப்பட வேண்டும் என்ற விருப்பமும் மேற்படி கூட்டறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது. அதன்படி எதிர்காலத்தில் தமிழ் அரசியலை தீர்மானிப்பதற்கு தேவையான ஒரு பலமான மக்கள் அமைப்புக்குரிய பொருத்தமான கட்டமைப்பாக அது வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் உண்டு.

கடந்த 15 ஆண்டுகளிலும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் பேரவை தோன்றியது. தமிழ் மரபுரிமைப் பேரவை தோன்றியது. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரெழுச்சி இயக்கம் தோன்றியது. ஆனால் இவை எவையுமே தொடர்ச்சியாக வளர்த்தெடுக்கப்படவில்லை. இவை எதையுமே ஒரு பலமான மக்கள் அமைப்புக்களாக அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளுக்கு போகவில்லை. இவை எதையுமே தேர்தல் மைய அரசியலைக் கடந்த ஒரு வெகுசன அரசியலை முன்னெடுக்கும் பொருத்தமான ஏற்பாடுகளாக கூர்ப் படையாவில்லை. இந்த மூன்று கட்டமைப்புகளின் எழுச்சியில் இருந்தும் வீழ்ச்சியிலிருந்தும் அல்லது போதாமைகளில் இருந்தும் கற்றுக்கொண்டு ஒரு புதிய பொருத்தமான கட்டமைப்பை உருவாக்குவதற்கான முதல் அடி வைப்பாக மேற்படி கூட்டறிக்கையில் கூறப்பட்டிருக்கும் பொதுக் கட்டமைப்பை எடுத்துக் கொள்ளலாம்.

கடந்த 15 ஆண்டுகளிலும் கட்சி அரசியல் எனப்படுவது வளர்ச்சியாக இல்லை. தேய்மானமாகத்தான் இருக்கின்றது. பெரிய கூட்டுக்கள் உடைந்து சிறு கூட்டுகள் உருவாகி வருகின்றன.கூட்டுக்கள் உடைந்து உடைந்து உருவாகும் தனி கட்சிகளும் கூட பின்நாளில் தங்களுக்குள் உடைகின்றன. அதாவது கடந்த 15 ஆண்டு கால கட்சி அரசியல் எனப்படுவது உடையும் ஒரு போக்காக அல்லது சிதறும் ஒரு போக்காகத்தான் காணப்படுகின்றது. வளரும் ஒரு போக்காக அல்லது திரளும் ஒரு போக்காக இல்லை.

எனவே இந்த பாரதூரமான வெற்றிடத்தின் பின்னணியில் சிவில் சமூகங்களையும் இணைத்து ஒரு புதிய வளர்ச்சிக்கு போக வேண்டிய ஒரு தேவை வலிமையாக மேலெழுகின்றது. ஜனாதிபதி தேர்தலில் பயன்படுத்தி அவ்வாறான ஒரு கட்டமைப்பின் கருநிலைக் கட்டமைப்பை உருவாக்கினால் அது எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப ஒரு பொருத்தமான வளர்ச்சியை அடையும் என்ற எதிர்பார்ப்பு சிவில் சமூகங்களிடம் காணப்படுகின்றது.

கடந்த 15 ஆண்டுகளிலும் பெரிய கட்சிகள் பலமாக இருக்கும் பொழுது அல்லது பெரிய கூட்டு பலமாக இருக்கும் பொழுது சிவில் சமூகங்களை மதிப்பது குறைவு. 2014 ஆம் ஆண்டு மன்னாரில் நடந்த சந்திப்பு ஒன்றில் சம்பந்தர் அப்போதிருந்த மறைந்த ஆயர் ராயப்பு ஜோசெ்.ப் அவர்களை நோக்கி சொன்ன பதில் அதைத்தான் காட்டுகிறது. பலமாக இருக்கும் கட்சியின் தலைவர் என்ற தோரணையில் அவர் “பிஷப் நீங்கள் சொல்லுவதை சொல்லுங்கோ நாங்கள் தான் முடிவெடுக்கிறது” என்று திமிராகச் சொன்னார்.

ஆனால் 2020ல் கூட்டமைப்பின் ஏகபோகம் உடைந்து அதன் ஆசனங்கள் வெளியே போனபோது கூட்டமைப்பு இறங்கி வந்தது. அதன் விளைவு தான் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாசம் ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்ட ஒரு கூட்டுக் கடிதம். அதாவது கட்சிகள் பலமாக இருக்கும் போது அல்லது கூட்டுக்கள் பலமாக இருக்கும் பொழுது அவர்கள் சிவில் சமூகங்களை மதிப்பதில்லை. ஆனால் கட்சிகள் பலவீனமடையும் போது சிவில் சமூகங்கள் கட்சிகளின் மீது தார்மீக தலையீட்டைச் செய்யக் கூடியதாக இருக்கின்றது. அப்படி ஒரு கட்டம் இப்பொழுது தமிழ் அரசியலில் ஏற்பட்டிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தல் எனப்படுவது அரசாங்கத்தால் ஏற்படுத்தித் தரப்பட்ட ஒரு வாய்ப்பு. அதை தமிழ் தரப்பு தனது நோக்கு நிலையில் இருந்து கையாள முடியும். இதை கலித்துவமாகச் சொன்னால், அரசாங்கம் திறந்து விட்டிருக்கும் ஒரு விளையாட்டு மைதானத்தில் தமிழ் மக்கள் தங்களுடைய விளையாட்டை எப்படி விளையாடப் போகிறார்கள் என்பதைத் தீர்மானிப்பது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பொது வேட்பாளரா? அல்லது பகிஷ்கரிப்பு. இரண்டும் ஒரு பிள்ளியில்தான் நிற்கின்றன. இதில் எது சரியானது என்பதை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் என்கிறார் கலைத்துறை பீடாதிபதி பேராசிரியர் ரகுராம்



ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரா? அல்லது பகிஷ்கரிப்பு என விஞ்ஞான ரீதியாக அல்லது அரசியல் ரீதியாக ஆராய்ந்து எது மிக சரியானது என முடிவெடுக்க வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப் பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் தெரிவித்துள்ளார். பொது வேட்பாளர், பகிஷ்கரிப்பு இரண்டும் ஒரு புள்ளியில்தான் சந்திக்கின்றன. இதில் எது மிக சரியானது என்பதை விஞ்ஞான பூர்வமாக அரசில் பூர்வமாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய ஒரு கட்டாயத்தல் நாங்கள் இப்போது இருக்கின்றோம்.

எந்தக் கட்டத்திலும் சிங்கள அரசியல் சக்திகளை, சிங்கள அரசியல்வாதிகளை அடுத்து வரக்கூடிய ஆளும் தரப்புக்களை நாங்கள். நம்பவே முடியாது என்பதை அன்றிலிருந்து இன்று வரை வரலாறு எங்களுக்கு திரும்பி திரும்பி திரும்பி சொல்ல வந்தாலும் கூட அதை மறுத்து நாங்கள் குறுக்கு ஓட்டம் ஓடுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறோம் என்று யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மாமனிதர் தராக்கி அவர்களது 19வது நினைவேந்தலில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இங்கு இருக்கக்கூடிய தமிழ் ஆங்கில பத்திரிகைகளுக்கு அதிகமாக எங்கெங்கு தளங்கள் கிடைக்கிறதோ அங்கெல்லாம். எங்களுடைய நியாயத்தை மிக அற்புதமான புலமைத்துவ எழுத்தோடு. அவர் சொல்லி வந்தார்.

தமிழ் நெற் ஆசிரியர் கழாமில் அவர் இருந்தபோது வரைந்த கட்டுரைகள், தமிழ் நெற் இணையத் தளத்தின் ஊடாக அவர் சொல்லிய செய்திகள் மிக முக்கியமானவை.

நாங்கள் பழைய செய்திகளை எடுத்து பார்க்கும்போது தேவையான உஷாத்துணை தேடும் போதும் எல்லாம் சிவராம் அண்ணனுடைய கட்டுரைகள். இன்றைக்கும் எங்களுக்கு உதவிக் கொண்டிருக்கின்றன.

சர்வதேச அரசியலை உள்ளக அரசியலை அவர் தெளிவாக புரிந்திருந்துவைத்திருந்தார். தெற்கு அரசியலையும் அவர் தெளிவாகப் புரிந்திருந்தார். அதற்கு தான் இந்த நினைவு மீட்டலின் ஒரு கடைசி பகுதியாக நான் வரவேண்டும்.

தெற்கு அரசியலில் அவருக்கு ஆரம்பத்திலை ஒரு நாட்டம் இருந்தது. தெற்கு அரசியலில் அவருக்கு இருந்த தொடர்புகள், குறிப்பாக ஆரம்ப காலகட்டத்தில் அவர் சார்ந்த அமைப்பு ஜேவிபியுடன் கொண்டிருந்த தொடர்புகள் வழியாக தெற்கிலே எங்களுடைய போராட்டத்தின் நியாயப் பாடுகளை, எங்களுடைய போராட்டத்தின் வலுவை, செல்நெறியை எடுத்துச் செல்லலாம் என்ற ஒரு மிகப்பெரிய ஆர்வம் அவருக்கு இருந்தது.

அதனை அவர் தனது எழுத்துக்களின் மூலம் எழுதி இருந்தார். பல சந்திப்புகளிலும் அவர் எடுத்துரைத்திருந்தார். புத்திஜீவிகளுடனான சந்திப்புகள், தெற்கு அரசியல் கட்சிகளுடனான சந்திப்புகள், சமூக செயற்பாட்டாளர்களுடனான சந்திப்புகள், என்று பல சந்திப்புக்களையும் அவர் நிகழ்த்தியிருந்தார்.

அவருக்கு ஏராளமான சிங்கள நண்பர்கள் இருந்தார்கள். பத்திரிகை நண்பர்கள். ஊடகவியலாளர்கள், அரசியல் கட்சிகள் என்று பலர் இருந்தார்கள். ஆனால் ஒரு கட்டத்திலே சிவராம் அவர்கள் ஒரு மிகத் தெளிவான முடிவுக்கு வந்தார்.

சிங்களவர்களை நாம் மாற்ற முடியாது. சிங்கள அரசியல்வாதிகளை நாம் மாற்ற முடியாது, சிங்கள அரசியல் சூழலை நாம் மாற்ற முடியாது. என்ற ஒரு தெளிந்த நிலைப்பாட்டிற்கு அவர் வந்தார்.

அது புத்திஜீவிகளாக இருக்கலாம். அரசியல் கட்சிகளாக இருக்கலாம். அல்லது சமூக செயற்பாட்டாளர்களாக இருக்கலாம். அவர்களுக்கு ஏதோ ஒரு வரையறை அவர்களுக்குள் ஆழமாக. அவர்களுக்குள் இறங்கியிருக்கக்கூடிய கருத்தியல் தளத்திற்க்கு அப்பாலே அவர்கள் எங்களுக்காக சிந்திப்பார்கள், அல்லது எங்களுடைய நியாயங்களை ஏற்றுக் கொள்வார்கள் என்பது எல்லாம் ஒரு பொய்க் கதை என்பதை அவர் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியிருநதார். இன்றைக்கு நாங்கள் அந்த சந்தியில் தான் மீண்டும் வந்து நிற்கின்றோம்.

எந்தக் கட்டத்தில் சிங்கள அரசியல் சக்திகளை, சிங்கள அரசியல்வாதிகளை அடுத்து வரக்கூடிய ஆளும் தரப்புக்களை நாங்கள். நம்பவே முடியாது என்பதை அன்றிலிருந்து இன்று வரை வரலாறு எங்களுக்கு திரும்பி திரும்பி திரும்பி சொல்ல வந்தாலும் கூட அதை மறுத்து நாங்கள் குறுக்கு ஓட்டம் ஓடுவதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறோம். உண்மையில் சிவராம் அவர்களுடைய நினைவு மீட்டலிலே நான் சொல்லக்கூடிய விடயமும் அதுதான்.

எங்களை விடவும் சிங்கள மக்களுடன் சிங்கள அரசியல் கட்சிகளும் சிங்கள அரசியல் தலைவர்கள் மிக ஆழமான, நெருக்கமான உறவைக் கொண்டு இருந்தவர். சந்திப்புகளை நடத்தியிருந்தவர்.

அவர் பெற்ற. அனுபவம் என்பது. சிங்கள அரசியல் சக்திகளை அல்லது சிங்கள ஆளும் தரப்புக்களையோ அல்லது அடுத்த வரப்போகுன்ற நம்பிக்கை தரக்கூடியதாக நாங்கள் கற்பிதம், கற்பனை செய்கின்ற விடயங்களையோ அவர் நம்ப தயாராகவே இல்லை. இதுதான் இன்றைக்கு எங்களுக்கு கிடைக்கின்ற செய்தி.

சிங்களத்தில் இன்றைய அரசியல் சூழலோடு சிவராம் அண்ணனை நாங்கள் மீட்டுப் பார்க்கின்றபோது அல்லது சிவராம் அண்ணனை ஒரு உசாத் துணையாக கொண்டு பார்க்கின்ற போது எங்களுக்கு கிடைக்கின்ற செய்தி நாங்கள் யாரையும் நம்ப முடியாது. எவரையும் நம்ப முடியாது யாருக்காகவும் எங்களுடைய பெறுமதியான வாக்குகளை நாங்கள் அளிக்கவும் முடியாது.

ஆகவே எங்களுக்கு இருக்கக்கூடிய தேரிவுகள் எது என்பதை, எது சரியான தெரிவு என்பதை அது பொது வேட்பாளர் இருக்கலாம், அல்லது நாங்கள் வாக்களிக்காமலே ஒதுங்கி இருக்கலாம் அல்லது இந்த இரண்டு தெரிவுகளிலே எது சரியானது என்பதை நாங்கள் விஞ்ஞான ரீதியாக. அறிவியல் பூர்வமாக செய்யவேண்டும்.

உண்மையில் இந்த இரண்டு நிலைப்பாடுகளுமே ஒரு ஒருமித்த புள்ளியில்தான் இருப்பதை தான் நான் உணர்ந்து பார்க்கிறேன்.

அதாவது சிங்கள அரசியல் சக்திகளை நாங்கள் நம்பவே முடியாது. இந்த தேர்தல் இருந்து பூரணமாக நிராகரிப்பதாக அல்லது விலகிக் கொள்வதாக இருந்தாலும் சரி.

ஒருவரை வேட்பாளராக நாங்கள் தேடுவதாக இருந்தாலும் சரி, இந்த இரண்டு நிலைப்பாடுகளும் ஏதோ ஒரு வகையில் ஒரு புள்ளிகள் தான் சந்திக்கின்றன. அது தெற்கு அரசியலை நாங்கள் நம்ப முடியாது.

எதிர்காலத்துக்காக நாங்கள் எங்களை பணயம் வைக்க முடியாது என்பதைத்தான் சொல்கின்றன இந்தக் கட்டத்தில்.

எது சரி என்பதை நாங்கள் கட்சி அரசியல் சார்ந்து இல்லாமல்.மக்கள் நலனை முன்னிறுத்தி ஒரு விஞ்ஞான பூர்வமாக அரசியல் அறிவுபூர்வமாக நாங்கள் தேர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

ஆகவே இதற்கு மேலாக இந்த இடத்திலே எதனையும் சொல்ல விரும்பவில்லை இந்த இடத்திலே. நான் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். நிச்சயமாக அது சிங்கள அரசியல் சக்திகளுக்காக நாங்கள் எப்போதுமே ஆதரவாக இருக்க முடியாது அது ஒரு தவறான வழிகாட்டலாக தான் இருக்கும் என்கின்ற சிவராம் அவர்களுடைய பட்டறிவை நாங்கள் மீண்டும் இந்த நினைவு கூரலிலே எங்கள் மனங்களில் ஏற்றுக்கொண்டு.

நாங்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்காக நாங்கள் ஒரு துரிதமாக ஒரு முடிவு எடுக்க வேண்டிய நிலையில் தான் இருக்கிறோம்.


அந்த வகையில் சிவராம் அவர்கள் என்றைக்கும் எங்களுக்கு ஒரு உசாத் துணையாக இருப்பார் என்கின்ற. அவளுடைய அரசியல் பாகம் எங்களுடைய போராட்ட பாதை. கற்றுத் தந்திருக்க கூடிய பல் பரிமாணம் மிக்க ஒரு ஊடக ஆளுமை. இவற்றுக்கெல்லாம் அவர்தான் ஒரு முழு உதாரணமாக எங்கள் கண் முன் நிற்கின்றார், அவரை வணங்கிவரவேற்கின்றோம். என்றார்.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தோடு தன்னை இதயசுத்தியோடு இணைத்துப் பயணித்தவர் அண்ணல் ஈழவேந்தன் அவர்கள்"

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தி



உலகெங்கும் பரந்து வாழும் எமது தமிழ் பேசும் உறவுகள் மத்தியில் ஒரு நேர்மையான அரசியல்வாதியாகவும் தமிழ்ப் பற்றும் மன உறுதியும் கொண்டவராகவும் அச்சம் தவிர்த்து வெளிப்படையாக தனது கருத்துக்களை பொது மேடைகளில் பகிர்ந்து கொள்ளும் துணிச்சல் கொண்டவராகவும் விளங்கிய ஈழவேந்தன் ஐயா அவர்கள் கனடாவில் காலமானார் என்ற செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தோம். அவரது கடந்த கால செய்ற்பாடுகள் அனைத்தும். தமிழ்ப் பற்றும் தமிழ்த் தேசிய உணர்வும் கொண்டவர்களால் நன்கு கவனிக்கப்பெற்று. அனைவராலும் நேசிக்கப்பெற்றவராக விளங்கினார்.

அத்துடன், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தோடும் தன்னை இதயசுத்தியோடு இணைத்துப் பயணித்தவர் அண்ணல் ஈழவேந்தன் அவர்கள். உலகில் பல நாடுகளில் நடைபெற்ற இயக்கத்தின் மாநாடுகளில் எவ்வித சோர்வும் இன்றி உற்சாகமாகக் கலந்து கொண்டு பயனுள்ள உரைகளை ஆற்றி உலகத் தமிழ் அறிஞர்களின் பாராட்டுக்களைப் பெற்றவர் ஈழவேந்தன் ஐயா என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரது அறிக்கை பின்வருமாறு தொடர்கின்றது:

"இலங்கைப் பாராளுமன்றத்தில் மிகவும் ஆணித்தரமாக தனது கருத்துக்களைப் பகிர்நந்து கொண்ட அவரை அவரது சக தமிழ் அரசியல் சகாக்கள் கூடஒதுக்கி வைத்திருந்தது உலகத் தமிழர்களுக்கு மனவேதனையைத் தந்த ஒரு விடயமாக விமர்சிக்கப்பட்டு வந்தது. எனினும் தனது உறுதியான கொள்கைகளை எந்த இடத்தில் முன்வைத்து உரையாற்றுவதை அவர் தொடர்ச்சியாக கடைப்பிடித்து வந்தார்.

பின்னர் தமிழ்நாட்டில் தங்கியிருந்து எமது மக்கள் நலன் சார்ந்த அரசியல் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டிய அவரை தமிழகத்தில் தொடர்ந்து தங்கியிருக்க விடாமல், இந்திய உளவுத்துறை அவரை நாடுகடத்தியது. தொடர்ந்து கனடாவிற்கு பயணித்த அவர் அங்கும் நிம்மதியற்ற வாழ்க்கையையே மேற்கொண்டார். இவ்வாறான இக்கட்டானை நிலையிலும் மனம் தளராது நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினராகச் செயற்பட்டு கனடிய தேசிய அரசியல்வாதிகள் மத்தியில் எமது தாயக மக்கள் தொடர்பாகவும் இலங்கையில் 2009 வரை இடம்பெற்றது. இனப்படுகொலையே என்பதை அழுத்திச் சொல்லிக் கொண்டிருந்த அவரது உதடும் நாக்கும் தற்போது அடங்கிவிட்டன.

அன்னாரது இழப்பு தமிழ் மக்களின் இருப்பிற்கு ஒரு சவாலாகவே அமைந்து விட்டது. எனவே தன்னலன் பாராது எமது மக்களுக்காக உழைத்த ஈழவேந்தன் ஐயாவின் இழப்பை எமது இனத்தின் இழப்பாக எண்ணி அவரது இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நாம் திரண்டு சென்று கலந்து கொள்ள வேண்டும்"

இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டும்

## - தொழிலாளர் தின செய்தியில் தமிழ் அரசு கட்சியின் மாவட்ட தலைவர் எஸ்.குகதாசன்

தமிழ் மக்கள் தங்களுடைய உரிமைகளை பெற ஒன்று பட வேண்டும் எனவும் தோட்டத் தொழிலாளர்களுக்கான உரிமை முழுமையாக வழங்கப்பட வேண்டும் எனவும் இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட தலைவர் சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினமான 01-05-2024 ஊடகங்களுக்கு விடுத்துள்ள மே தினச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்தொடர்ந்தும் தெரிவிக்கையில், 19ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் கைத்தொழில் புரட்சியில் குடிசைக் கைத்தொழில் ஆடைத் தொழில்சாலைகளாக மாறின மக்கள் வீடுகளில் வேலை செய்வதற்கு பதிலாக தொழிற்சாலைகளில் வேலை செய்தார்கள் இதன் போது அமெரிக்காவில் புரட்சி ஏற்பட்டது இதில் நால்வர் கொலை செய்யப்பட்டார்கள்.

மார்க்ஸ் இன் உடைய கருத்துப்படி ஓய்வு எட்டு மணி நேர வேலை தேவை என கூறியுள்ளார். அடக்கப்படும் தமிழ் மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் உரிமைகளை பெற தமிழினம் ஒன்று பட வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார்.

Canadian Tamil Sankam
PADIMURAI TAMIL FEDERATION
World Tamil Teachers' Organisation
ABC
Historical and Cultural Studies
UNIVERSITY OF TORONTO
SCARBOROUGH

15-ஆம் உலகத் தமிழாசிரியர் மாநாடு
தமிழக அரசின் கல்விக்கான விருது - 2023



தமிழக அரசினால் நடத்தப்படும் அயலகத்தமிழர்களின் மாநாடானது தைமாதம் 11, 12 ஆம் திகதிகளில் சென்னையிலில் நடைபெற்றது. அவ்வேளையில், 2023 ஆம் ஆண்டின் கல்விக்கான தமிழக அரசின் விருது படிமுறைத்தமிழ் ஒன்றியத்தின் தலைவரான அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த திரு. முருகேசு பரமநாதன் அவர்களுக்குத் தமிழக முதல்வர் திரு. மு. க. ஸ்ராலின் அவர்களால் வழங்கிச் சிறப்பிக்கப் பட்டது. படிமுறைத்தமிழ் ஒன்றியம் என்பது, படிமுறைத்தமிழ் எனும் கற்பித்தல் முறையைப் பின்பற்றி உலகெங்கும் தமிழ்மொழியைக் கற்பிக்கும் பாடசாலைகளின் கூட்டமைப்பாகும். இக்கற்பித்தல் முறையின் நிறுவனர் கனடாவைச் சேர்ந்த சித்தம் அழகியான் சு. இராசரத்தினம் என்பது குறிப்பிடத்தக்கது. உடன் இருப்போர் திரு. லோகன்கணபதி MPP, செல்வம்அடைக்கலநாதன் MP, அமைச்சர் செஞ்சி மஸ்த்தான், ஆளுனர் செந்தில் தொண்டமான்

- உலகின் பல நாடுகளிலும் தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களின் சங்கமம்.
- அவுஸ்ரேலியா, மலேசியா, பிசி, சிங்கப்பூர், தமிழ்நாடு, மொரிசியஸ், தென்ஆபிரிக்கா, கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளின்... ஆசிரியர்கள் பங்குபற்றும் ஆய்வரங்கம்.

தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
இடம் – ரொராண்டோ பல்கலைக் கழகம், ஸ்காபுரோ வளாகம்
1265 Military Trail, Toronto, ON
காலம் - 2024 யூன் 1, 2, 3
நேரம் - 9 AM முதல் 9 PM வரை
மேலதிக விபரங்களை அறிய
wtcc@padimuraitamil.com padimuraitamil.com 416-821-5773 | 416-843-9514

இலங்கை செய்திகள் Sri Lanka News

# ஜனாதிபதி வேட்பாளர் பட்டியல் அறிவித்த பின்னர் யாரை ஆதரிப்பது என முடிவு. இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்



ஜனாதிபதி வேட்பாளர் பட்டியல் அறிவித்த பின்னர் யாரை ஆதரிப்பது என முடிவு அறிவிக்கப்படும். என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ ஜனாதிபதி வேட்பாளர் பட்டியல் அறிவித்த பின்னர் யார் இந்த நாட்டை முன்னேற்றக் கூடிய வாய்ப்பு இருக்கின்றதே அவருக்கு வாக்களித்து எங்களது உரிமைகளை தக்கவைத்து மலையகத்தை மேலும் வளர்ச்சியடைய தேவையான திட்டத்தை வைத்து முடிவெடுக்கும் என கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஆளுநர் இல்லத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை யாரும் பொறுப்பு எடுக்கதா நிலையில் அவர் இந்த நாட்டை முன்னேற்றவேண்டும் என மிகுந்த ஒரு முயற்சி எடுத்து அவர் இந்த நாட்டை பொறுப்பு எடுக்கும் போது டொலர் ஒன்று 350 ரூபாவாக இருந்ததுடன் அரிசி இல்லை, டீசல் இல்லை, சீனி இல்லை, வைத்தியசாலையில் மருந்து இல்லை இப்படி இருந்தது.

அவர் பொறுப்பு எடுத்த பின்னர் இன்று டொலர் 300 ரூபாவாகவும் எல்லோரும் வாழக்கூடிய ஒரு நாடாக மாற்றி இருக்கின்றார். இவ்வாறு செயற்படுத்தி காட்டியுள்ள இந்த தலைவரை நம்பி பின்னால் போகும் போது எதிர்வரும் 5 வருடத்தில் அதிகமாக வளர்ச்சி அடைவதற்கான பக்குவத் அவரிடம் இருக்கின்றது. என்னுடைய தனிப்பட்ட கருத்து.

அதைவிடுத்து ஒரு மாற்று முடிவுகள் எடுக்கும் போது அவர்கள் புது புது கொள்கைகள் மாற்றும் போது மக்கள் மீண்டும் ஒரு பொருளாதார வீழ்ச்சிக்குள் போகும் வாய்ப்புக்கள் ஏற்படும் என்ற பெரிய அச்சம் இருக்கின்றது.

ஜனநாயக நாட்டில் யாரும் வேட்பாளராக போட்டி போடலாம் இருந்தும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் முடிவு என்னவென்றால் கடந்த 30 வருடத்துக்கு மேலாக எல்வோரும் வாக்களிக்க சந்தர்பம் இருந்தபோதும் மலையக மக்கள் வாக்களிக்க சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்தது.

அத்துடன் ஒரு உரிமை இல்லாத மக்களாக இந்த நாட்டில் வாழ்ந்தோம் அதனால் எங்கள் வாக்குகள் வந்து வீணடிக்காமல் யார் வெற்றி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதே யார் இந்த நாட்டை முன்னேற்றக் கூடிய வாய்ப்பு இருக்கின்றதே அவருக்கு வாக்களித்து எங்களது உரிமைகளை தக்கவைத்து மலையகத்தை மேலும் வளர்ச்சியடைய தேவையான திட்டத்தை வைத்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முடிவெடுக்கும்.

ஜனாதிபதி வேட்பாளர் பட்டியல் அறிவித்த பின்னர் தான் யாரை ஆதரிப்பதாக அறிக்கை வெளியிடப்படும் என்றார்.



# தமிழ்ப் பற்றோடும் தமிழ்ப்பணி நோக்கோடும் வாழ்ந்த ஈழவேந்தன் காலமானார்! — பழ. நெடுமாறன் இரங்கல் அறிக்கை

30-04-2024


**ஈழவேந்தன் காலமானார்!**
**உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் இரங்கல் அறிக்கை**

இலங்கை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், ஈழத் தமிழர்களுக்கான தொண்டிற்குத் தன்னை முழுமையாக ஒப்படைத்துக்கொண்டவருமான அருமை நண்பர் ஈழவேந்தன் அவர்கள் கனடாவில் காலமான செய்தி அறிந்து மிக்க வேதனையடைந்தேன்.

தமிழ்நாட்டில் பல காலம் தங்கியிருந்து இந்தியா முழுமையும் சென்று ஈழத் தமிழரின் அவலங்களைக் குறித்து இடைவிடாது பரப்புரை செய்த பெருமைக்குரியவர்.

தொண்டு, துன்பம், தியாகம் ஆகியவற்றின் வடிவமாகத் திகழ்ந்து மறைந்த அவருக்கு உலகத் தமிழர் பேரமைப்பின் சார்பில் வீரவணக்கம் செலுத்துகிறேன். அவரது பிரிவினால் வருந்தும் அவரின் துணைவியாருக்கும் மற்றும் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்புள்ள,



(பழ. நெடுமாறன்)
தலைவர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# மட்டு நகரில் 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான 11 கஜ முத்துக்களுடன் ஒருவர் படையினரால் கைது



மட்டக்களப்பு காந்தி பூங்காவில் வைத்து 2.5 மில்லியன் பெறுமதியான 11 கஜ முத்துக்களுடன் மயிலவெட்டுவான் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரை திங்கட்கிழமை (29) மாலை விசேட அதிரடிப்படையினர் கைது செய்து ஒப்படைத்துள்ளதாக மட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப்படைக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து விசேட அதிரடிப்படைத் தளபதி சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் ஆலோசனைக்கமைய பொலிஸ் அத்தியட்சகர் குணசிறி மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜி.கருணாரத்தின ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ். ரத்நாயக்கா தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் எச்.பி.ஜி.கே. நிசஙக. மற்றும் 33354 வீரக்கோன், 13443 பண்டார. 75812 அபேயரத்தின, 90699 நிமேஸ், 94143 பியுமக, 101073 ஷானக, 19401 குனபால ஆகியோர் கொண்ட குழுவினர் சம்பவதினமான இன்று மாலை 6.00 மணியளவில் மட்டு காந்தி பூங்காவில் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுவந்தனர்.



இதன்போது மயிலவெட்டுவான் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் கஜ முத்துக்களை வியாபாரம் செய்வதற்காக எடுத்து வந்து காத்தக் கொண்டிருந்த பொது அங்கு மாறுவேடத்தில் இருந்த விசேட அதிரடிப்படையின் அவரை சுற்றிவழைத்து மடக்கி பிடித்து கைது செய்ததுடன் வியாபாரத்துக்காக எடுத்து வந்த சட்ட விரோதமான 2.5 மில்லியன் ரூபா பெறுமதியான 11 கஜ முத்துக்களை மீட்டு தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளாக பொலிசார் தெரிவித்தனர்.




# மட்டக்களப்பு பட்டிருப்பு கல்வி பணிப்பாளர் இடமாற்றத்தை இரத்து செய்ய கோரி காந்தி பூங்காவில் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிறிதரன் இடமாற்றத்தை இரத்து செய்ய கோரி 01-05-2024 அன்று புதன்கிழமை மட்டு காந்திபூங்காவில் பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர்கள், கனவயீர்ப்பு ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த வலயக்கல்வி பணிப்பாளராக கடமையாற்றிவந்த கல்விப் பணிப்பாளர் சி.சிறிதரன் மாகாண கல்வி அலுவலகத்தில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் இந்த இடமாற்றத்தை இரத்து செய்யகோரி பாடசாலைபழைய மாணவர்கள், பெற்றோர்கள், பட்டிருப்பு கல்வி வலயம் ஒன்றினைந்து கவனயீர்பு ஆர்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

இதனையடுத்து இன்று காந்திபூங்காவில் நூற்றுக்கு மேற்பட்டோர் ஒன்று திரண்டு கல்வி அமைச்சின் செயலாளரே நீதியான விசாரணை வேண்டும், எமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறையாக செயற்பட்ட வலயக் கல்வி பணிப்பாளர் எமக்கு வேண்டும், கல்வி பணிப்பாளரின் முறைகேடான இடமாற்றத்தை லன்மையாக கண்டிக்கின்றோம், திறைமையான எமது கல்வி பணிப்பாளரை மீண்டும் நியமித்து தாருங்கள்,

ஒரு குழுவின் சுயநலத்திற்காக திறைமையான கல்வி பணிப்பாளரை இடமாற்றுவதா?, அரச அதிகாரிகள் மீதான அரசியல் பழிவாங்கலை உடன் நிறுத்து, எமது கல்வி கல்வி பணிப்பாளர் எமக்கு வேண்டும், போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்கள் எழுப்பியவாறு கல்வி பணிப்பாளரின் முகத்திரை கொண்ட முகமூடி அணிந்து காலை 10 மணி தொடக்கம் 11 மணிவரை சுமார் ஒருமணித்தியாலம் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் ஆர்பாட்டகாரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.



# மொன்றியால் மாநகரில் சிறப்பாக நடைபெற்ற TamilBee விளம்பர வலைத்தளத்தின் இரவு விருந்து 2024









மொன்றியலில் **TamilBee** விளம்பர வலைத்தளத்தின் விழா கடந்த சனிக்கிழமை 27 ஏப்பிரல் 2024 அன்று மிக சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்று இறுதிவரை எவ்வித தடங்கலோ தாமதமோ இன்றி நடைபெற்றது. **TamilBee** (தமிழ் தேனீ) என்பது மொன்றியல், ரொரோன்ரோ பெருநகரங்களில் வர்த்தக நிறுவனங்கள், பொது அமைப்புக்களின் விபரங்கள், நிகழ்வுகள் மற்றும் சலுகைகள் என்பவற்றை தொகுத்து தரும் வலைத்தளமும் அலைபேசி செயலியும் ஆகும். இந்த செயலி மக்களின் ஆதரவைப் பெற்று பல இடங்களிலும் பேசப்படும் விடயமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த **TamilBee** இரவின் சிறப்பு விருந்த்தினர்களாக உதயன் பத்திரிகை பிரதம ஆசிரியர் லோகன் லோகேந்திரலிங்கம் அவர்களும் ரொரோன்ரோ வர்த்தக பெருமகன் கனி அவர்களும் மொன்றியல் வர்த்தகர் முத்தையா ராசகோபால் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். சிறப்புரை வழங்கிய திரு லோகேந்திரலிங்கம் அவர்கள் **TamilBee** உரிமையாளர் செல்லையா மூர்த்தி அவர்களின் சேவையை பாராட்டியதோடு வியாபாரங்கள் வளர ஊடகங்களினதும் விளம்பரங்களினதும் உதவி தேவை என்பதை சுட்டி காட்டி புதிதாக ஒரு சமூகமோ அன்றி ஒரு இனமோ ஒரு நகரத்தில் குடியேறினால் அது வர்த்தகத்தில் காலூன்ற வேண்டும் என்றார் . ஆரம்ப உரை நிகழ்த்திய கனி அவர்கள் இன்றைய இளைய சமுதாயத்திற்கு இவ்வாறான செயலிகள் பெரிதும் உதவும் என்று குறிப்பிட்டார்.

மொன்றியலின் மூத்த வர்த்தகர் முத்தையா ராசகோபால் அவர்களுக்கு சிறத்த சிறந்த வர்த்தகப் பெருமகன் விருதினை தமிழ்த்தேனீ அமைப்பாளர் திரு செல்லையா மூர்த்தி அவர்கள் வழங்கி சிறப்பித்தார். இது **TamilBee** ஆல் வழங்கப்பட்ட முதலாவது விருதாகும். அத்துடன் கே.பி.எஸ் நகைமாளிகை உரிமையாளர் நிரோசன் சந்திரமூர்த்தி அவர்களும் மதிப்பளிக்கப்பட்டார்.

தொடர்ந்து ரொரோன்ரோவில் இருந்து வருகை தந்திருந்த **UB50** என்ற இசைக்குழுவினர் இசை மழை பொழிந்து அந்த இரவை இன்னிசை இரவாக்கினர். இசைஞானி இளையராஜாவின் ஜனனி..ஜனனி பாடலுடன் ஆரம்பித்த இசை நிகழ்வு 2 மணித்தியாலைங்களுக்கு மேல் பாரவையாளர்களை மெய்மறந்து இரசிக்க வைத்தது. இந்த நிகழ்வில் ரொரொன்ரொ, மொன்றியல் இசைக்கலஞர்களும், பாடகர் பாடகியர்களும் சேர்ந்து ஒரே குழுவினராக இசை வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும். இசைக்குழுவினருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவர்களின் இசையுடன் நிகழ்வு ஆரம்பித்த வழமைக்கு மாறான விழாவின் பரிமாணத்தையும் சிறந்த ஒலி ஒளி அமைப்புகளையும் பிரதம விருந்தினர்கள் மெச்சினர் என்றால் மிகையல்ல!. வாய்க்கு ருசியான அறுசுவை உணவின் பின்னர் அசத்தலான பல நடனங்களுடன் விழா முடிவுற்றது.

ஒரு மொன்பொருள் பணியாளராக பல்காலம் வேலை செய்து வரும் செல்லையா மூர்த்தி அவர்கள் கனடா சமுகத்திற்காக தயாரித்து தந்திருக்கும் வலைத்தளமும் அலைபேசி செயலியிம் வரும் காலங்களில் எமது தலைமுறைக்கு பெருமளவில் உதவும் என்பது திண்ணம்.

# தான் பிறந்து வளர்ந்த பிரதேச மாணவச் செல்வங்களுக்கு தொடர்ச்சியாக கற்றல் தொடர்பான உதவிகளை வழங்கிவரும் கனடா வாழ் சமூகப் பணியாளர் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை











தான் பிறந்து வளர்ந்த இலங்கையின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கிராமப் பிரதேசங்களில் கற்றுவரும் மாணவச் செல்வங்களுக்கு தொடர்ச்சியாக கற்றல் தொடர்பான உதவிகளை கனடா வாழ் சமூகப் பணியாளர் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களை கனடாவிலும் தாயகத்திலும் வாழும் கல்விச் சமூகம் சார்ந்த பெரியோர்களும் ஆசிரியப் பெருந்தகைகளும் மாணவச் செல்வங்களும் அவர்தம் பெற்றோர்களும் பாராட்டி மகிழ்கின்றார்கள்.

கனடா நாட்டில் கடந்த 34 வருடங்களாக வாழ்ந்து வரும் சமூகப் பணியாளர் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்கள் தனது சொந்தப் பணத்திலும் சில சமயங்களில் நண்பர்கள் வட்டாரத்திலிருந்து சேகரிக்கப்படும் நிதியின் மூலமாகவும் இந்த உதவிகளை மாணவச் செல்வங்களுக்கு வழங்கி வருகின்றார்.

அண்மையில் தாயகத்திலிருந்து வந்த வேண்டுகோளுக்கு இணங்க மட்டக்களப்பு சின்ன ஊறணி கிராமத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ் பாடசாலை செல்லும் மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி ஒன்றையும் அவர் வழங்கியுள்ளார். இந்த அன்பளிப்பை தாயகத்தில் வாழும் அவரது சகோதரரும் கனடா "உதவும் பொற்கரங்கள் அமைப்பின்" மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளருமான குணராசா கணபதிப்பிள்ளை மேற்படி மாணவிக்கு துவிச்சக்கர வண்டியை வழங்கி வைத்தார்.

மேலும் அண்மையில், கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள "சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலயம் மற்றும் பெரியநீலாவணை விஸ்ணு வித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி பயிலும் மாணவச் செல்வங்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் நிதி ஆதாரம் ஆகியவற்றையும் கனடா வாழ் சமூகப் பணியாளர் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை தனது பிரதிநிதிகள் ஊடாக வழங்கினார்.

இங்கே காணப்படும் படங்களில் மேற்படி "சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலயம் மற்றும் பெரியநீலாவணை விஸ்ணு வித்தியாலயம் ஆகியவற்றின் அதிபர் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகள் ஆகியோர் மாணவச் செல்வங்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதைக் காணலாம்-

--செய்தி சத்தியன்






Order Online: www.saravanabhavan.ca

SARAVANAABHAVANCANADA

SCARBOROUGH: 416 293 7755
MISSISSAUGA: 905 290 0769
DELTA B.C: 778 578 7575

SCARBOROUGH: WOODSIDE SQUARE, FINCH AND MCCOWAN INTERSECTION. 1571 SANDHURST CIRCLE, UNIT 153, SCARBOROUGH, ON. M1V 1V2

MISSISSAUGA: HURONTARIO AND EGLINTON INTERSECTION, 4559 HURONTARIO STREET, UNIT 12B, MISSISSAUGA, ON. L4Z3L9

DELTA: 8701 - 120TH STREET, DELTA, BC, V4C 6R4

உ



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன்
# வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா
# விஞ்ஞாபனம்-2024

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினாறாவது முறையாக நிகழும் மங்களகரமான குரோதி வருஷம் சித்திரை மாதம் பதினேழாம் நாள் (ஆங்கிலம்29-04-2024) திங்கட்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 09ம் நாள் ஆங்கிலம் 22-05-2024 புதன்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 23-05-2024 வியாழக்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

மஹோற்சவ சிவாச்சாரியார்:
சிவாகம பூஷணம், சிவாகம திலகம்
சிவஸ்ரீ பத்ம ஜெயராம குருக்கள் (இலங்கை)

ஆலய குருமார்:
சிவஸ்ரீ பத்ம ஜெயராம குருக்கள்(இலங்கை)
சிவஸ்ரீ சண்முகம் ஜனார்த்தனன் (பாண்டிச்சேரி, இந்தியா)
சிவஸ்ரீ உமாசுதன் சர்மா (இலங்கை)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

28-04-2024 ஞாயிறு மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 29-04-2024 | திங்கள் | கொடியேற்ற விழா<br>திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 30-04-2024 | செவ்வாய் | திரு. பொன்னம்பலம் சுகுனேந்திரன் குடும்பம் -புங்குடுதீவு | தம்பிஐயா-மனோன்மணி குடும்பம்<br>சிவனேசன் சுசீலா குடும்பம்<br>சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 01-05-2024 | புதன் | திரு. கனகசபை பாலகாந்தன் குடும்பம் கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம் சுளிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 02-05-2024 | வியாழன் | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம் கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம்<br>திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 03-05-2024 | வெள்ளி | திரு. குமாரசாமி பிரபாகரன் நளினி குடும்பம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. கதிர்காமநாதன் குடும்பம்<br>திரு. நாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 04-05-2024 | சனி | செந்தூரன் லாவன்யா குடும்பம் மட்டக்களப்பு | திரு. ராமு சாந்தரூபன் குடும்பம் உரும்பிராய் | கப்பல் திருவிழா |
| 07 | 05-05-2024 | ஞாயிறு | திரு. கஜதீபன் சுஜா குடும்பம் தையிட்டி, காங்கேசன்துறை | ஓர் அன்பர் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 06-05-2024 | திங்கள் | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம் தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம் சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 07-05-2024 | செவ்வாய் | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில் ONGO I LOGISTIC | திரு. ஜெகதேவா சோமாஸ்கந்தன் குடும்பம் - கொக்குவில் | மூக்ஷிக வாகனம் |
| 10 | 08-05-2024 | புதன் | ஓர் அன்பர் | திரு. சந்திரபோஸ் பிருந்தா குடும்பம் Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 09-05-2024 | வியாழன் | திரு. சின்னத்தம்பி குலேந்திரன் குடும்பம் கோப்பாய் | திரு. தியாகராஜா பரமநாதன் குடும்பம் தாவடி | மயில் வாகனம் |
| 12 | 10-05-2024 | வெள்ளி | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம் நுணாவில், சாவகச்சேரி | திரு. சிவலிங்கம் திருக்குமரன்,<br>தனுஷன், அனோயன், நிக்ஷன்<br>குடும்பம் - இணுவில் | கற்பகதரு வடிவம் |
| 13 | 11-05-2024 | சனி | திரு சசிலேகா யோகராசா குடும்பம் சுன்னாகம் | திரு. வரன் நாதன் குடும்பம் VIA REALTY INC | குதிரை வாகனம் |
| 14 | 12-05-2024 | ஞாயிறு | திரு. ஆறுமுகம் ஞானச்சந்திரன் குடும்பம் கொடிகாமம் | திரு பசுபதிப்பிள்ளை குமரசற்குணன் குடும்பம் - குறிகட்டுவான் | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 13-05-2024 | திங்கள் | திரு. தவராசா (சுவிசன்)<br>திரு. தவராசா (சுவிகன்) அனலைதீவு | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம் பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 14-05-2024 | செவ்வாய் | ஓர் அன்பர் | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம் புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 15-05-2024 | புதன் | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம் (கனடா) | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம் -மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 16-05-2024 | வியாழன் | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம் அல்வாய் | திரு. ஜெய்கீதா குடும்பம் கேரளா, இந்தியா | நர்த்தன வடிவம் |
| 19 | 17-05-2024 | வெள்ளி | திரு. சந்திரமோகன் சுகிர்தா குடும்பம்-துன்னாலை | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம் Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 18-05-2024 | சனி | திரு. சிவநேசராசா காளிராசா குடும்பம் மீசாலை | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம் அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 19-05-2024 | ஞாயிறு | ஓர் அன்பர் | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன் குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 20-05-2024 | திங்கள் | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 21-05-2024 | செவ்வாய் | ஓர் அன்பர் | திரு சாம் குடும்பம் சிங்கப்பூர் | சப்பறத் திருவிழா |
| 24 | 22-05-2024 | புதன் | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS<br>அழகரெட்ணம் குமார் குடும்பம் கனடா | திரு முத்துக்குமார் தயாவதி குடும்பம் | வைகாசி விசாக முருகன் விழா தேரடி உற்சவம் |
| 25 | 23-05-2024 | வியாழன் | தீர்த்தத் திருவிழா -<br>திரு லக்சன் குடும்பம் (சென்னை) | திரு. கிருபானந்தராஜா றமணி குடும்பம் தொல்புரம் | கொடியிறக்கல் விழா<br>சண்டேஸ்வரர் விழா<br>ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 24-05-2024 | வெள்ளி | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | திரு. சிவகுமார் குடும்பம்<br>திரு. இராஜேஸ்வரன் குடும்பம்<br>A1 Florist - Brampton | காலை: பிராயச்சித்தம்<br>மாலை: வைரவர் மடை |
| 27 | 25-05-2024 | சனி | திரு. திருவருள் கனகசபை குடும்பம் அனலைதீவு | | பூங்காவனம் |


**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி மூன்றாவது தடவையாக ஜுலை மாதம் 25, 26, 27ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 28ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்**

**திருவிழாக்கால நிகழச்சிகள் நேரகால அட்டவணை**

காலை திருவிழா
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

மாலை திருவிழா
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
ஜெகநாதன் கோபாலகிருஷ்ணன் - அபிராம சுந்தரம் ராஜேஷ்
முனிராஜ் முனிரெத்தினம் - அண்ணாதுரை மணிகண்டன்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்)




ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

டுறம் தமிழ் ஒன்றியம் "Evolving Elder Care In-Home Support"வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல் எனும் ,முதியவர்களுக்கான தன்னார்வ அடிப்படையிலான சேவைகளை வழங்குகிறது.

## இலவச சேவை

- உணவு விநியோகம்,
- தன்னார்லர்கள் மூலம் போக்குவரத்து சேவை: மருத்துவமனை நியமனங்கள், மருத்துவரைபார்வையிடல், மளிகைப்பொருள் கொள்வனவு நிலையங்கள் போன்றவை
- முதியோருக்கான சிறு வீட்டு பராமரிப்பு
- நண்பர்களாக வீட்டுக்கு வருகை தருதல் - நட்பு உரையாடல்கள், மற்றும் திறன் வளர்ப்புஉதவிகள். (Zoom, YouTube, google search...)
- போக்குவரத்து சேவை - வழிபாட்டு தலங்கள், Mall, உணவு விடுதிகள் போன்றவை.

## எங்களின் தொடர்புக்கு

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

- (647) 968-9549
- (647) 286-9549

மேலும் தகவலுக்கு எங்கள் இணையதளத்தைப் பார்க்கவும்:

dtaseniorsinhomesupport.ca

## டுறம் தமிழ் ஒன்றியம்

### வளரும் முதியோர் பராமரிப்பு வீட்டில் -ஆதரவளித்தல்




எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவை வழங்கபபடுகினறது

PICKERING, AJAX,WHITBY, OSHAWA CLARINGTON, BROCK, UXBRIDGE ,SCUGOG,

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative

Canada

## வளரும் முதியோர் பராமரிப்பு - வீட்டில் ஆதரவளித்தல்

### இலவச உணவு விநியோக சேவை

அசைவம் அல்லது சைவ விருப்பத்தை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்

- சூடான, புதிதாகத் தயாரிக்கப்பட்ட உணவு
- எங்களின் தன்னார்வலர்களால் சரியான நேரத்தில் உணவு விநியோகிக்கப்படுகிறது





எட்டு நகராட்சிகளுக்கு இலவச சேவைவழங்கப்படுகின்றது

Pickering, Ajax, Whitby, Oshawa, Clarington,Brock, Uxbridge, Scugog

மேலதிக விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி வரை

தொடர்பு எண்:

(647) 968-9549

(647) 286-9549

டெலிவரி தேதிக்கு குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னதாக உங்கள் ஆர்டரைச் செய்யுங்கள்.

தகுதி: பாதிக்கப்படக்கூடிய மற்றும் குறைந்த வருமானம் கொண்ட முதியவர்கள்: வயது 55 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள்

dtaseniorsinhomesupport.ca

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative

Canada

## Durham Tamil Association Evolving Elder Care -in Home Support for seniors

### Free Training

- Free Training and a certificate of completion from Computek College in Ajax
- 50 volunteer hours placement

### Benefits

- Free Vulnerable Check
- Unlock valuable life skills with Free Standard CPR and First Aid Training
- Volunteer Travel Expense $0.58/km
- Join us to make a postive impact on seniors lives while gaining valuable skills and exprences.

### Contact US


Office Hours: Monday through Friday 9:00am - 5:00PM

Contact Number:

- (647) 968-9549
- (647) 286-9549

Durham Tamil Association

66 Harwood Ave, S.Ajax L1S 2H6




### Serving Eight Municipalities

- Brock
- Uxbridge
- Scugog
- Pickering
- Oshawa
- Clarington
- Ajax
- Whitby

For More Information Visit the website: dtaseniorsinhomesupport.ca

## Volunteers Needed!

### தன்னலவாளர்கள் தேவை!




Join our volunteer team and gain more than just experience – unlock valuable life skills while making a positive impact on seniors' lives in Durham!

Volunteer Gala : Twice a Year!

- Summer Gala 2024
- Winter Gala 2024
- Spring Gala 2025
- September Gala 2025

Funded in part by the Government of Canada's Age Well at Home Initiative

Canada


SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO
LET LOVE BIND US ALL TOGETHER
ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி
இணைந்து வழங்கும்
18ம் ஆண்டு
சிவத்தமிழ் விழா
மேமாதம் 11 சனிக்கிழமை
பகல் 2:30 மணிக்கு
அனுமதி இலவசம்
கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில்
733 Birchmount Road, Scarborough
நாடகம்
தேவாரம்
வழக்காடுமன்றம்
வில்லுப்பாட்டு
நடனம்
பாடல்
காவடி
வேதபாராயணம்
பட்டிமன்றம்
கவிதை
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி தமிழ், சமய, பண்ணிசை, வேதபாராயண
ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும் முத்தமிழ் விழா
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி 416.291.7900, 647.336.3333 www.varasiththi.com
மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும் இச் சிவத்தமிழ் விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.



அடகுமாடம் - பவுண் வங்கி - தங்க நகை கடன்
கனகாம்பிகை
அடகுமாடம்
Pawn Bank Inc.
416.269.7198
2613 Eglington Ave East, Scarborough
416.269.7198
2613 Eglington Ave East, Scarborough


Fashion WORLD INC
Home of Toronto's Most Exclusive & Unique Kancheepuram Collection
Tel: 905 471 2223
www.thefashionworld.com
7393 Markham Road, Unit 82,83 & 84
Markham, ON L3S 0B5


குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
THANA
416.728.5772
Thana Manickavasagar


Shop for Auto Parts
747 AUTOPARTS
Markham
905.471.4447
Scarborough
416.285.4447


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000


அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
416.757.0034
416.994.3861
Kennedy & Eglington, Scarborough


ஸ்ரீரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஷீல்ஸ்
647.702.2159


TECHSOURCE
Computer & Electronics Liquidator
Etobicoke
647-352-2229
Scarborough
(Kennedy & Shropshire)
416.757.9111


SARAVANAA BHAVAN
South Indian Vegetarian Cuisine
Scarborough
416 293 7766
Mississauga
905 290 0769


Vel Insurance Services Inc.
சரியான காப்புறுதியை குறைந்த
கட்டணத்தில் பெறுவதன் மூலம்
மனதுக்கு நிம்மதியை பெறுங்கள்
416.396.0707
Senthooran Punithavel


MORTGAGE ARCHITECTS
THAYANANDA (DARSHAN)
THURAIRAJAH
416.843.6279
darshan.thurair@mtgarc.ca


பூஜா ஸ்டோர்ஸ்
POOJA STORES
1200 Ellesmere Rd. Scarborough, Ontario
416-752-3112 416-738-1271


Disposable Products
Cleaning Supplies
Foam Takeout Box.
Garbage Bags
Paper Towels
Toilet Papers.
Napkins
All kind of Plastic Bags
SHY ENTERPRISE
Retailer of Paper Products
416.602.9714 ◊ 905.205.0011


ERAA SUPER MARKET
5930 Finch Ave. E. Scarborough, ON
Tel: 416.292.2622
2607 Eglinton Ave. E. Scarborough, ON
Tel: 416.269.2622

# இலங்கைத் தேர்தல்களுக்கு பயன்படுத்தப்படவுள்ள "உயிர்த்த ஞாயிறு" தாக்குதல்

**"பாராளுமன்றத்தில் 6 தடவைகளாக 14 நாட்களாக நடத்தப்பட்ட விவாதங்களுக்கு ஒரு நாளைக்கு 1.5 கோடி ரூபா வீதம் 21 கோடி ரூபா மக்களின் பணம் வீணடிக்கப்பட்டதேயன்றி விவாதங்களில் உருப்படியான எந்தவொரு தகவல்களையோ நகர்வுகளையோ, முன்னேற்றங்களையோ, முடிவுளையோ காணக் கிடைக்கவில்லை. எதிர்வரும் தேர்தல்களை இலக்கு வைத்த ஒரு தேர்தல் பிரசார ஆரம்பமாகவே 3 நாட்கள் விவாதங்களும் அமைந்திருந்தன"**

---------------------------------------------------------------- - கே. பாலா



2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி "உயிர்த்த ஞாயிறு" தினத்தில் கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு தேவாலயங்கள் மற்றும் கொழும்பிலிலுள்ள 5 நட்சத்திர ஹோட்டல்களில் முஸ்லிம் பயங்கரவாதிகளினால் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு 45 வெளிநாட்டவர்கள் உட்பட 269க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் உயிர் பலியெடுக்கப்பட்டதுடன் 500க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் படுகாயப்படுத்தப்பட்ட கொடூரம் நடந்து கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதியுடன் 5 வருடங்கள் நிறைவடைந்த நிலையில் கடந்த 21ஆம் திகதி "உயிர்த்த ஞாயிறு"தினம் இலங்கையில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அதுமட்டுமன்றி 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி "உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள்" தொடர்பில் பாராளுமன்றத்தில் கடந்த 24,25,26 ஆம் திகதிகளில் தொடர்ந்து 3 தினங்கள் விவாதங்களும் இடம்பெற்றன. இவ்வாறு "உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள்" தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதங்கள் நடத்தப்படுவது இது முதல் தடவையல்ல. இதற்கு முன்னரும் 5 தடவைகளாக 11 தினங்கள் விவாதங்கள் நடத்தப்பட்டுள்ள நிலையிலேயே 6 தடவையாக கடந்த 24,25,26 ஆம் திகதிகளிலும் விவாதங்கள் நடத்தப்பட்டன.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி "உயிர்த்த ஞாயிறு" தினத்தில் கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு தேவாலயங்கள் மற்றும் கொழும்பிலிலுள்ள 5 நட்சத்திர ஹோட்டல்களில் முஸ்லிம் பயங்கரவாதிகளினால் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு இன்று 5 வருடங்களை கடந்துள்ள போதும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஸ்கொட்லான்ட் விசாரணைகள் உள்ளிட்ட இலங்கை அரசுகளின் விசாரணைகள் முச்சந்தியில் விழிபிதுங்கி நிற்பதுபோன்றே இந்த தாக்குதல் தொடர்பில் பாராளுமன்றத்தில் 6 தடவைகளாக 14 நாட்களாக நடத்தப்பட்ட விவாதங்களும் உப்புச் சப்பில்லாமலே முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

பாராளுமன்றத்தில் 6 தடவைகளாக 14 நாட்களாக நடத்தப்பட்ட விவாதங்களுக்கு ஒரு நாளைக்கு 1.5 கோடி ரூபா வீதம் 21 கோடி ரூபா மக்களின் பணம் வீணடிக்கப்பட்டதேயன்றி விவாதங்களில் உருப்படியான எந்தவொரு தகவல்களையோ நகர்வுகளையோ, முன்னேற்றங்களையோ, முடிவுளையோ காணக் கிடைக்கவில்லை. எதிர்வரும் தேர்தல்களை இலக்கு வைத்த ஒரு தேர்தல் பிரசார ஆரம்பமாகவே கடந்த 3 நாட்கள் விவாதங்களும் அமைந்திருந்தன. அரசுக்கு எதிர்க்கட்சியும் எதிர்கட்சிக்கு அரசும் சேறுகளை பூசிக்கொண்டதுடன் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை ஒருவருக்கொருவர் சுமத்திக் கொண்டனர்.

உயிர்த்த ஞாயிறு கொடூர தாக்குதல்கள் நடைபெறப்போகின்றனவென 2019 ஏப்ரல் 4ஆம் திகதிக்கும் 9ஆம் திகதிக்கும் இடையில் துல்லியமான உளவுத் தகவல்கள் இலங்கை புலனாய்வுத்துறைக்கு கிடைத்துள்ள போதும் அதனை வெளிப்படுத்தாது அரசியல்வாதிகளை மட்டும் பாதுகாக்கும் அறிவித்தல்களை விடுத்து விட்டு புலனாய்வுத்துறை மௌனம் காத்த அதேவேளை, தமக்கு விடுக்கப்பட்ட தாக்குதல் அபாயம் குறித்த எச்சரிக்கையை பகிரங்கப்படுத்தாது தமது பாதுகாப்பை மட்டும் உறுதிப்படுத்திக்கொண்டதுடன் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று கிறிஸ்தவ அரசியல் வாதிகள் உட்பட எந்தவொரு அரசியல் வாதியும் தேவாலயங்களுக்கு கூட செல்லாது தமதும் தமது நெருங்கிய உறவினர்களினதும் உயிர்களை மட்டும் பாதுகாத்துக்கொண்டு அப்பாவி மக்களுக்கும் இலங்கை அரசையும் பாதுகாப்புத்தரப்பினரையும் நம்பி வந்த வெளிநாட்டவர்களுக்கும் நம்பிக்கைத் துரோகம் செய்ததைப்போன்றே தாக்குதல் நடந்து 5 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையிலும் அதே நம்பிக்கைத் துரோகங்கள் தொடர்கின்றன.

சம்பவம் ஒன்று நடந்தால் அந்தப்பழியை, குற்றச்சாட்டை அப்போது பிரதமராக விருந்த ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு மீது போடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான அப்போதைய ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேனாவும் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன மீது போடுவதற்கு பிரதமர் ரணிலும் ஜனாதிபதி, பிரதமர் தலைகள் மீது போடுவதற்கு பொதுஜன பெரமுனவின் அப்போதைய எதிர்க் கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஸவும் அரசியல் இலாபங்களுக்காக காத்திருந்ததாலேயே இந்த "உயிர்த்த ஞாயிறு"தின தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் தங்கு தடையின்றி நடத்தப்பட்டன. எவருமே மக்களைப்பற்றி சிந்திக்கவில்லை. ஆகவே தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகளின் நோக்கமும் அதனை தடுக்காது விட்ட அரசியல்வாதிகளின் நோக்கமும் ஒன்றாகவே இருந்தது.

அதே போன்றே தாக்குதல் நடந்து 5 வருடங்கள் கடந்தும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் பழியை, குற்றச்சாட்டை அப்போது பிரதமராக விருந்த ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க மீது போடுவதற்கு ஒரு தரப்பும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான அப்போதைய ஜனாதிபதி மைத்திரி பாலசிறிசேன மீது போடுவதற்கு இன்னொரு தரப்பும் மைத்திரிபால சிறிசேன, ரணில் மீது போடுவதற்கு இன்னொரு தரப்பும் ராஜபக்ஸ க்கள் மீது போடுவதற்கு இன்னொரு தரப்புமென குண்டுத்தாக்குதல் குற்றச்சாட்டை சங்கீதக் கதிரையாக்கி வருவதனை தொடர்வதனையே கடந்த 3 நாட்கள் விவாதங்களும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி நின்றன.

முஸ்லிம் பயங்கரவாதிகளின் இந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நாட்டையும் மக்களையும் அதலபாதாளத்துக்குள் தள்ளிய நிலையில் ஏற்கனவே அந்தப் பாதாளத்துக்குள் விழுந்துகிடந்த அரசியல்வாதிகளும் அரசியல் கட்சிகளும் தமது அசுத்தங்களை மறைத்துக்கொண்டு மேலெழுந்து வருவதற்கு இக்கொடூர தாக்குதல்களை தமக்கான ஒட்சிசனாகப் பயன்படுத்தி ஒரு தரப்பினர் ஆட்சியைப் பிடித்தனர். ஆட்சியிலிருந்தவர்கள் எதிர்கட்சியாகினர். இன்று வேறு ஒரு வகையிலான ஆட்சி இடம்பெறுகின்றபோதும் தற்போது வரை ஆட்சியிலிருப்பவர்களும் எதிர்க்கட்சிகளும் இந்த உயிர்த்த ஞாயிறு தின கொடூரத்தை தமக்கான அரசியல் பிரசார ஆயுதமாகவே பயன்படுத்தி வருகின்றனர். தற்போது கூட உயிர்த்த ஞாயிறு தாக்குதலை எதிர்வரும் தேர்தல் பிரசாரங்களுக்கான ஆயுதமாகவே தென்னிலங்கை அரசியல் கட்சிகள் பயன்படுத்தப்போகின்றன என்பதற்கு இந்த பாராளுமன்ற விவாதமே கட்டியம் கூறி நிற்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் அரசியல் ரீதியிலும் ஆட்சி ரீதியிலும் பல நெருக்கடிகள் உருவாகியிருப்பதைப்போலவே மக்கள் மத்தியிலும் பொருளாதார நெருக்கடிகள் அதிகரித்து வாழ்க்கைச் சுமையைத் தாங்க முடியாத ஒரு பரிதாப நிலையே காணப்படுகின்றது. ஆனால் இவை "ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களின் சூத்திரதாரிகள் யார்" என்ற கோஷத்தினால் கடந்த 5 வருடங்களாக மூடி மறைக்கப்பட்டு வருகின்றன. இனியும் மூடி மறக்கப்படவே போகின்றன சூத்திரதாரிக கண்டுபிடிக்கப்பட்டால் தென்னிலங்கை அரசியல் கட்சிகளுக்கு புதிய பிரசார ஆயுதங்களை தேட வேண்டியேற்படும் என்பதனால் இந்த தாக்குதல் பிரசார ஆயுதத்தையே அவர்கள் தொடர்ந்தும் பயன்படுத்தவுள்ளனர்.

"உயிர்த்த ஞாயிறு" தின தற்கொலைக்கு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை முழு நாட்டினாலும் பெரிதாக எதிர்பார்க்கப்பட்டதுடன் அதில் பல விடயங்கள் அம்பலமாகும் எனவும் கணிக்கப்பட்டிருந்தது. எனினும் அறிக்கை வெளிவந்தவுடன் அதனை பகிரங்க படுத்த அரச தரப்பு பின்னடித்தது. இதன்மூலம் அறிக்கை மீதான எதிர் பார்ப்பு மேலும் அதிகரித்ததுடன் அந்த அறிக்கையை நாட்டுக்கு பகிரங்கப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகளும் அழுத்தங்களும் வலுத்தன. அறிக்கை தனக்கு கையளிக்கப்பட்ட வேண்டுமென கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வீதியிலிறங்கி போராடுமளவுக்கும் நீதிகோரி சர்வதேசம் செல்வேன் என எச்சரிக்குமளவுக்கும் அரசு அந்த அறிக்கையை வைத்து படம் காட்டியது.

ஆனால் சில தாமதங்களின் பின்னர் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் பகிரங்கப்படுத்தப்பட்டபோதுதான் அது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குற்றவாளிகள் இவர்கள் தான் என்பதனை வெளிக்காட்டாத அறிக்கை என்பது வெளிப்பட்டு முழு நாடும் அதிர்ச்சியடைந்தது. அந்த அறிக்கையை வைத்தே பல மாதங்களை பரபரப்பாக்கி பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசும் எதிர்க்கட்சிகளும் காலத்தைக் கடத்தின. இடையிடையே கர்தினால் மல்கம் ரஞ்சித்தும் சூடான அறிக்கைகளை விட்டு பின்னர் அமைதியாகிக் கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னர் அவர் கோத்தபாய ராஜபக்ஸ அரசுடன் நடத்திய பேச்சுக்கள், கொடுத்த மத ரீதியிலான அழுத்தங்களை அமைச்சர்கள் பாராளுமன்றத்திலேயே பகிரங்கப்படுத்தி கர்தினாலை மறைமுகமாக மிரட்டி அமைதியடைய வைத்தனர்.

பிரதான சூத்திரதாரிகளை கைதுசெய்யாமை, தாக்குதலுடன் தொடர்புபட்ட சிலரை விசாரணை அறிக்கையில் உள்வாங்காமை, சந்தேக நபர்களை வெளிநாடு தப்பி செல்ல அனுமதித்தமை, விசாரணைகளில் இழுத்தடிப்புக்கள், என அரசு காலத்தைக் கடத்துவதையே இலக்காகக் கொண்டிருந்தது. "உயிர்த்த ஞாயிறு" தின தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் பெரும் பகுதியினர் தமிழ் கிறிஸ்தவர்கள் என்பதினாலும் பாதிப்பை ஏற்படுத்தியவர்களின் தரப்பான முஸ்லிம்களும் சிறுபான்மையினத்தவர்கள் என்பதினாலுமே அரசு நீதியை வழங்காது கடந்த 5 வருடங்களாக "உயிர்த்த ஞாயிறு" தின தற்கொலைக் குண்டுத் தாக்குதலை வைத்து அரசியல் செய்தது.

இனி இந்த வருடம் ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்கள் வர விருப்பதால் "உயிர்த்த ஞாயிறு" தாக்குதல் மீண்டும் உயர்ப்பிக்கப்படுகின்றது அதில் முதல் உயிர்ப்பிப்பாகவே தாக்குதல் நடந்தபோது ஜனாதிபதியாக இருந்தவரும் நீதிமன்றத்தால் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு 10 கோடி ரூபா வரையில் நஷ்டஈடு செலுத்துமாறு உத்தரவிடப்பட்டவருமான மைத்திரி பால சிறிசேன "உயிர்த்த ஞாயிறு" தின தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சூத்திரதாரியை தனக்கு தெரியுமென 5 வருடங்களுக்கு பின்னர் கூறி தேர்தல் குண்டை வெடிக்க வைத்தார் அதனால் இப்போது நாட்டில் மீண்டும் அதிர்வுகள் ஏற்படத் தொடங்கியுள்ளன. விவாதங்கள் சூடு பிடிக்காத தொடங்கியுள்ளன. தேர்தல்கள் நடந்து முடியும் வரை மீண்டும் "உயிர்த்த ஞாயிறு" தின தற்கொலைக்குண்டுத்தாக்குதல்கள் பெரும் பிரசார ஆயுதமாக வெடிக்க வைக்கப்பட்டுக்கொண்ட இருக்கும்.

"உயிர்த்த ஞாயிறு" தின தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் பயங்கரவாதிகளின் நோக்கமும் அரசியல்வாதிகளின் நோக்கமும் ஒன்றாகவே இருந்துள்ளதனால் தான் தாக்குதல் நடந்து 5 வருடங்களாகி விட்ட நிலையிலும் தாக்குதல் சூத்திரதாரிகளும் சிக்கவில்லை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும் கிடைக்கவில்லை. ஆனால் அந்த தாக்குதலை பயன்படுத்தி ஆட்சி மாற்றங்களும் தேர்தல் வெற்றி, தோல்விகளும் தீர்மானிக்கப்படுவது மட்டும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன.

பாராளுமன்றத்தில் 6 தடவைகளாக 14 நாட்களாக நடத்தப்பட்ட விவாதங்களுக்கு ஒரு நாளைக்கு 1.5 கோடி ரூபா வீதம் 21 கோடி ரூபா மக்களின் பணம் வீணடிக்கப்பட்ட நிலையில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தப்பணத்தை நிவாரணமாக பங்கிட்டு வழங்கியிருந்தால் கூட அது அந்த மக்களின் மனங்களை ஓரளவுக்காவது ஆற்றுப்படுத்தியிருக்கும்.

# ருவாண்டா (1994) ... இலங்கை (2009) ... காசா (2024) ...



(இனப்படுகொலைகள் தொடர்பில் கனடா உதயனின் சிறப்புத் தொடர்)

(பகுதி - 4)

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)

மே 18, 2009, திங்கட்கிழமையன்று, ஆர்வம், தாக்கம் மற்றும் தொழில்ரீதியன பற்று, மன உறுத்தல் ஆகியவைகளுடன் அலுவலகம் வந்து, "ஏன் உங்கள் விடுப்பு நாளான இன்று வந்தீர்கள் என்ற எரிச்சலூட்டும் கேள்விக்கு இடையேயும், அவமானங்களைப் பார்த்தால் செய்தியாளராக இருக்க முடியாது என்கிற அனுபவ பாடம் காரணமாகவும் அன்று பணியை முடித்தாலும் நாள் முழுவதும் மனதிற்குள் ஒரு உறுத்தல் இருந்துகொண்டே இருந்தது.

செய்தியின் முக்கியத்துவத்தை உணராத ஒரு தலைமையுடன் முரண்பட்டு, அதனால் அவமானப்பட்டு, பதவி உயர்வுகள் மற்றும் அதனுடன் வரும் ஊதிய உயர்வு ஆகியவைகளை இழந்தாலும், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் பக்கம் நின்று, அவர்கள் எதிர்கொண்ட/எதிர்கொள்கின்ற பிரச்சனைகளை உலகத்திற்கு எடுத்துச் சொல்லும் போது அவை மறைந்து போகின்றன. அரசின் ஊதுகுழலாக நான் இருக்க மாட்டேன், பாதிக்கப்பட்டவர்களின் பக்கமே இருப்பேன், அவர்கள் தரப்பு நியாயத்தைப் பேசுவேன், ஊடக அறத்திலிருந்து பின்வாங்க மாட்டேன், ஊழலுக்கு துணையாக இருக்க மாட்டேன், என் சுயத்தை இழக்க மாட்டேன் என்ற ஒரு நிலைப்பாட்டில் இன்றுவரை இயன்றளவிற்கு எனது ஊடகப் பணியைச் செய்து வருகிறேன்.

அந்த உறுத்தல் அந்த திங்கள்கிழமை முழுவதும் இருந்துகொண்டே இருந்தது. அன்று போர் முடிந்துவிட்டதாக இலங்கை அரசு கூறியதை செய்தியாக எடுத்துவருவதில் இருந்த சவால்களை கடந்த வாரம் உங்களுடன் பகிர்ந்துகொண்டிருந்தேன். ஆனால் 18.5.2009 அன்று பணி முடிந்து பின்னிரவு நேரம் வீடு திரும்பிய பிறகும், ஒரு கேள்வி எனது மனதிற்குள் ஓடிக்கொண்டே இருந்தது.

எதன் அடிப்படையில் போர் முடிந்துவிட்டதாக இலங்கை அரசு அறிவித்தது?

அடுத்த நாள் மே 19, 2009 செவ்வாய்க்கிழமை அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்தில் முக்கிய உரை ஒன்றை நிகழ்த்துவார் என்ற தகவலும் வெளியாகி இருந்தது. இந்த அறிவிப்பு வெளியானதும் எனது சிந்தனையோட்டம் மேலும் இனம்புரியாத ஒரு கவலையுடனேயே இருந்தது.

போர் முடிந்துவிட்டதாக அரசு கூறுகிறது. ஆனால் விடுதலைப் புலிகள் தரப்பின் கருத்து என்ன? அவர்கள் பிரபாகரன் தொடர்பில் அரச தரப்பில் கூறுவதை ஏற்பார்களா அல்லது மறுப்பார்களா? அரசு கூறுகின்றபடி போர் முடிந்துவிட்டதனால் முள்ளிவாய்க்கால் பகுதியில் சிக்கியிருந்த பொதுமக்களின் நிலை என்ன? உயிரிழப்புகள் எந்தளவிற்கு இருந்திருக்கும்? அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு மாறாக இலங்கை அரசு தொடர்ச்சியாக நடத்திய தரை மற்றும் வான்வழித் தாக்குதல்களின் கோரம் எப்படியிருக்கும், செய்த கொடூரங்களை அரசு மூடி மறைக்க முயலுமா? இனியாவது பிபிசி தமிழோசை பாதிக்கப்பட்ட தமிழர்கள் பக்கம் நிற்குமா? புலம் பெயர்ந்த தமிழர்கள் என்ன செய்வார்கள்? இப்படி தொடர்ச்சியாக அடுக்கடுக்கான கேள்விகள் எனக்குள் எழுந்தவண்ணமே இருந்தன.

அன்று அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய பின்னரும் எனது தொலைபேசி அழைப்புகள் தொடர்ந்தன. வன்னியிலிருந்தும் மேலதிகமாக தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை. கடந்த ஓரிரு நாட்களுக்கு முன்னர் நான் உரையாடிய நபர்களுக்கும் என்னவாயிற்று என்று தெரியவில்லை. அவர்களில் மருத்துவர்கள், விடுதலைப் புலி உறுப்பினர்கள், சிவில் சமூகத்தினர், ஊடகவியலாளர்கள் என்று யாரையும் தொடர்புகொள்ள முடியவில்லை. அது அச்சத்தை மேலும் அதிகரித்தது.

இரவு முழுவதும் நித்திரை இல்லை. எங்கிருந்தாவது ஏதாவது செய்தி வரும் என்று ஒரு எதிர்ப்பார்ப்பு இருந்துகொண்டே இருந்தது. செவ்வாய்க்கிழமை பொழுதும் புலர்ந்தது. அதிகாலை லண்டன் நேரம் 4 மணி இருக்கும். மீண்டும் நண்பரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசனிடமிருந்து அழைப்பு.

"சிவா, சாரி டு டிஸ்டர்ப் யூ எர்லி மார்னிங்"

"நோ வொறிஸ் மனோ. எனக்கும் நித்திரை இல்லை."

"சிறப்பு படையணி ஒன்றின் தலைவருடன், சிறப்பு ஹெலிகொப்டர் ஒன்றில் கருணாவும், தயா மாஸ்டரும் வன்னிக்குச் செல்லவுள்ளதாக எனக்கு செய்தி ஒன்று கிடைத்துள்ளது. அதை உங்களுடன் பகிர்ந்துகொள்ளலாம் என்று தான் அழைத்தேன். ஆனால் எதற்கு என்று தெரியவில்லை"

"சரி, நல்லது, நானும் கவனிக்கிறேன், நீங்களும் மேலதிகத் தகவல் இருந்தால் தயங்காமல் அழையுங்கள்"

அடுத்த அழைப்பு எமது வட இலங்கைச் செய்தியாளர் மாணிக்கவாசகம் அவர்களுக்கு.

"வணக்கம் மாணிக்ஸ். வன்னியிலிருந்து ஏதாவது செய்தி? கருணா அம்மானும், தயா மாஸ்டரும் வன்னிக்கு ஹெலிகொப்டரில் செல்லவுள்ளதாக ஒரு தகவல் உலவுகிறதே. உங்களுக்கு ஏதேனும் தெரியுமா? நேற்று போர் முடிந்துவிட்டது என்று அரச தரப்பு கூறியது. ஆனால் புலிகள் தரப்பில் தகவல் ஒன்றும் இல்லையே"

"வணக்கம். வன்னிப் பகுதியில் மயான அமைதி நிலவுவதாக அறிகிறேன். தொடர்புகளும் சிக்கலாக உள்ளது. அங்கு இன்னும் ஓரிரு இடங்களில் குண்டுச் சத்தம் கேட்கிறது. பெருந்தொகையான ஆட்கள் காயப்பட்டோ அல்லது உயிருக்கு போராடிக் கொண்டிருப்பதாகவோ அல்லது மரணமடைந்து விட்டதாகவோ அறிய முடிகிறது. புலிகள் தரப்பில் எந்த தொடர்பும் இல்லை. உங்களுக்கு வெளிநாட்டிலிருந்து ஏதாவது தகவல் கிடைத்ததா? அரசு போர் முடிந்துவிட்டதாக கூறினாலும், செய்தியாளர்கள் யாரையும் வன்னிப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கவிலை. நானும் முயன்றேன் ஆனால் அனுமதி கிடைக்கவில்லை"



"சரி மாணிக்ஸ். இந்த இருவரும் வன்னி செல்லும் தகவலை பார்த்துக்கொள்ளுங்கள், நான் அலுவலகம் வந்ததும் தொடர்புகொள்கிறேன்"

"நல்லது. முள்ளிவாய்க்கால் பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிக்குள் வந்துகொண்டிருக்கிறார்கள். ஜனாதிபதி இன்று காலை நாடாளுமன்றத்தின் சிறப்பு அமர்வில் உரையாற்றுகிறார். அவர் என்ன சொல்கிறார் என்றும் கவனிக்கிறேன். அதை ஒலிப்பதிவும் செய்கிறேன்."

இதையடுத்து எனக்கான காலை உணவு, மதிய உணவு ஆகியவற்றை தயாரித்து கொண்டே குளித்து அலுவலகம் புறப்பட ஆயத்தமானேன். இதேவேளை எமது வடக்கு மற்றும் கிழக்குச் செய்தியாளர்கள் இருவரும் ஏககாலத்தில் "பிரபாகரன் குறித்து சில விவரங்கள் வெளிவரக் கூடும் என்று உஷார்படுத்தினர்.

விரைவாக அலுவலகம் செல்ல முயன்ற வேளை மீண்டும் மனோ கணேசன் அவர்களிடமிருந்து அழைப்பு.

"சிவா" பிரபகரன் உடல் கண்டெடுக்கப் பட்டுள்ளதாக இராணுவத்தரப்பிலிருந்து செய்தி வருகிறது. அதை உறுதிப்படுத்தி அடையாளம் காண்பதற்காகத்தான் கருணாவும், தயா மாஸ்டரும் வன்னிக்கு சிறப்பு ஹெலிகொப்டரில் செல்கிறார்கள். பிரெசிடெண்ட் இஸ் ஆல்சோ மேக்கிங் எ ஸ்பெஷல் அட்ரெஸ் இன் பார்லிமெண்ட்".

"நன்றி மனோ. வில் பி இன் டச்"

இதற்குள் இலங்கை நேரம் காலை சுமார் 11.30 ஆகியிருந்தது. பிரபாகரனின் உடல் நந்திக்கடல் பகுதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தொடர்ந்து செய்திகள் வந்தவண்ணம் இருந்தன. ஆனால், அந்த சமயத்தில் அது தகவலாகவே இருந்ததே தவிர, உறுதி செய்யப்பட்ட செய்தியாக இல்லை. எமது செய்தியாளர்களும் கண்ணிமைக்காமல் ரூபவாஹினி தொலைக்காட்சியை அவதானித்துக்கொண்டிருந்தார்கள்.

நானும் செய்திகளின் மூழ்கியிருந்ததால், வீட்டி சுயமாகத் தயார் செய்து அலுவலகம் எடுத்துச் செல்வதற்காக கட்டி வைத்திருந்த காலை மற்றும் மதிய உணவை மேசையிலேயே வைத்துவிட்டு வந்தது நான் வழக்கமாக ரயில் ஏறும் பார்கிங் ரயில் நிலையத்திற்கு வந்த பிறகு தான் உணர்ந்தேன். சரி, அனைத்திலும் விதி வலியது என்று எண்ணி ரயில் ஏறி அலுவலகம் நோக்கி பயணத்தாலும் கண்களை தொலைபேசியிலிருந்து எடுக்க முடியவில்லை. லண்டனின் புகழ்பெற்ற சுரங்க ரயில் அல்லது "டியூபில்" செல்லும் போது நிலத்திற்கு கீழே பயணிக்கும் சமயம் சிக்னல் கிடைக்காது, எனவே ஆக்ஸ்ஃபோர்ட் சர்க்ஸ் ரயில் நிலையத்திலிருந்து வெளியே வந்த பிறகு தொலைபேசியை பார்த்த போது பல அழைப்புகள் விடுபட்டிருந்தது தெரிந்தது. மாணிக்கவாசகம், உதயகுமார், மனோ கணேசன், கொழும்பிலிருந்து வேறு சிலர் என்று பலரது அழைப்புகள்.

இணையதளத்திற்கு சென்ற போது பிரபாகரனின் உடல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, அதை கருணா அம்மானும், தயா மாஸ்டரும் அடையாளம் காட்டினர் என்றும் "பிளாஷ் நியூஸ்" வந்துகொண்டிருந்தது. இதையடுத்து செய்தி தீயாக பரவியது. ஈழத்திலிருந்தும் புலம்பெயர் நாடுகளிலிருந்தும் அழுகுரல்கள். அதேவேளை புலிகள் அமைப்பின் வெளிநாட்டு விவகாரங்களுக்கு பொறுப்பாக இருந்த கே பி- குமரன் பத்மநாதனிடமிருந்து வெளியான செய்தியில் பிரபாகரன் நலமாக உயிருடன் இருக்கிறார், தற்போது புலிகள் ஆயுதங்களை மௌனித்திருக்கிறார்கள் என்று கூறி அறிக்கை ஒன்றும் வந்தது.

பின்னர் கண்ணியமற்ற வகையில் அவரது உடல் காட்சிப்படுத்தப்பட்ட படங்கள் தொலைக்காட்சிகளில் வெளியாயின. நாட்டின் தென் பகுதியில் கொண்டாட்டமும், வடக்கு - கிழக்கு பகுதியில் கனத்த சோகமும் நிலவியதை காண முடிந்தது. தெற்கே அரசியல் கட்சியின் தலைவர்களும், சிங்கள பேரினவாதிகளும் பிரபாகரனின் இறப்புச் செய்தியை வீதிகளெங்கும் மேள தாளத்துடன், பால் சோறு (கிரிபத்) பரிமாறி மகிழ்ந்தனர். ஒரு இனத்தின் அழிப்பில் இவ்வளவு மகிழ்ச்சியா என்ற எண்ணம் எனக்குள் தோன்றியது. நானறிந்த வரையில், விடுதலைப் புலிகள் தென்னிலங்கையில் தாக்குதல்களை நடத்திய போதோ, அல்லது இராணுவத்துடனான மோதலில் ஏதாவது குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்ற போதோ வடக்கு-கிழக்கிலுள்ள மக்கள் அதை கொண்டாடி மகிழவில்லை.

எதிரியாக இருந்தாலும் மரணத்தில் ஒரு கண்ணியம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது மரபு. எதிரணியில் இருப்பவரின் மரண வீட்டிற்குச் சென்றால் கூட அவரைப் பற்றி ஓரிரு வார்த்தை மேன்மையாகப் பேசுவதும், இறந்தவரின் குறைபாடுகள் அல்லது தீய குணங்கள் ஏதாவது இருந்தால் அதுபற்றி பேசாமல் இருப்பதுமே உலகெங்கும் கடைப்பிடிக்கப்படும் ஒரு மரபாகும். அதற்கு புறம்பாக நடந்துகொள்ளுதல், போரில் இறந்த நபரை மோசமாக காட்சிப்படுத்துதல் மிகவும் கௌரவமற்ற செயல்களாகும். இது குரூரமான ஒரு மனநிலையில் வெளிப்பாடாகும். அதை சிங்களப் படைகள் அன்று செய்தன. கீழ் நிலையில் இருக்கும் இராணுவத்தினர் மட்டுமல்லாமல் அதிகாரிகள் தரத்திலிருந்தவர்களும் அப்படியான கீழ்நிலை மனோபாவத்தை வெளிப்படுத்தினர்.

அப்போது இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் சரத் ஃபொன்சேகாவிடம் 53ஆவது படையணிக்கு தலைவராக இருந்த பிரிகேடியர் கமால் குணரட்ண பிரபாகரன் உடல் கண்டெடுக்கப்பட்ட தகவலைக் கூறிய போது, அவர் அணிந்திருந்த சீருடைய கழற்றிவிடுமாறு ஃபொன்சேகா கூறியது அதிகாரபூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. "ஒரு பயங்கரவாதி சீருடையை அணிய முடியாது, அவரது சீருடையை கழற்றிவிடுங்கள்" என்று கட்டளையிட்டுள்ளார்.

இதனிடையே மஹிந்த நாடாளுமன்றத்திலும் உரையாற்றி முடித்திருந்தார். அந்த உரை உண்மைக்கும் பேச்சுக்கும் சம்பந்தம் இல்லை என்பதை வெளிப்படுத்தியது. உரை முழுவதும் முதலைக் கண்ணீர் வடித்திருந்தார் மஹிந்த. அப்படி என்ன கூறினார் அந்த உரையில்?...



இதேவேளை வன்னியில் இடம்பெற்ற அவலங்களின் கோர முகம் வெளியுலகிற்கு மெல்ல மெல்ல தெரிய ஆரம்பித்தது...

(தொடரும்...)

# இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மே தினக் கூட்டத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன்

- நடராசா லோகதயாளன்



தமிழரின் தாயகமாகிய வடக்கு, கிழக்கு பூர்வீக மண்ணில் சிங்கள பௌத்த மரபுரிமை தொன்ம ஆக்கிரமிப்புகள் ஊடாக ஒரு பண்பாட்டுப் போரினை தம்மீது சிங்கள தேசம் ஏவிவிட்டிருக்கின்றது என்று தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் கிளிநொச்சியில் இடம்பெற்ற மேதினக் கூட்டம் மற்றும் பிரகடணத்தில் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தமிழ்த் தேசிய மே நாள் புதன்கிழமை (1) கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இந்த கூட்டத்தில் கட்சியின் தலைவர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா, வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி வி கே சிவஞானம், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், உட்பட பலர் பங்குபெற்றனர்.

அந்த கட்சியின் மே தின பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இரத்தம் தோய்ந்த செங்கொடிகளை உயர்த்தியவாறு, உழைத்து உயர்வுபெற்ற உழைப்பாளிகளின் தியாகங்களை நினைவுகூர்ந்து மேன்மை கொள்ளும் நாளே மே நாள். இரத்தத்தினால் தோய்ந்த செங்கொடிகள், அவை வென்றுதந்த போராட்டங்களின் சுதந்திரத்தின் மாண்பையும் அதன் கண்ணியத்-தையும் மனிதகுல வரலாற்றில் இடையறாது பதிவுசெய்துள்ளது என்பதை பெருமையோடு நினைவு கொள்ளும் நாளே இந்த மே நாள் ஆகும்.

மானிட சமூகத்திற்கு போராடாமல் வாழ்வில்லை என்பதையும், மாண்பில்லை என்பதையும் மனிதகுலம் நோக்கி அறைகூவல் விடுத்த எழுச்சி நாள் மே நாள்.

அனைத்து ஒடுக்குமுறைகளிலிருந்தும் விட்டு விடுதலையாகி சுதந்திரப்பண் இசைக்க வேண்டுமென்ற மானிட தாகத்தின் மகிமையை ஒடுக்குமுறையாளர்களுக்கு உரத்துச் சொல்லும் உன்னத நாள் இந்நாள்.

பூமிப்பந்தில் வாழுகின்ற உழைப்பாளர்களின் செம்மையும், செழுமையும், சீர்நிறைந்த வாழ்வியலும் வையகத்தில் முந்தியிருக்கச் செய்யும் வகையில் முழுமை தந்த நாளாக, வேதனைகள் மத்தியிலும் மகிழ்ந்து நிறைவுபெறும் நாளாக மே நாள் வரலாற்றில் வடிவமெடுத்து வருகின்றது என்பதை பெருமையுடன் நினைவு கொள்வோம்.

உலகத் தொழிற்சமூகங்களோடு இணைந்து ஈழத்தமிழர்களும் தங்களின் இன ஒடுக்குமுறைகளுக்கு எதிராக, எல்லாவகை அடிமைத்தனங்களிலிருந்தும் விடுபடப் போரா-டியவாறு உலகத் தொழிலாளர் நாள் நிகழ்வில் பங்குகொள்வது நிறைவைத் தருகிறது.

இலங்கைத்தீவில் வாழுகின்ற தமிழ்த் தேசிய இனம் என்ற வகையில், ஈழத்தமிழர்களாகிய நாம் எமது இனத் தேசிய விடுதலைக்காகப் போராடிக்கொண்டே சமநேரத்தில் எமது தொழிலாளர்களின் விடுதலைக்காகவும் போராட வேண்டிய சவால்களைச் சந்தித்து நிற்கின்றோம். வடிவங்கள் வேறுபட்ட போதும் வேறுபடாத ஒடுக்குமுறைச் சித்தாந்தம் சிறீலங்கா அரசினால் தமிழர் தேசம் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டே வருகிறது.

ஆயுத வழிமுறைகள் அமைதியடைந்த போதிலும் கட்டமைக்கப்பட்டதும் கட்புலனாகாததுமான இன அழிப்புப் போர் தமிழர் தேசத்தில் ஆழமாக குவியச் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழரின் தாயகமாகிய வடக்கு, கிழக்கு பூர்வீக மண்ணில் சிங்கள பௌத்த மரபுரிமை தொன்ம ஆக்கிரமிப்புகள் ஊடாக ஒரு பண்பாட்டுப் போரினை எம்மீது சிங்கள தேசம் ஏவிவிட்டிருக்கின்றது. இது தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசை ஆகிய தமிழ்த்தேசியத்தை அழித்துவிடுவதற்கான கட்டமைக்கப்பட்ட செயல்முறையாக நீட்சி பெற்று வருவது வேதனை தருகிறது.

உழைப்பினால் பெறப்படுகின்ற வெகுமானங்களை மாத்திரமன்றி வாழ்வியலின் அடிப்படை உரிமைகளையே இழந்து நிற்கின்ற துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. தமது வாழ்வுரிமைக்காக, சுதந்திரத்துக்காக போராடுகின்ற எமது மக்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் துணைகொண்டு ஆட்சியாளர்களால் அடக்கி ஒடுக்கப்பட்டு வருகின்றனர். மதச்சார்பற்ற இலங்கை என்ற அரசியல் அமைப்பின் வாசகத்தை மறுத்து பன்மைத்துவத்தைப் புறக்கணித்து, இலங்கைத்தீவை பௌத்த சிங்கள நாடு என நிறுவுவதில் சிங்கள அரசுகள் மிக இறுக்கமாகவே செயற்பட்டு வருகின்றன.

தமிழர் மரபுரிமைகளைச் சிதைத்து, தொன்மங்களைத் தோண்டியெடுத்து ஈழத்தமிழ் வரலாற்றை இல்லாதொழிப்பதில் அரச கட்டமைப்புகள் அதிகாரபூர்வமாக செயற்பட்டு வருகின்றன. மிகப்பெரும் இனப் படுகொலையை சர்வதேசம் பார்த்திருக்க ஈழத்தமிழர்கள் மீது நிகழ்த்திய பின்பும், தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை ஆழ ஊடுருவி அகற்றிவிடுவதில் பௌத்த சிங்கள பீடம் அதிகூடிய கரிசனை செலுத்தி வருகிறது.

உழைப்பாளிகளாகிய தங்களின் பிள்ளைகளும், கணவன்மாரும், உறவுகளும் ஆயிரக்கணக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் அந்தப் பெற்றோரின் நெடுநாளைய போராட்டங்களுக்கு பெறுபேறுகள் எவையும் கிட்டவில்லை. சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளால் அவர்களது குடும்பங்கள் உழைப்பாளரை இழந்து பல்லாண்டு காலமாக தவித்து வருகின்றன.



நிலங்களைப் பறிப்பதும், நில வளங்களை அள்ளிச் செல்வதும், கடலினைப் பறிப்பதும், கடல் வளங்களைக் கொள்ளையடிப்பதும் என சிங்கள அரச காரியங்கள் சட்டத்திற்கு முரணாக நிகழ்ந்தேறி வருகிறது. ஊழலும் மோசடியும் சகல நிர்வாகத் துறைகளிலும் நிறைந்து போயிருக்கிறது. மனிதாபிமானப் பார்வைகள் இன்றி பக்கச்சார்புகளாலும் முதலாளித்துவ மேலாண்மைகளாலும் இலங்கைத்தீவு மலிந்து நிறைந்து போயுள்ளது.

குறிப்பாக, முப்படை பலமும், சர்வதேச நெருக்க நிலை உறவும், அணிசேரா கொள்கையும் கொண்டிருப்பதாக தம்பட்டம் அடிக்கும் சிங்கள அரசு, சர்வதேச போதைப்பொருள் வர்த்தகத்தின் களமாக இலங்கையைத் திறந்து விட்டிருக்கிறது. வன்முறை மேலோங்கி பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான வன்கொடுமைகள் அதிகரித்து சனத்தொகையில் சரிநிகராய் இருக்கும் பெண்களின் பாதுகாப்பு கேள்விக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக வர்ணிக்கப்படும் ஊடகத்துறை பொருளாதாரப் பலம் மிக்கவர்களாலும், அரசியல் வன்பலத்தாலும் சீரழிந்து-போயுள்ளது. அஞ்சுவதும் அடிபணிவதும் அரசியல் துதி பாடுவதும் ஊடகப் பண்புகளாக புதிய வடிவம் பெற்றிருக்கிறது. மொத்தத்தில் பொருளா-தார கட்டமைப்புகள் சீர்குலைந்து, வாழ்வின் வசதிகள் வலுவிழந்து, வருமானம் குறைந்து வறுமை மேலோங்கி முடங்கிய வாழ்வில் எம் தேசம் சிக்கித் தவிக்கிறது. மானியங்களும், நிவாரணங்களும் உழைக்கும் மக்களின் உயர்வைக் கட்டுப்படுத்தும் அன்பளிப்புகளாக அரசால் வழங்கப்படுகிறது.

மொத்தத்தில் பொருளாதார சிறப்புமின்றி, அரசியல் சீர்திருத்தமுமின்றி, தமிழர் வாழ்வில் சுயாட்சியுமின்றி தமிழர்களின் தேசிய வாழ்வு சிங்கள தேசத்தால் காவு கொள்ளப்பட்டு வருகிறது.

இத்தகைய நிர்மூலமான சூழ்நிலையில் அயலக இந்தியாவும், அனைத்துலக நாடுகளும் தமது மனச்சாட்சிக் கதவுகளை இறுகமூடி அமைதி கொள்வது ஈழத்தமிழர்களை ஆழமான வேதனைக்கு இட்டுச்சென்றுள்ளது. தமிழ்த் தேசிய இனம் தமது வாழ்வுரிமையை வென்றெடுப்பதற்கு இத்தகைய ஒடுக்குமுறைச் சூழல்களின் மத்தியில் தொடர்ந்து போராடும் சக்தியை புதுப்பித்துக் கொள்வதே இன்று எம்முன் உள்ள ஒரே வழியாகும்.

எமது இனத்தின் விடுதலைக்காக தமது இன்னுயிர்களை ஈகம்செய்த கல்லறை மேனியர்களை நெஞ்சங்களில் நினைவு கூர்ந்து, அந்த சத்திய இலட்சியத்திற்காக தொடர்ந்து போராடுவதே தமிழர்களின் அரசியல், பொருளாதார மற்றும் பிராந்திய பாதுகாப்புக்கு ஒரே வழியாகும் என்று இன்றைய இந்த மே நாளில் நாம் பிரகடனம் செய்கின்றோம்.

தமிழர் இருப்பை அழித்து, பௌத்த சிங்கள மேலாதிக்கத்தைத் திணித்து பூர்வீக நிலத்தையும், பண்பாட்டு வாழ்வியலையும் அழிக்க நயவஞ்சகத்தோடு ஆட்சி புரியும் சிங்களப் பேரி-னவாத கருத்தியலுக்கு எதிராக இங்கு கூடியிருக்கும் ஆயிரக்கணக்கான இளைஞர்களும், பெண்களும், மக்களும் இணைந்து எமது தேசியத் தந்தை - தந்தை செல்வா அவர்கள் வகுத்த பாதையில் மரபுவழித் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்கின்ற உன்னத இலட்சியங்களுக்காக இல்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையில் அணிதிரண்டு போராடி, எல்லா ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெற்று, எமது இனத்தின் உரிமையை அடைந்தே தீருவோம் என திடசங்கற்பம் பூணுகிறோம்."

கோடையின் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் ஏராளமான மக்கள் இந்த மே தின கூட்டத்தில் பங்குபெற்றனர்.

## உழைப்பாளர் தினம்

*சிக்காகோ நியுயோர்க் மக்கள்*
*அக்கிரமம் அழிக்கத் திரண்டனர்*
*உக்கிரமானது உலகப் புரட்சி*
*உழைக்கும் நேரம் எட்டுமணியானது*
*உரிமையைப் போராடி வென்றனரே!*

*உதிரத்தை உழைப்பாக்கி உலகத்தை உயர்த்தும்*
*உண்மைத் தொழிலாளியை உள்ளத்தால் வணங்குவோம்*
*உலகுக்கு உணவளிக்கும் உழவர்களைக் காப்போம்*
*உழைப்பாளி இல்லை என்றால் உலகில்*
*வெறும் கல்லும் மண்ணும்தான் மிஞ்சும்*
*உழைப்போரை மதிப்போம் உயர்த்துவோம் வாழ்வை.*


*பாரையே வடிவமைக்கும் பாட்டாளி*
*பாரில் திரண்டால் பாரழியும்*
*கைகட்டி வாய்பொத்திய காலம்போதும்*
*கரமுயர்த்தி உரிமைக் குரலெழுப்பி*
*உன்னுரிமை உயிர் நாடியே!*
*உழைப்போம் உரிமை பெறும்வரை.*

*சுரண்டும் வர்க்கம் உனைச்சுரண்டி*
*உறிஞ்சுவது தோழா உன்குருதி*
*வீழ்ந்தே கிடந்து அடிதொழுது*
*வீணாய் வாழ்வை அழிக்காதே.*

*கல்லைச் சுமந்தாலும் கள்ளமிலாக் கூட்டம்*
*மண்ணைச் சுமந்தாலும் மானமுள்ள மக்கள்*
*எடையைக் குறைக்க நடக்கும் கூட்டமது*
*உணவிற்காய் உழைக்க நடக்கும் கூட்டமிது*
*உழைத்துக் களைத்து நெல்லைச் செய்தனர்*
*ஒருவேளைக் கஞ்சிக்கே கையேந்தி நின்றனர்*
*பட்டுத் துணிகளைப் பகட்டாய்ச் செய்தனர்*
*பருத்தித் துணிக்கே பரிதவித்து நின்றனர்*
*என்று தணியுமிவர் வாழ்வின் சோகம்?*

*உனது வியர்வைத் துளிகள் ஒவ்வொன்றும்*
*உன்னை மட்டுமல்ல உலகையும் உயர்த்தட்டுமே!*
*ஒவ்வொரு கைப்பிடிச் சோறும் உண்ணும்போதும்*
*நீங்கள் இவர்களை நினைத்துப் பாருங்கள்*
*உணவை ஒருபோதும் வீணாக்க மாட்டீர்கள்*
*உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்*
*வீணேஉண்டு களிப்போரை நிந்தனை செய்வோம்.*

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*



# ஸ்ரீ ஆதிபராசக்தி அம்பாள் தேவஸ்தானம்
# ஸ்ரீ கனகதுர்க்கை பிரம்மோற்சவ விஞ்ஞாபனம்

## 24-வது ஆண்டு விழா (2024)


ஸ்ரீ ஆதிபராசக்தி இந்து ஆலயம் – டொரொன்ரோ

3021 Markham Road, Units 45, 46 & 47 Scarborough ON M1X 1L8

E-Mail: sakthi1226@gmail.com | Tel: 416-293-1226 | Fax: 416-293-1215







கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர் கபடு வராத நட்பும் கன்றாத வளமையும்
குன்றாத இளமையும், கழுபிணி இலாத உடலும் சலியதா மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும் தாழாத கீர்த்தியும், மாறாத வார்த்தையும் தடைகள் வராத கொடையும்
தொலைதா நிதியமும், கோணாத கோலும் ஒரு துன்பம் இலாத வாழ்வும் துய்ய நின்பாதத்தில்
அன்பும் உதவிப் பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய் அலைஆழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி அருள்வாமி அபிராமியே!

**அம்பிகை அடியார்க்ளே**

ஸ்ரீபரம்பொருளினால் சிருஷ்டிக்கப்பட்ட இப்புண்ணிய பூவுலகின் கண்ணேயுள்ள ஐம்பெரும் கண்டங்களுள் செல்வச்செழிப்புடனும், விஞ்ஞான நுண்ணாராய்ச்சியினாலும் நிறைவுபெற்று விளங்கும் அமெரிக்கக் கண்டத்தின் வடபால் தலைசிறந்து நிகழும் உலக அதிசயங்களில் ஒன்றான நயகரா நீர் வீழ்ச்சியைத் தன்னகத்தே கொண்டதுமான நீர்வளம், நிலவளம், மலைவனம் போன்ற இயற்கை வளங்களால் நிறைந்து விளங்குவதுடன் – நூற்றுக்கும் மேற்பட்ட சைவ, வைஷ்ணவ திருக்கோயில்களால் நிறைந்து மிளிர்கின்ற கனடாத் திருநாட்டின் ஸ்காபரோ புண்ணிய ஸ்தலத்தில் கோவில் கொண்டு வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கும் அன்னையாம் ஸ்ரீ ஆதிபராசக்தி ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாளுக்கு நிகழும் மங்களகரமான குரோதி வருடம் சித்திரை 29 ம் நாள் **(11.05.2024)** சனிக்கிழமை திருவாதிரை நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய பகல் சுபவேளையில் 8:00 மணிக்கு மேல் 9:30 மணிக்குள் கொடியேற்றப்படும்.

**மே 25 ஆம் திகதி வைகாசி திங்கள் 12-ம் திகதி காலை 8:00 மணி தொடக்கம் 9:00 மணிக்குள் மூலத் நட்சத்திரம், மிதுன லக்னத்தில் தேர் வடம் பிடிக்கப்படும்.**

இவ்விழாக்காலங்களில் நேர, கால, நிர்ணயம் தவறாமல் நடைபெறும் கிரியைகளில் அனைவரும் கலந்து சிறப்பிப்பதோடு பால், தயிர், பழங்கள், பூக்கள் போன்ற அபிஷேகத் திரவியங்களையும் வழங்கி அம்பாளின் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

**காலை**

8:30 மணிக்கு கும்ப பூஜை
9:30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
10:00 மணிக்கு யாக பூஜை
10:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
11:00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
11:30 மணிக்கு வீதியுலா
12:30 மணிக்கு பிரசாதம் வழங்கல்

திருவிழாக்காலங்களில் அனைவரும் வருகை தந்து
அம்பிகையின் திருவருள் பெற்று வாழ்வீர்களாக!
இங்கனம் : **ப்ரம்மஶ்ரீ சந்திரமௌலி சாஸ்திரிகள்**

**மாலை**

5.00 மணிக்கு கும்ப பூஜை
5.30 மணிக்கு மூலஸ்த்தான பூஜை
6.00 மணிக்கு யாக பூஜை
6:30 மணிக்கு ஸ்தம்ப பூஜை
7.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
8.00 மணிக்கு வெளிவீதி வீதி வலம் வருதல்
8.45 மணிக்கு பிரசாதம் வழங்கல்

**புதிய வேத பாடசாலை ஒன்று ஆரம்பிக்கவுள்ளது.**
**மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் தொடர்புகொள்ளவும்.**

# அன்பின் தொனி - 778

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவகிருபை** - Grace of God

**ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு**

ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத் துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு. பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு; நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு; கொல்ல ஒரு காலமுண்டு, குணமாக்க ஒரு காலமுண்டு; இடிக்க ஒரு காலமுண்டு, கட்ட ஒரு காலமுண்டு; அழ ஒரு காலமுண்டு, நகைக்க ஒரு காலமுண்டு; புலம்ப ஒரு காலமுண்டு, நடனம்பண்ண ஒரு காலமுண்டு; கற்களை எறிந்துவிட ஒரு காலமுண்டு, கற்களைச் சேர்க்க ஒரு காலமுண்டு; தழுவ ஒரு காலமுண்டு, தழுவாமலிருக்க ஒரு காலமுண்டு; தேட ஒரு காலமுண்டு, இழக்க ஒரு கால முண்டு; காப்பாற்ற ஒரு காலமுண்டு, எறிந்துவிட ஒரு காலமுண்டு; கிழிக்க ஒரு கால முண்டு, தைக்க ஒரு காலமுண்டு; மவுனமாயிருக்க ஒரு காலமுண்டு, பேச ஒரு காலமுண்டு; சிநேகிக்க ஒரு காலமுண்டு, பகைக்க ஒரு காலமுண்டு; யுத்தம்பண்ண ஒரு காலமுண்டு, சமாதானம்பண்ண ஒரு காலமுண்டு. வருத்தப்பட்டுப் பிரயாசப்படுகிறவனுக்கு அதினால் பலன் என்ன?


**அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்**

மனுபுத்திரர் பாடுபடும்படி தேவன் அவர்களுக்கு நியமித்த தொல்லையைக் கண்டேன். அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்; ஆதலால் தேவன் ஆதிமுதல் அந்த ம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான். மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மைசெய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனு'னுக்கு இல்லையென்று அறிந்தேன். அன்றியும் மனுஷர் யாவரும் புசித்துக் குடித்துத் தங்கள் சகலப் பிரயாசத்தின் பலனையும் அநுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம். தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடே ஒன்றும் கூட்டவுங் கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங் கூடாது; மனுஷர் தமது சமுகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச் செய்துவருகிறார். முன் நடந்ததே இப்பொழுதும் நடக்கிறது ' இனி நடக்கப்போகிறதும் முன்னமே நடந்தது; நடந்ததையோ தேவன் விசாரிப்பார். நியா யந்தீர்க்கிறார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன்.

**தேவன் விசாரிப்பார். நியாயந்தீர்க்கிறார்**

பின்னும் சூரியனுக்குக் கீழே நான் நியாயஸ்தலத்தைக் கண்டேன், அங்கே அநியாயம் இருந்தது; நீதி ஸ்தலத்தையும் கண்டேன், அங்கே அநீதி இருந்தது. சகல எண்ணங்களையும் சகல செய்கைகளையும் நியாயந்தீர்க்குங்காலம் இனி இருக்கிறபடியால் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்க்கிறார் என்று என் உள்ளத்தில் எண்ணினேன். மனுபுத்திரர் தாங்கள் மிருகங்களைப்போல் இருக்கிறார்களென்பதை அவர்கள் அறியும்படிக்கு தேவன் அவர்களைச் சோதிக்கிறாரென்று நான் மனுஷருடைய நிலைமையைக் குறித்து என் உள்ளத்திலே எண்ணினேன். மனுபுத்திரருக்குச் சம்பவிக்கிறது மிருகங்களுக்கும் சம்பவிக்கும்; அவர்களுக்கும் இவைகளுக்கும் ஏக சம்பவமுண்டு; இவைகள் சாகிறது போலவே இவர்களும் சாகிறார்கள்; ஜீவன்களுக்கெல்லாம் சுவாசம் ஒன்றே; மிருகத்தைப் பார்க்கிலும் மனுஷன் மேன்மையுள்ளவன் அல்ல; எல்லாம் மாயையே. எல்லாம் ஒரே இடத் துக்குப் போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது. உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழப் பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்? இப்படியிருக்கிறபடியால், மனுஷன் தன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிருக்கும் நன்மையையேயல்லாமல், வேறே நன்மையில்லையென்று கண்டேன்; இதுவே அவன் பங்கு; தனக்குப் பின்வரும் காரியங்களைக் காணும்படிக்கு அவனைத் திரும்பிவரப்பண்ணுகிறவன் யார்? - **பிரசங்கி 3: 1- 22**

தொடரும்...




TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Head-aches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்

**Mrs. K. Vasanthakumar** ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

**5200 Finch Ave., East -- Suit #349 Scarborough, ON M1S 4Z5**

## கடந்தவையும் கடப்பவையும் (96)

அகன்ற நேரான மண் ஒழுங்கை - அங்கு
அலங்கார வளைவுகள் போல் நிழல்மரங்கள்

வலப்பக்க வேலியோடு நீரோடும் கல்வாய்க்கால்
நிரந்தரமாக வழிநெடுக குளிர்ந்த நீர்கொடுக்க,

கட்டாக்காலிகள் போலும் கனமாடுகள்
எட்ட எட்ட நின்றபடி நீரோடும்

கட்டுக்குள் தலைபுதைத்து நீர்குடிக்கும்
அற்புதக்காட்சியில் அகமகிழ்ந்து எமைமறந்து - பின்

விரிந்து பரந்த பெரியதோர் தென்னந்தோப்புக்குள்
தெரிந்த அந்த அழகான வீட்டை அடையுமுன்பே

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பார்
வம்சத்திலே வந்தவர்கள் ஓடிவந்தார் முகமலர்ந்தார்

இடம்வேறு அனாலும் அன்றிருந்த முகம்மாறவில்லை - சொந்த
இடம் தெல்லிப்பழை அங்கும் அவர்களுக்கு ஒருவீடு

கல்விக்காய் தங்கியிருந்த தருணங்களில் அறிந்ததுதான் - பிறரில்
எல்லையில்லா அன்புகாட்டும் அவர்கள் குணம்

ஊரோடு ஒத்த இடப்பெயர்வு அவர்களையும்
ஊர்மாற வைக்கவே வந்திருந்தார் விசுவமடு

சோலையாய் நிழல் கொடுக்கும் மாமரமும்
பலாமரமும் வாழைகளும் சூழ்ந்திருக்கும்

அழகான வீட்டுக்குள் அழைத்து வந்து உபசரித்து
தொடரான நாட்களிலும் தொடர்ந்திருக்கச் செய்தார்கள்

உள்ளத்தை உருக்குலைத்த வெடியொலி மறந்து
உள்ளத்தை மகிழவைக்கும் சிரிப்பொலியில் திளைத்தோம்

தென்னந்தோப்பில் சமையல் திறந்தவெளிப் படுக்கை
பென்னம்பெரும் கிணற்றில் நண்பியோடு குளிப்பு

பின்னிரவிலும் பெருங்கதைகள் பேக்கதைகள் தொடர
தொந்தரவு தாங்காது பெரியவர்கள் புறுபுறுக்க

கிழமைகள் இரண்டு இன்பமாக ஓடிப்போக - புதிய
கிழமையொன்றில் புதுவீடு கட்டுதற்குத் திட்டமொன்று

பெரியவர்கள் மனத்திருக்க கனக்கத்தூரம் இல்லை - அவர்களுக்கு
உரிமையுள்ள காணியொன்றைப் பார்த்துமாச்சு

மாலைபொழுதினிலே வழமைபோல - தெருவோரச்
சோலையிலே கூடிநாம் நிற்கையிலே - காணுகிறோம்

கனகாலம் காணாத அழகு ஒன்று - மிக
பலமாக வண்டியை மிதித்தபடி முன்னால் - அரை

வட்டமொன்று போட்டே நின்றது வாயெல்லாம் பல்லாக.....

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சாவகச்சேரியில் லான்ட் மாஸ்டரும் ஹையேஸ் வாகனமும் விபத்து – ஒருவர் உயிரிழப்பு



சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி - நுணாவில் பகுதியில் ஏ9 வீதியில் 01-05-2024 புதன்கிழமை காலை 5மணியளவில் இடம்பெற்ற விபத்தில் லான்ட் மாஸ்டரில் பயணித்த நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரியில் இருந்து நாவற்குழி நோக்கி சென்று கொண்டிருந்த லான்ட் மாஸ்ரரின்(இரு சக்கர உழவியந்திரம்) பின்புறமாக கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ஹயஸ் வாகனம் மோதியதில் மேற்படி விபத்துச் சம்பவித்துள்ளது.





இதில் லான்ட் மாஸ்ரரில் பயணித்த கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த ம.சதீஸ்குமார் என்பவரே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

மேலும் விபத்தில் லான்ட் மாஸ்டர் சாரதி உட்பட லான்ட் மாஸ்ரரில் பயணித்த மூவர் மற்றும் ஹயஸ் வாகனத்தில் பயணித்த பெண் ஒருவருமாக மொத்தம் நால்வர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



# வடகிழக்கில் இடம்பெறும் நில அபகரிப்புக்கு எதிராக தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும்

## தமிழர் சமூக ஜனநாயக கட்சி தேசிய அமைப்பாளர் சிவராசா மோகன்

இந்த நாட்டிலே தமிழ் மக்களின் பிரச்சனைக்கு சட்டரீதியாகவும் அரசியல் அமைப்பு ரீதியாகவும் முன்வைக்கப்பட்ட 13 திருத்த சட்டம் அமுல்படுத்த வேண்டும் அதேவேளை வடகிழக்கில் தமிழர் பகுதியில் இடம்பெறும் நில அபகரிப்பு போன்ற பல பிரச்சனைகளுக்கு எதிராக தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக செயற்படும் அனைவருமே ஒன்றிணைந்து குரல் கொடுக்கவேண்டும் அதற்கு நாங்களும் இணைந்து செயற்பட தயாராக இருப்பதாக தமிழர் சமூக ஜனநாயக கட்சி தேசிய அமைப்பாளர் சிவராசா மோகன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு புதூரில் அமைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எப். முன்னால் வடகிழக்கு முதலமைச்சர் வரதராஜ பெருமாள் அணியின் தமிழர் சமூக ஜனநாயக கட்சியிகன் காரியாலயத்தில் 30ம் திகதி அன்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் காங்கிரஸ் மாநாடு கடந்த 21,22ம் திகதி யாழ் தந்தை செல்வா அரங்கில் இடம்பெற்றது அதில் 17 பேர் கொண்ட மத்தியகுழு நியமிக்கப்பட்டு அதன் முதலாவது கூட்டம் கடந்த 28ம் திகதி இடம்பெற்றது அதில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அதில் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு முன்வைக்கப்பட்ட தீர்வான 13 திருத்த சட்டம் அதனுடன் இணைந்த மாகாண சபை முறைமை ஆகிய இரண்டு விடயங்களும் அன்று என்ன வடிவில் முன்வைக்கப்பட்டதே அது இன்று பல்வேறு வகையில் நீத்து போகச் செய்யும் வகையில் அதன் உள்ளடக்கம் கரைத்து வடித்து கொட்டப்பட்ட ஒரு நிலையிலே உள்ளது.

அது இன்று வரை தமிழ் மக்களுக்கு இந்த நாட்டிலே சட்டரீதியாக அரசியல் அமைப்பு ரீதியாக கிடைத்த இந்த அதிகார பகிர்வுக்கு எங்களது தோழர்களும் ஆயிரக்கணக்கான போராளிகள் பொதுமக்கள் எல்லோருடைய இழப்பிற்கு பின்னர் மிஞ்சி இருக்கின்ற மாகாணசபை முறைமையையும் அதிகார பகிர்வு முறைமையையும் முறையாகவும் முழுமையாகவும் அமுல்படுத்தி நிறைவேற்றப்பட வேண்டும்.

இந்த நாட்டில் உள்ளூராட்சி மன்றம் மாகாணசபை தேர்தல்கள் தொடர்ந்து ஒத்தி வைக்கப்படுகின்றது இது உண்மையில் ஜனநாயக விரோதமான போக்காகும் இந்த நாட்டில் ஜனநாயகம் நிலைபெறவேண்டுமானால் எல்லா மக்களது அபிலாஷைகளையும் ஈடு செய்யக் கூடிய வகையில் இந்த தேர்தல்கள் உரிய காலத்தில் உரிய முறையில் நடாத்தப்படவேண்டும் அதனை வலியுறுத்தி தீர்மானம் மேற்கொண்டுள்ளோம்.

அதேவேளை வடக்கு கிழக்கில் செயற்படுகின்ற அரசியல்கட்சிகள் சமூகமட்ட அமைப்புக்கள் ஆக இருந்தாலும் சரி தமிழ் மக்கள் பிரச்சனை தொடர்பாக ஒன்றினைந்து குரல் கொடுக்க வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது.


நில ஆக்கிரமிப்பு மீனவர் பிரச்சனை மட்டக்களப்பு மயிலத்தமடு மேச்சல்தரை பிரச்சனை போன்ற பல்வேறு பிரச்சனைகளை முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர் இவற்றுக்கு எதிராக தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக செயற்படும் அனைவருமே ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டி இருக்கின்றது.

இங்கு தமிழ் தேசிய பரப்பில் உள்ள கட்சிகள் என்றும் ஏனையவற்றை அவ்வாறு இல்லாத கட்சிகள் எனவும் பிரித்து பார்க்கப்படுகின்ற ஒரு நிலை காணப்படுகின்றது. இந்த நிலை இல்லாமல் செய்யப்படவேண்டும். அதனை செய்யாது போனால் தமிழ் மக்களுடைய ஒற்றுமையையும் பலத்தையும் குறைக்கும். எனவே எதிர்காலத்தில் தமிழ் மக்கள் முகம் கொடுக்கின்ற அனைத்து பிரச்சனை தொடர்பாகவும் அனைவரும் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் குரலை வெளிப்படுத்த கூடிய வகையில் செயற்படவேண்டும்.

தமிழ் பொது வேட்பாளர் தொடர்பாக பேச வேண்டிய தேவை இருக்கின்றது இந்த விடையங்களை அவதானித்துக் கொண்டிருக்கின்றோம் அதேவேளை தமிழ் வேட்பாளர் நிறுத்தவேண்டும் என பேசிக் கொண்டிருக்கம் அவர்கள் இன்னும் ஒரு திட்டவட்டமான தீர்மானம் எடுக்கவில்லை இதன் சாதக பாதகம் தொடர்பாக தமிழ் கட்சிகளுடன் ஒன்றினைந்து பேச்சு இடம்பெறவில்லை அவ்வாறு இடம்பெறும் போது எங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்துவோம் என்றார்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1098

## மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்

### கொக்குவில், யாழ்ப்பாணம்

இவ்வாறு முருக பக்தர்கள் முருகன்மீது கொண்ட ஆராத அன்பின் காரணமாக, மஞ்சவனப்பதி ஆலயத்தின் வளர்ச்சி தொடர்ந்து இடம்பெற்றுள்ளது. இவ்வாலயத்திலே, 1938 ஆம் ஆண்டுவரை முருகப்பெருமான் தேர்உலாவர, கட்டுத்தேர் மட்டுமே காணப்பட்டுள்ளது. முருகப்பெருமான் சித்திரத்தேரில் உலாவரவேண்டும் என்ற பெருவிருப்பு, திரு. ச.வே. சண்முகம்பிள்ளை அவர்கள் மனதிலே உதித்தது. உடனடியாகவே சித்திரத்தேர் திருப்பணி வேலைகளை, தமது சொந்தச் செலவில் செய்யத் தொடங்கினார்.

மஞ்சவனப்பதி முருகன் ஆலய சித்திரத்தேர் வேலைகளைச் செய்வதற்கென, இந்தியாவிலிருந்து விஸ்வ ஸ்ரீ சுப்ரமணிய ஸ்தபதியார் குழுவினர் வருவிக்கப்பட்டனர். இக்குழுவினரை மஞ்சவனப்பதி தேவஸ்தானத்திற்கு அருகே இருப்பிடவசதி அமைத்துக்கொடுத்து, முருகப்பெருமானுக்கு சித்திரத்தேர் ஒன்றினை உருவாக்கினார். இவருடன் இணைந்து வைத்திய கலாநிதி. சே. பொன்னம்பலம் அவர்கள் சித்திரத்தேர் திருப்பணி வேலைகளை மேற்பார்வை செய்ய முன்வந்தார்.

இத்தேரிலே கந்தப்புராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், மகாபாரதம், பாகவதம் ஆகிய நூல்களிலே காணப்படும் கதைகள் சித்திரரூபமாக அமைக்கப்பட்டன. இவ்வாறு கலையுணர்வும், அழகுணர்வும் ஒருங்கிணைந்து அமைக்கப்பட்ட மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தேர், 1939 ஆம் ஆண்டு அடியவர்கள் வெள்ளமெனத் திரண்டிருக்க வெள்ளாட்டம் விடப்பட்டது. இதேவேளை முருகப்பெருமான் உலாவரப் பயன்படுத்திய கட்டுத்தேர், விநாயகப்பெருமானுக்குரிய தேராக மாற்றம் பெற்றது.

இவ்வாறு மஞ்சவனப்பதி முருகன் எழுந்தருளி உலாவர சித்திரத் தேர் அமைக்கப்பட்ட பின்னர், 1939 ஆம் ஆண்டுமுதல் திரு. ச.வே. சண்முகம்பிள்ளை அவர்களே, இவ்வாலய தேர்த் திருவிழாவை சிறப்பாக நடத்தி வந்துள்ளார். அத்தோடு தேர்த்திருவிழாவன்று இடம்பெறும் மகேசுவர பூசையையும் பொறுப்பேற்று நிறைவேற்றியுள்ளார். அக்காலப்பகுதியில் தீர்த்தோற்சவத்தை திரு. கந்தர் குடும்பத்தினரும், பூங்காவனத் திருவிழாவை திரு. தம்பிமுத்து குடும்பத்தினரும் சிறப்பாகச் செய்துள்ளனர்.

இவ்வாறு வளர்ச்சியடைந்து வந்த மஞ்சவனப்பதி ஆலயத்தின் மகோற்சவ விழாக்களை, நீர்வேலியைச் சேர்ந்த உயர்குருக்கள் பீடம் நடத்தும் பாரம்பரியத்தைக் கொண்டதாக விளங்கியது. அக்காலப்பகுதியில் சிவஸ்ரீ அப்பாத்துரை குருக்களைத் தொடர்ந்து, சிவஸ்ரீ பிச்சுக் குருக்கள் மகோற்சவங்களைச் சிறப்பாக நடத்தியுள்ளதாக ஆலய வரலாற்றிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வேளையில் பிரம்மஸ்ரீ செல்லத்துரை குருக்கள் மகன் பிரம்மஸ்ரீ வைத்தியநாத ஐயர், தந்தையாருக்கு உதவியாக ஆலயத்தின் நித்திய. நைமித்திய பூசைகளை நடத்தி வந்துள்ளார்.

இவ்வாறான படிமுறைவளர்ச்சியின் அடுத்த கட்டமாக, மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திற்கு அழகிய கோபுரமொன்றினை அமைக்கும் திருப்பணி வேலைகள், 1944 ஆம் ஆண்டு ஆரம்பமாகிய ஆலய அமைப்பிலே கோபுரம் பிரதான இடத்தை வகிக்கின்றது. திருமந்திரம் கோபுரத்தின் தத்துவத்தினைப் போற்றுகின்றது.

“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்.
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்” என அழகாக கோபுர தத்துவத்தை எடுத்தியம்பியுள்ளது.

திருக்கோயில் தரிசனத்திலே மனதிற்கு மகிழ்ச்சியையும், மன நிறைவையும் தருவது கோபுர தரிசனமாகும். ஆலயத்தின் தலைவாயிலில் வானுயர விளங்கும் இராஜகோபுரம், கலைமரபின் உன்னத நிலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வதோடு, இறைவனது மகத்துவத்தையும் பெருமையையும் ஒருங்கே விளக்கி நிற்கின்றது. இராஜ கோபுரத்துடன் விளங்கும் ஆலயம் பரிபூரணத்தன்மையோடு காணப்படும். “கோபுர தரிசனம் கோடி புண்ணியம்” என்பது ஆன்றோர் வாக்கு. கோபுரத்தின் அமைப்பு, எரியும் சுடர் போன்று காணப்படும். இறைவனது வடிவமும் இத்தகையதென சமய நூல்கள் சுட்டியுள்ளன.

கோபுரங்கள், இராஜகோபுரம், வல்லாள மகாராசன்கோபுரம், திருமஞ்சனக்கோபுரம், கிளிக்கோபுரம், கட்டைக்கோபுரம், மேற்குக்கோபுரம், அம்மணி அம்மாள் கோபுரம், ரிஷி கோபுரம் எனவும் காணப்படுகின்றன. கோபுரங்கள் ஒற்றை எண்ணிக்கை கொண்ட கலசங்களைக் கொண்டு விளங்குவதாக அமையும். மூன்று தளங்களைக் கொண்டவை மூவகை அவத்தைகளையும், ஐந்து தளங்கள், ஐம்பொறிகளையும், ஏழு தளங்களைக் கொண்ட கோபுரங்கள், ஐம்பொறிகளுடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியவற்றைக் குறிக்கும்.

ஐம்புல அனுபவங்களிலிருந்து படிப்படியாக எம்மை விடுவித்து, மனதைப் பரம்பொருளிடத்தில் உள்முகமாகச் செலுத்த கோபுர தரிசனம் ஆற்றுப்படுத்துகின்றது. கீழே அகன்று மேலே செல்லச் செல்ல படிப்படியாக ஒடுங்கிச் செல்லும் கோபுர அமைப்பானது, இறைவழிபாட்டினால் படிப்படியாக ஏற்படும் மனவொருமைப்பாட்டினைக் குறிப்பதாக அமையும்.

இத்தகைய பெருமைவாய்ந்த கோபரம், மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்திற்கும் வேண்டும் எனப் பலரும் விரும்பினர். இவர்களுள் முக்கியமானவர் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளாவார். இவ்வாலய விழாக்களுக்கு திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் அழைக்கப்பட்டு பிரசங்கம் செய்துள்ளார்கள். கந்தப்புராண விரிவுரை, மகாபாரதவிரிவுரை, இராமாயணவிரிவுரை, பெரியபுராணவிரிவுரை எனப் பலநாட்கள் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் பிரசங்கம் செய்துள் ளார்கள்.

***வளரும்...***

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அரசியல் விவாதங்களில் காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பிரச்சினைகள் முன்னுரிமை பெறவேண்டும்

## மேதினப் பொதுக்கூட்டத்தில் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



காலநிலை மாற்றம் சகல தொழில் துறைகளையும் மிக மோசமாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது. தொழிலாளிகள் தங்கள் தொழில் வாய்ப்புகளை இழந்து வீதிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவைபற்றி அரசாங்கமோ, அரசியல் கட்சிகளோ சிந்திப்பதாக இல்லை. உழைப்பாளர் தினப் பொதுக் கூட்டங்கள் வெற்று அரசியல் கோசங்களாலேயே நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலை மாறவேண்டும். அரசியல் விவாதங்களில் காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பிரச்சினைகள் முன்னுரிமை பெறவேண்டும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் செம்பசுமை மேதினப் பொதுக் கூட்டம் 01.05.2024 அன்று கொக்குவில் பொற்பதி அறிவாலயத்தில் நடைபெற்றது. இப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றியபோதே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பூமி நாளுக்குநாள் சூடேறிக் கொண்டிருக்கிறது. கடந்த 173 ஆண்டுகால வானிலை வரலாற்றில் 2023 ஆம் ஆண்டு மிகவும் வெப்பமான ஆண்டாகப் பதிவாகியிருக்கின்றது. பூமியின் வெப்பநிலை கைத்தொழில் புரட்சிக்காலத்தில் பூமி கொண்டிருந்த வெப்பநிலையைவிட 1.5 பாகை செல்சியஸ் அளவால் மட்டுமே உயரலாம் எனச் சூழல் விஞ்ஞானிகள் எச்சரித்திருக்கிறார்கள். பூமியைச் சூடுபடுத்தும் எமது நடவடிக்கைகளை நாம் உடனடியாகக் கட்டுப்படுத்தாவிடில் பூமியின் வெப்பநிலை வெகுவிரைவில் இந்த எல்லையைக் கடந்துவிடும். மோசமான பேரழிவுகளை ஏற்படுத்தப்போகும் இந்த வெப்ப உயர்வு இதுவரையில் எந்த அரசியல்வாதியையும் உலுக்கியதாகத் தெரியவில்லை.

நாம் காலநிலை மாற்றத்தின் பாதகங்களை ஏற்கனவே வெப்ப அலைகளாகவும், குறுகிய நாளில் கொட்டித் தீர்க்கும் அடைமழைகளாகவும் அனுபவிக்கத் தொடங்கி விட்டோம். காலநிலை மாற்றத்தால் ஒரு புறம் விவசாயம் பொய்த்துப் போக, இன்னொருபுறம் கடலில் மீன்கள் காணாமல் போய்க் கொண்டிருக்கின்றன. இன்று தென்னைகளைத் தாக்கும் வெள்ளை ஈக்களின் படையெடுப்பும் காலநிலை மாற்றத்தின் விளைவுகளில் ஒன்றுதான். ஆனால், இவற்றையெல்லாம் தற்செயலான, தனித்தனியான நிகழ்வுகளாகவே நம்மில் பெரும்பாலானோர் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றை ஒன்றுடனொன்று தொடர்புபடுத்திப் பார்க்கும் அளவுக்குச் சமூகம் சூழல் சார்ந்து இன்னும் போதிய அறிவூட்டப்படவில்லை.

இந்திய உச்ச நீதிமன்றம் காலநிலை மாற்றங்களின் பாதிப்புகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொருவரினதும் அடிப்படை மனித உரிமை என்று அண்மையில் தெரிவித்திருக்கிறது. இந்தியத் தேர்தல் ஆணையம் தேர்தல் விஞ்ஞாபனங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான தமது திட்டங்களைக் கட்சிகள் அறிவிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொண்டுள்ள இலங்கையில் எந்தவொரு வேட்பாளரும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான இனநீதியை முன்வைக்கப் போவதில்லை. சூழல் நீதிக்கேனும் மதிப்பளித்துத் தேர்தல் விஞ்ஞாபனங்களில் காலநிலை மாற்றப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்த வாக்குறுதிகளையேனும் இடம்பெறச் செய்வதற்குத் தேர்தல் ஆணையம் ஆவன செய்ய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# மாணவர் போசாக்கின்மைக்கு காரணம் வறுமை அல்ல

## உணவு முறையில் மாற்றம் அவசியம் என்கிறார் வேலணை பிரதேச செயலர் சிவகரன்



கல்வி மட்டும் ஒரு பிள்ளைக்கு ஆரோக்கியமான வாழ் நிலை மட்டத்தை கொடுத்துவிடாது.

கல்வியுடன் விளையாட்டும் இணைந்தே அந்தப் பிள்ளையை பூரணமடைந்தவனாக உருவாக்குகின்றது என சுட்டிக்காட்டிய தீவகம் தெற்கு வேலணை பிரதேச செயலாளர் கைலாயபிள்ளை சிவகரன் போசாக்கு மட்டமே ஒரு பிள்ளையின் கல்வியையும் விளையாட்டு துறையையும் நிர்ணயிக்கின்றது என்றும் சுட்டிக்காடியுள்ளார்.

வேலணை மத்திய கல்லூரியின் வருடாந்த விளையாட்டு திறமை காண் நிகழ்வு பாடசாலையின் முதல்வர் அன்ரன் ரோய் தலைமையில் கடந்த 30.04.2024 செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி சிறப்பித்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் - வேலணைப் பிரதேசத்தின் மாணவர் மத்தியிலான போசாக்கின்மைக்கு வறுமை ஒருபோதும் காரணமாக இருக்காது. அவர்கள் உண்ணும் உணவின் தரங்கள் அல்லது பழக்கங்கள் தான் அதற்கு முழுமையான காரணமாகின்றது.

அத்துடன் இந்த நிலைக்கு பெற்றோரே முக்கிய பொறுப்பானவர்களாகவும் இருக்கின்றனர்.

ஏனெனில் இப்பிரதேசத்தின் மாணவர் இடையே போசாக்கு மட்டத்தை அறிந்து கொள்ளும் வகையில் பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வெளியான தகவல் எம்மை ஆச்சரியமடைய செய்துள்ளது.

குறிப்பாக அந்த ஆய்வின்படி பாதிக்கப்பட்ட 90 வீதத்துக்கும் அதிகமான பிள்ளைகளின் பெற்றோர் வறுமைக்கோடின் கீழ் அல்லாத நிரந்தர வருமானம் கொண்டவர்களாகவும் பணம் படைத்தவர்களாகவுமே இருந்துள்ளனர்.

குறித்த ஆய்வின் பெறுபேறுகளுக்கமைய அவர்களது உணவுப் பழக்கவழக்கங்களே இந்த நிலைக்கு முக்கிய காரணமாகியுள்ளதை அறிய முடிந்தது.

இதனடிப்படையில் பணம் இருக்கின்றது என்பதற்காக ஆடம்பரமான ஆரோக்கியமற்ற உணவுகளை உண்பதால் பயனில்லை என்பதும் உறுதியாகியுள்ளது. அத்துடன் பிள்ளைகளின் ஆரோக்கியத்தை வளர்க்க பெற்றோர் தமது அவசர உணவு பழக்க வளக்கத்தில் மாற்றத்தை கொண்டுவருவதும் அவசியமாக உள்ளது.

அந்தவகையில் பிள்ளைகளின் கல்வித் தரநிலையையும் விளையாட்டு உள்ளிட்ட ஏனைய செயற்பாடுகளையும் ஆரோக்கியமான உடற்கட்டமைப்பையும் நிர்ணயிப்பது ஊட்டச்சத்துள்ள உணவுப் பழக்க வழக்கமாகவே உள்ளது.

அதனடிப்படையில் பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் ஒவ்வொரு பிள்ளைகளினதும் பெற்றோர் முழுமையான பங்கெடுப்பது அவசியம்.

இதே நேரம் விளையாட்டை விளையாட்டாக விளையாடுவதும் அவசியம். அதே நேரம் விளையாட்டை விளையாட்டாக விளையாடாதிருப்பதும் அவசியமானது.

அந்தவகையில் இந்த விளையாட்டு திறமைகாண் நிகழ்வானது வெற்றி பெறுவதற்காக மடுமல்ல கூட்டிணைந்த உறவுகளுடன் கூடிய சிறந்த மனப்பாங்கையும் உருவாக்கிக் கொள்ளும் களமே அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு இலங்கை தமிழரசு கட்சி தலைவர் சிவஞானம். சிறிதரன் புகழ் அஞ்சலி

**- நடராசா லோகதயாளன்**

ஈழத்தையும், ஈழத்தமிழர்களையும் ஆழ நேசித்த தமிழ்த்தேசியவாதியான திரு. மா.க. ஈழவேந்தன் ஐயாவின் மறைவு வருத்தமளிக்கிறது என தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

"யாழ்ப்பாணத்தில் கொழும்புத்துறையில் பிறந்த இவர், மண்டைதீவு மண்ணின் முன்னாள் கிராமசபைத் தலைவர் கைலாயபிள்ளை ஐயாவின் மூத்த மகளான அருளாம்பிகையை திருமணம் செய்ததன் மூலம் தீவகத்துக்கும் தனக்குமான இறுக்கம் மிகுந்த பிணைப்பை உருவாக்கிக் கொண்டார். இலங்கை மத்திய வங்கியில் பணியாற்றி, பின்னர் பொருளாதார ஆய்வுத் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராக கடமையாற்றி ஓய்வுபெற்றார்.

அரசதுறையின் உத்தியோகத்தராக இருந்துகொண்டே அரசின் இனவாத அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடிய இவரது வாழ்க்கைப் பயணம் எம்மில் பலருக்கு ஒரு கனத்த செய்தியைச் சொல்ல வல்லது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின்; ஆரம்பகால உறுப்பினர்களுள் ஒருவராகவும், தமிழரசுக் கட்சி - தமிழர் விடுதலைக் கூட்டணியின் பங்காளிக் கட்சியாக இருந்த காலத்தே அதன் கொழும்புக் கிளைத் தலைவராகவும் இருந்து ஈழவேந்தன் ஐயா ஆற்றிய அரசியற்பணி மிகக் கனதியானது. ஈழவிடுதலைப் போரின் மீதும் அதன் நியாயப்பாட்டின் மீதும் அதீத பற்றுறுதி மிக்கவராக இருந்த காரணமாகவே கனகேந்திரன் என்னும் தனது இயற்பெயரைக்கூட ஈழவேந்தன் என மாற்றம் செய்து, அதனையே தனது அடையாளமாகவும் மாற்றியிருந்தார்.

தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வென்பது தமிழீழமாக மட்டுமே இருக்க முடியும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்த ஈழவேந்தன் ஐயா, அதனையே கொள்கையாகக் கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான காவலூர் வி. நவரத்தினத்தால் உருவாக்கப்பட்ட தமிழர் சுயாட்சிக் கட்சியில் இணைந்து, அந்தக் கொள்கைக்காகவே அயராதுழைத்தவர்.

இனக்கலவரங்களின் தோற்றுவாய்கள் விரிவடையத் தொடங்கிய 1981களில் தமிழகம் சென்றிருந்த இவர், விடுதலைப்புலிகளுக்கு மருந்து கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் 1997 இல் கைதுசெய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் சிறையிருந்து பின் நாடு திரும்பினார். 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டு அரசியற்பணியாற்றிய ஈழவேந்தன் ஐயா, போர் மௌனிக்கப்பட்டதன் பின்னரான அரசியல் நீரோட்டத்திலும் தன்னை இணைத்துக்கொண்டதன் அடிப்படையில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினராக இருந்தும் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை கோரிய பயணத்தின் பங்குதாரராக பல்வேறு பணிகளை ஆற்றியுள்ளார்.

முதுமை, அது தந்த இயலாமை உள்ளிட்ட உடல்வாதைகள் அனைத்தையும் புறந்தள்ளி தனது 91வது வயது வரை ஈழத்தமிழர்களுக்காகவும், தமிழ்த் தேசிய இனத்தின் நிரந்தர அரசியல் தீர்வுக்காகவும் தான் கொண்ட கொள்கையினின்று வழுவாத பெருமனிதனாக இதயசுத்தியோடு உழைத்த மாமனிதர் ஈழவேந்தன் ஐயாவின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திப்பதோடு, அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது பிள்ளைகளான யாழினி, எழிலினி மற்றும் உறவினர்களின் துயரில் நானும் பங்குகொள்கிறேன்" என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தனது அனுதாபச் செய்தியில் கூறியுள்ளார்.

கனடிய செய்திகள்
Canadian News

# "ஜனநாயக நெறிமுறைகளுக்கு அமைவாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பலப்படுத்தப்பட வேண்டுமென்று நான் தொடர்ச்சியாகக் கூறி வந்திருக்கிறேன்"

## ஸ்காபுறோவில் நடைபெற்ற பொதுமக்கள் - ஊடகவியலாளர்கள் சந்திப்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி. தனது தன்னிலை விளக்கத்தில் தெரிவிப்பு

ஜனநாயக நெறிமுறைகளுக்கு அமைவாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பலப்படுத்தப்பட வேண்டுமென்று நான் தொடர்ச்சியாகக் கூறி வந்திருக்கிறேன். வளர்ச்சி நிலைக்கு ஏற்ப மாற்றங்கள் அவசியம் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறேன். என்னைப் போலவே இன்னும் பலரும் கருத்து கொண்டவர்களாக இருந்தார்கள். ஆனால் எமது வேண்டுகோள்களை சரியாக விளங்கிக் கொள்ள முன்வராதவர்களாகிய ஒரு குழுவினர் இவ்வாறான கோரிக்கைகளை விடுத்தவர்களை இந்த உயரிய அமைப்பின் செயற்பாடுகளிலிருந்து எம்மை விலக்கி வைக்க முடிவெடுத்துள்ளார்கள். அதன் விளைவே, நான் உட்பட பல வேட்பாளர்களின் தேர்தல் மனுக்கள் அந்தக் குழுவினரால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவித்தார். நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சரும் தீவிர பற்றுக் கொண்டவரும் கனடாவில் இந்த கட்டமைப்பின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்துப் பணியாற்றியவருமான நிமால் விநாயமூர்ததி தெரிவித்தார்.

ஸ்காபுறோவில் புதன்கிழமை ஜேசிஸ்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற பொதுமக்கள் - ஊடகவியலாளர்கள் சந்திப்பில் நிமால் விநாயகமூர்த்தி. தனது தன்னிலை விளக்கத்தில் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்விற்கு ரொறன்ரோ பெரும்பாகத்தில் உள்ள தமிழ் ஊடகங்களின் பிரதிநிதிகள் பிரதம ஆசிரியர்கள் மற்றும் செய்தியாளர்கள் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் கல்வியாளர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு சந்திப்பு நிகழ்வு முடியும் வரை காத்திருந்து கருத்துக்களைப் பகிர்ந்து சென்றார்கள்.

மேலும் அங்கு சமூகமளித்திருந்த அனைத்து ரொறன்ரோ பெரும்பாகத்தில் இயங்கும் ஊடகங்களின் பிரதிநிதிகளும் பிரதம ஆசிரியர்களும் செய்தியாளர்களும் கூட்டாக எழுந்து நின்று எதிர்வரும் 5ம் திகதி நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கனடிய தேர்தல் ஆணையம் வாக்களிப்பு இடம்பெறவுள்ள தேர்தலை தள்ளிப்போட வேண்டும் என்றும் அத்துடன் நியாயமான காரணங்களை தெரிவிக்காமல் நிராகரிக்கப்பட்ட வேட்பாளர்களின் மனுக்களை ஏற்றுக்கொண்டு அவர்கள் அனைவரையும் தேர்தலில் போட்டியிட அனுமதிக்க வேண்டும் என்று கூட்டாக கோரிக்கை விடுத்தார்கள்.

மேற்படி சந்திப்பில் திரு நிமால் விநாயகமூர்த்தியோடு பிரதான மேசையில் நியாயமான காரணங்களை தெரிவிக்காமல் நிராகரிக்கப்பட்ட வேட்பாளர்களில் பலர் இருபக்கமும் அமர்ந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அன்றைய சந்திப்பில் எமது தமிழர் சமூகத்தில் பல ஆண்டு காலமாக மக்கள் சேவையாற்றி வருகின்ற பலரும் உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.





மேற்படி பொதுமக்கள் சந்திப்பில் தனது சார்பிலும் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பெற்ற வேட்பாளர்கள் சார்பிலும் விளக்கமளிக்கும் வகையில் உரையாற்றிய நிமால் விநாயகமூர்த்தி தனது உரையில் பின்வருமாறு தெரிவித்தார்.

"அன்பானவர்களே..

தமிழீழ மக்களின் அரசியல் எதிர்காலம் பெரும் நெருக்கடியில் இருக்கும் ஒரு காலகட்டத்தில், இவ்வாறானதொரு ஊடக சந்திப்பை மேற்கொள்ள வேண்டி இருப்பது தொடர்பில் - நான், உண்மையிலேயே பெரும் கவலை அடைகிறேன். ஆனாலும் எங்களுடைய மௌனம் தமிழினத்துக்கு மேலும் பேராபத்தை ஏற்படுத்திவிடலாம் என்னும் உந்துதலின் காரணமாக உண்மைகளை உரைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இவ்வாறானதொரு ஊடக சந்திப்பை நாம் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது உண்மையிலேயே வருந்தத்தக்கது. எனினும் பல்வேறு நீண்ட சிந்தனைப் பரிமாற்றங்களின் பின்னர் இன்று நாம் உங்களைச் சந்திக்கும் இந்த முடிவை மேற்கொண்டோம்.

2009 இல், எமது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட போது, உலகெங்கும் சிதறிக்கிடந்த தமிழினம் நிலை குலைந்து போனது. பெருந் துயரொன்று தமிழனத்தை ஆட்கொண்டது. அதுவரையில் வெளிச்சத்தை மட்டுமே கர்வத்துடன் உற்று நோக்கிக் கொண்டிருந்த நாம், ஒரே நாளில் இருள் வெளி ஒன்றுக்குள் தள்ளப்பட்டு விட்டதான உணர்வுக்கு ஆளானோம். அடுத்து என்ன செய்வது என்னும் கேள்வியே எங்கள் அனைவரையும் அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

அவ்வாறானதொரு சூழலில் தான் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் எங்களுடைய புதிய நம்பிக்கையானது.

தாயகத்தில் நமது கனவுகளை முன்கொண்டு செல்லுவதற்கான கதவுகள் அடைக்கப்பட்டாலும் கூட, புலம்பெயர் தேசங்களில் ஒரு தமிழீழ அரசை நிறுவி, அதன் மூலம் ஜனநாயக நெறி முறையின் கீழ், புதிய அரசியல் பயணமொன்றை மேற்கொள்ள முடியும் என்று நம்பினோம். அதற்காக எங்களை அர்பணிக்க உறுதி பூண்டோம். ஆனால் எங்கள் எதிர்பார்ப்பு நிராசையானது.

தாயக நிலத்தில் தனி அரசு அமைக்கும் நமது கனவுகளுக்கான கதவுகள் 2009இல் அடைக்கப்பட்டாலும், புலம்பெயர் தேசங்களில் ஒரு நிழல் அரசை நிறுவி, அதன் மூலம் அரசியல் பயணமொன்றை ஜனநாயக நெறி முறையின் கீழ் மேற்கொள்ள முடியும் என்று தமிழர்கள் நாம் ஒரு சமூகமாகத் தீர்மானித்தோம். மாறிக் கொண்டே வரும் உலக ஒழுங்கிற்கு, தாராளவாத - முற்போக்கு - மரபுசார் ஜனநாயக வழிமுறைகளுக்கும் அமைவாக நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அதிகாரத்துவ கட்டமைப்பினை உலகளாவிய நிலையில் உருவாகிவிட 2009இல் அனைவரும் திடசங்கல்பம் எடுத்துக் கொண்டோம்.



அந்த பயணத்தின் இறுதிக் கட்டம் சுதந்திர தமிழீழ அரசு ஒன்றை தாயக மண்ணில் நிர்மாணிப்பதில் முடியும்!

அந்த நம்பிக்கையின் வழிநின்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்ற உன்னதமான கட்டமைப்பை உருவாக்க பலரும் மிகக் கடினமாக உழைத்து வந்திருக்கிறோம் என்பதை இந்த இடத்தில் உறுதியாகச் சொல்லி வைக்க விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரை கடந்த பதினான்கு வருடங்களாக தொடர்ந்து வரும் எனது பங்களிப்பும் அந்த வகையில் மட்டுமே பார்க்கப்பட முடியும்.

இந்த பின்னணியில், நடக்கவிருக்கும் தேர்தலுக்காக சமர்ப்பிக்கப்பட்டு இருந்த எனது வேட்புமனு முறையான காரணங்களின்றி நிராகரிக்கப் பட்டிப்பதை நீங்கள் அறிவீர்கள். சில அபாண்டமான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், நானும் என்னைப் போலவே சிலர் திட்டமிட்டு தேர்தல் களத்தில் இருந்து வெளியேற்றப்பட்டிருக்கின்றோம். இந்த வருத்தமான செய்தியை உத்தியோகபூர்வமாக பகிர்ந்து அதற்கான காரணங்களை விளக்குவதே சந்திப்பின் நோக்கமாகும்.

நாம் நம்பிக்கை வைத்திருந்த அரசாங்கத்தில் பொறுப்பில் இருக்கும் ஒரு சிறு குழுவினரால், நாம் கட்டியெழுப்ப வரும் ஜனநாயக நெறிமுறைகளுக்கு மாறாக நடத்தப்பட்டிருக்கும் தவறான நடவடிக்கை இது.

நண்பர்களே..

எனக்கு நடத்தப்பட்ட இந்த விதிமீறலுக்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. இது குறித்து தன்னிலை விளக்கமொன்றை அளிக்க விரும்புகிறேன்.

ஜனநாயக நெறிமுறைகளுக்கு அமைவாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பலப்படுத்த வேண்டுமென்று நான் தொடர்ந்து கூறி வந்திருக்கிறேன். வளர்ச்சி நிலைக்கு ஏற்ப மாற்றங்கள் அவசியம் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறேன். என்னைப் போலவே இன்னும் பலரும் கருத்து கொண்டவர்களாக இருந்தார்கள்.

நாடு கடந்த அரசாங்கத்தில் மாற்றங்கள் தேவையென்று ஏன் நான் சிந்தித்தேன்?

கடந்த பதினான்கு வருடங்களாக தமிழ் மக்களின் அபிலாசைகளை வெற்றி கொள்வது, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் குறிப்பிடக்கூடிய அளவுக்கு முன் நகர முடியவில்லை. சூழலுக்கு ஏற்ப கருத்துக்களைச் சொல்லவதற்கும் சில மனித உரிமை செயல்பாடுகளுக்கும் அப்பால், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் இராஜதந்திர ரீதியாக தொடர்புகளை ஏற்படுத்தி தனக்கான ஓர் அங்கீகாரத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை. இதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

நாடு கடந்த அரசாங்கம் பெரும் மக்கள் ஆதரவு கொண்ட பலம் வாய்ந்த சக்தியாக உருவாக வேண்டும். அதை நானும், என்னைப் போல இம்முறை வெளியேற்றப்பட்டிருக்கும் ஏனைய சகாக்களும் வெளிப்படையாக, ஆனால் கட்டமைப்பிற்கு எந்தவிதமான குந்தகமும் வராத வகையில் உள்ளக விவாதங்களாக முன்வைத்தோம். விவாதங்களை முன்வைத்தாலும், எனது முழு உழைப்பையும், நேரத்தையும் கட்டமைப்பின் முன்னேற்றத்திற்கான அர்ப்பணிப்போடு செய்து வந்ததை உங்களில் பலரும் அறிவார்கள்.

ஆனாலும் எமது தொடர்ச்சியான பங்களிப்புக்கள் இருந்தும் கூட நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் எந்த முன்னேற்றத்தையும் பெரிதாக ஏற்படுத்த முடியாமல் இருந்தது. அதற்கான முயற்சிகளை மேறகொள்ளுமாறு நான் தொடர்ந்து வலியுறுத்தினேன் - ஆக்கபூர்வமான ஆலோசனைகளை முன்வைத்தேன் - ஆனால் அவை எவையுமே கருத்தில் கொள்ளப்படவில்லை.





(தொடர்ச்சி _27_ பக்கம்)

(26 பக்கத் தொடர்ச்சி)

## "ஜனநாயக நெறிமுறைகளுக்கு அமைவாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பலப்படுத்தப்பட வேண்டுமென்று நான் தொடர்ச்சியாகக் கூறி வந்திருக்கிறேன்"

### ஸ்காபுறோவில் நடைபெற்ற பொதுமக்கள் - ஊடகவியலாளர்கள் சந்திப்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் உறுப்பினர் நிமால் விநாயகமூர்த்தி. தனது தன்னிலை விளக்கத்தில் தெரிவிப்பு

இவ்வாறானதொரு பின்புலத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியே ஆகவேண்டுமென்னும் இறுக்கமானதொரு தீர்மானத்திற்கு வரவேண்டியிருந்தது. அதன் அடிப்படையில் தான் அண்மைய ஆண்டுகளில் எனது பல நடவடிக்கைகள் இருந்தன. நிதி அமைச்சராக எனது பங்களிப்பை சிறப்புற வழங்கியது மட்டுமல்லஇ கடந்த முறைபிரதமர் பொறுப்புக்கு நான் போட்டியிட்டதும் அதற்காகவே ஆகும். நான் போட்டியிட்டது பிரதமர் பதவி தேடி அல்ல. மாற்றங்களை உருவாக்குவதற்கு இதுபோன்ற போட்டியும் ஒரு தேவைதான் என்பதை ஆழ்ந்து உணர்ந்த காரணத்தாலேயே ஆகும்.

இந்த நேரத்தில்தான் அடுத்த அரசவைக்கு தேர்தல் அழைப்பு வெளியானது. இந்தத் தேர்தலில் போட்டியிட எனது விண்ணப்பத்தை சமர்ப்பித்தேன். ஆனாலும் வலுவான காரணங்கள் இல்லாமல் எனது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டு இருக்கிறது. இம்முறை எனது வெற்றி பிரகாசமாக இருந்த நிலையில் என்னை இந்த இலட்சியத்திலிருந்து வெளியேற்றும் ஒரு இரகசிய உத்தியாகவே, எனது வேட்புமனு நிராகரிக்கப் பட்டிருப்பதை நோக்குகிறேன்.

ஆம். நாடு கடந்த அரசாங்கத்தை சீர் செய்து, அதன் மூலம் தனிநாட்டை அடையும் எமது இலட்சியத்தை விரைவாக்கும் எமது உன்னதமான முயற்சி, இன்று சிலர் சதியால் பின்னடைவைச் சந்தித்திருக்கிறது. உண்மையில் எங்களை வெளியேற்றுவதாக எண்ணிக் கொண்டு, தமிழினத்தின் இலட்சியத்தை சீர்குலைக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டிருக்கின்றனர். எங்களை வெளியேற்றியதால் அவர்கள் வெற்றி பெறவும் இல்லை - வெளியேற்றப்பட்டதால் நாங்கள் தோல்வியடைந்ததாக நாம் கருதுவதுமில்லை.

நாம் எமது தாயக மக்களின் விடுதலைக்காக ஆற்ற உள்ள பணிகளை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது மட்டும் உண்மை. நாம் தொடர்ந்து எமது மக்களின் இலட்சிய தாகத்திற்காக பணியாற்றுவோம் என்பதில் எந்த மாற்றமும் இல்லை.

இம்முறை தேர்தல் நியமன விடயத்தில் கனடாவுக்கான தேர்தல் ஆணை-யகம் சுயாதீனமாக இயங்கவில்லை என்பது தெளிவாகிறது. மாறாக தேர்தல் ஆணையகம் அமைச்சரவை அல்லது பிரதமர் பணிமனையால் இயக்கப்படுகின்றது என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

ஆகவே கனடாவுக்கான தேர்தல் ஆணை-யகம் கலைக்கப்பட்டு, புதிய ஆணையாளரை நியமித்து, மீண்டும் கனடாவுக்கான தேர்தலை நடத்தி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நேர்மையை காப்பதுடன், எனக்கும் என்போன்று பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதியையும் பெற்றுத் தந்தது, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஜனநாயக பண்பான பெறுமானத்தையும் காக்கும் பொறுப்பு மக்கள் அனைவருடையதும் ஆகும். இந்த கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை ஏற்கனவே தலைமை தேர்தல் ஆணையருக்கு அனுப்பி உள்ளேன்.

தனிப்பட்ட ரீதியில் எனக்கு நடத்தப்பட்ட இந்த விதிமீறல் நடவடிக்கை எனது தோல்வியல்ல. இது ஒரு சில தனி நபர்களின் வெற்றி தோல்வி தொடர்பான பிரச்சினை கூட அல்ல. மாறாக இது, புலம்பெயர் சூழலில் ஒரு பலமான தமிழீழ அமைப்பொன்றை, ஜனநாயக ரீதியில் கட்டியெழுப்ப வேண்டும் என்று கனவு கண்ட, உங்கள் அனைவரதும் தோல்வியாகும்.

மேற்குலக நாடுகளில், செழுமையான ஜனநாயக அரசியல் சூழலுக்குள் வாழ்கின்ற போதிலும் கூட, எங்களால் ஜனநாயக ரீதியி-ல் சிந்திக்க முடியவில்லை என்பதையே இது காண்பிக்கிறது.

நானும், என்னோடு இணைந்து குரல் கொடுக்கும் எனது சகாக்களும் இந்த இடத்தில் ஒன்றை வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம். தங்களின் உறவுகளை தொலைத்துவிட்டு, எங்களுக்கு நீதி கிடைக்காதா என்னும் ஏக்கத்துடன் தவித்துக் கொண்டிருக்கும் எங்கள் உறவுகளுக்கு நாம் பதில் சொல்லியே ஆகவேண்டும். தொடர்ந்து அசமந்தப் போக்குடன் அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருக்க கூடாது.

எமக்கென்று ஒரு அரசாங்கம் நம் தாயகத்தில் அமைவது என்பது நம் அனைவருக்குள்ளும் உறைந்திருக்கும் இலட்சிய தாகம் ஆகும் என்பதை மட்டும் இந்த இடத்தில் அழுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு முட்டுக்கட்டை போடும் எவரையும் வரலாறு தோற்கடித்து விடும் என்பதையும் உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

துயர் நிறைந்த மே மாதத்தின் முதலாவது நாள் இன்று.

உலகத் தமிழர்களே ஒன்றுபடுங்கள். எமது மாவீரர்கள் தியாகத்தை நினைவில் ஏந்தி, இலட்சிய உறுதிப்பாட்டுடன், எம் இனத்தின் பூரண விடுதலைக்காக எம்மால் முடியுமான வரையில் உழைப்பதற்கான உறுதிப்பாட்டுடன் நாம் இருக்கிறோம். நாம் தோற்கவில்லை - தோற்கப் போவதுமில்லை. ஏனெனில், தமிழீழ இலட்சியத்தில் எவரும், எவரையும் தோற்கடிக்க முடியாது.

தமிழரின் தாகம் தமிழீழ தாயகம்!"




OM NAMO NARAYANA

**125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்**

**N. P. ராஜசேகர்**

**Now In: 16 TREELINE COURT MARKHAM L3S 3T8 CANADA**

**001 416 904 6278**

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

**பரிகார காண்டங்கள்**

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது
குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

**03-05-2024 வெள்ளி தொடக்கம் 09-05-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** வாழ்க்கையில் முன்னேற்றம் தரும் வாரம். தேக ஆரோக்கியம் கூடும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்ப்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகரிக்கும். உற்சாகம் களைகட்டும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். விரும்பியது நிறைவேறும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர்விடும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். வாழ்க்கை துணையால் வளம் பெருகும். பொருளாதாரம் மேம்படும். கடன் பாக்கிகள் வசூலாகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. மனிதநேயம் மிகுதியாகும். வணிகத்தொழில் வளம் கூடும். உடல்நிலையில் கவனம் தேவை. சாதக சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் உண்டு. பழையகடன் தீரும். விபரீத எண்ணம் விலகும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். துணிவோடு செயல்படுவீர்கள். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். பெற்றோர் ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். இடமாற்றம் நன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 3,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,B




**ரிஷபம்:** ஆன்மீக எண்ணம் அதிகரிக்கும் வாரம். உள்ளம் மகிழும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். திடீர் செலவு ஏற்படும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். தன வரவுகள் தடைபடும். புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. வங்கி சேமிப்பு உயரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். விவேகமான பேச்சால் வீண் வம்பு அகலும். உடன்பிறப்பால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். உறவினர் ஒற்றுமை பலப்படும். பொறுப்புகள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புகள் உருவாகும். மேலதிகாரியின் உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: வினை தீர்க்கும் பிள்ளையார்
அதிர்ஷ்ட எண்: 2,9,8,5
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**மிதுனம்:** வருமானமும் வெகுமானமும் சேரும் வாரம். புதுமைகள் நிறைந்த காலம். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பாராட்டுக்கள் கிடைக்கும். உத்தியோக வாய்ப்புண்டு. மன அமைதி கூடும். பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மை உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். கல்வியில் கவனம் தேவை. சந்தோஷம் அதிகரிக்கும். குழந்தைகளால் பெருமை சேரும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். வெற்றிகள் குவியும். பாராட்டுக்கள் அதிகமாகும். உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். மங்கள செய்தி வரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாணவர் உற்சாகம் கூடும். வியாபாரம் லாபம் தரும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். திட்டம் வெற்றி பெறும். கலைத்துறை ஆர்வம் கூடும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். குதூகலமான எண்ணம் உருவாகும். கவனமுடன் செயல்பட வேண்டும். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். பாராட்டுகள் உயரும். திட்டங்கள் எளிதாகும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. இசையார்வம் கூடும். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். எதிரிகளின் தொல்லை குறையும். வாக்குவாதங்கள் உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: எட்டுக்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,7,6
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**கடகம்:** எதிர்ப்புக்களால் பொறுப்பு கிடைக்கும் வாரம். விறுவிறுப்பான காலம். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன் கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். பதவி உயர்வு தடைப்படும். நீண்டநாள் பிரச்சனை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் கவனம் தேவை. பொருளாதார சிக்கல் நீடிக்கும். பெண்களுக்கு கவனம் தேவை. தனவரவு உண்டு. மறைமுக எதிர்ப்பு விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. குடும்ப கௌரவம் உயரும். நாட்பட்ட நோய்களுக்கு தீர்வு கிடைக்கும். நினைத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். பூமி வாங்கும் யோகம் உண்டு. செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு உண்டாகும். மனைவி சச்சரவுகள் தீரும். தாய் வழி உறவில் கவனம் தேவை. உடல்நலத்தில் அக்கறை தேவை. எதிரிகள் பலம் குறையும். நல்லவர் நட்பு கிட்டும். பயணம் அனுகூலம் தரும். பொருள் இழப்பு ஏற்படும். புதிய வேலை முயற்சி பலன் தரும். உல்லாசப் பயணம் இனிக்கும். பண நடமாட்டம் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடக்கும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. கொடுக்கல் வாங்கலில் சுமூக நிலை காணப்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாகணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377





**சிம்மம்:** பெருமைகள் சேரும் வாரம். விவசாயிகள் பயன்பெறும் வாரம். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடவும். தெம்பும், தைரியமும் கூடும். உடல் நலம் சிறக்கும். முகப்பொலிவு கூடும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றொர் உடல் நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். விவசாயிகள் பயன் பெறுவர். சகோதர வழியில் கவனம் தேவை. தர்மச்சிந்தனை மேலோங்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். காதலர்கள் தம்பதியாவார்கள். பங்குச்சந்தையில் லாபம் புரளும். செல்வாக்கு மேம்படும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவச் செலவுகள் கூடும். ஆடம்பரப் பொருள் சேரும். பெரியோர்களின் ஆதரவுப் பெருகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். மனம் மகிழும். பதவி உயர்வு தாமதமாகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். குடும்ப அன்யோன்யம் சீராக இருக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பகவதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,G




**கன்னி:** வகையான வாழ்வமையும் வாரம். உடல்பொலிவு கூடும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். பதவியில் உயர்ந்த நிலை உண்டு. நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி நிலவும். கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். இரகசியம் காப்பது நல்லது. ஆடம்பர எண்ணம் மேலோங்கும். ஆரோக்யம் சீராகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சியில் இருந்து பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பரால் இனிய செய்தி வந்தடையும். சுபவிரயம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். புதியச் சொத்துக்கள் சேரும். விலகி சென்றவர் திரும்பி வருவர். திருமண பேச்சு முடிவிற்கு வரும். வரவு திருப்தி தரும். மருத்துவச் செலவுகள் குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு கூடும். கடன் விஷயத்தில் விடுதலைப் பெறுவீர்கள். செயல்களில் கவனமுடன் இருக்க வேண்டும். எதிரிகளால் பலன் கிடைக்கும். வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். பிள்ளைகள் வழியில் செலவுகள் அதிகரிக்கும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவுகள் ஏற்படும். நன்மைகள் அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 3,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,I




**துலாம்:** பெண்களால் ஆதாயம் சேரும் வாரம். வறுமைகள் அகலும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். சுறுசுறுப்பு அதிகமாகும். ஆரோக்கியம் அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். குடும்பத்தில் மேன்மை உண்டு. திருப்தி அதிகமாகும். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். தந்தையின் உடல் நலம் கவனம் தேவை. எண்ணங்கள் பூர்த்தியாகும். வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பணியாட்கள் ஆதரவு பெருகும். பாதகமான சூழ்நிலைகள் விலகும். குடும்ப மேன்மைகள் உருவாகும். உடல்சோர்வு நீங்கும். ஆடம்பர பொருள் சேரும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். வெற்றி வீடு தேடி வரும். முத்தான வாய்ப்பு பெருகும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையகடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,8,6
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,U




**விருச்சிகம்:** முத்தான வாய்ப்பு பெருகும் வாரம். சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையகடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மாறும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். விபரீத போக்கு மறையும். உறவினர் வருகையால் பலன் உண்டு. பெற்றோர்களின் ஆசி கிடைக்கும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பொறுப்புகள் கூடும். வாகன மாற்றம் உண்டாகும். மனஅமைதி சீர்குலையும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். ஆன்மீக சிந்தனை கூடும். பிள்ளைகள் வழியில் இன்பம் உண்டாகும். பெற்றோர்களிடத்தில் சமாதானம் கிடைக்கும். வேண்டாத நபர் விலகுவர். பழையகடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்பால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். திருப்புமுனையான காலம். பொருளாதார சிக்கல் நீடிக்கும். வியாபாரத்தில் கவனம் தேவை. பிரச்சனை முடிவுக்கு வரும். வர்த்தக தொழில் லாபம் தரக்கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,1,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,T

(தொடர்ச்சி ___ பக்கம்)

# மன்னாரில் போதை பொருள் விற்பனையுடன் தொடர்புபட்ட 9 கோடியே 30 இலட்சம் ரூபா சொத்து முடக்கம்

## பொலிஸ், அதிரடிப்படை இணைந்து நடவடிக்கை

- ந. லோகதயாளன்



பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் யுக்திய தேடுதல் நடவடிக்கையின் கீழ் குற்றப்புலனாய்வு பிரிவு கீழ் பணிக்கப்பட்ட விசாரணைக்கு அமைவாக சட்ட விரோத சொத்துக்கள் விசாரணை பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையிலேயே சந்தேக நபர் ஒருவரின் 9 கோடியே 30 லட்சம் பெறுமதியான சொத்துக்கள் இன்றைய தினம் வியாழக்கிழமை முடக்கப்பட்டுள்ளது.

மன்னார் தலைமன்னார் பகுதியை சேர்ந்த 43 வயதான சந்தேக நபர் ஒருவருக்கு சொந்தமான இரண்டு வீடுகள், சொகுசு வாகனம் உள்ளடங்களாக 9 கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களே மேற்படி நீதிமன்ற அனுமதியுடன் முடக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் 2002 ஆம் ஆண்டு அரச வீட்டுத்திட்டம் ஒன்றை பெற்று இரண்டு படகுகளை வைத்து சாதரண குடும்பமாக வாழ்ந்து வந்த நிலையில் 2019 பின்னர் குறிப்பிட்ட காலத்திற்குள் பல கோடி சொத்துக்களை சேர்த்துள்ளார்.



அதன் அடிப்படையில் குற்றப்புலனாய்வு பிரிவின் கீழ் இயங்கும் சொத்து முடக்கள் பிரிவினர் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் இன்று நீதிமன்ற அனுமதியை பெற்று வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜசேகர மேற்பார்வையின் கீழ் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபாலவின் தலைமையில் கொழும்பு குற்றபுலனாய்வு பிரிவின் சட்ட விரோத விசாரணை பிரிவு பொலிசாரினால் தற்காலிகமாக இன்றில் இருந்து 7 தினங்களுக்கு சந்தேக நபரின் சின்னக்கடையில் காணப்படும் கடைதொகுதியுடன் கூடிய வீடு ஒன்றும் தலைமன்னார் பகுதியில் உள்ள விசாலமான வீடு சொகுசு வாகனம் ஒன்று முடக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இதனை தொடர்ந்து உயர் நீதி மன்றத்தின் அனுமதியுடன் சொத்துக்களை அரசுடமையாக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளர்.

வடக்கில் சட்ட விரோதமாக சம்பாதித்த சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் முறை என்பதுடன் இது போன்று சட்டவிரோதமாக சொத்துக்கள் ஈட்டிய பல்வேறு நபர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# இவ்வார ராசிபலன்


(___ பக்கம் தொடர்ச்சி)




**தனுசு:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். குடும்ப வளர்ச்சி கூடும். கௌரவமான காலம். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்யோகத்தில் உயர்வு ஏற்படும். ஆரோக்யம் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கணவன், மனைவி உறவு நீடிக்கும். மருத்துவச் செலவில் திருப்தி அடைவீர். மகான்களின் சந்திப்பு கிட்டும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். பாதகம் விலகும். முத்தான வாய்ப்பு பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை மாறும். பிள்ளைகளிடத்தில் முன்னேற்றம் உண்டு. கடன் தொல்லை தீரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கட்டிடத்தொழில் லாபம் தரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். வேண்டாத விஷங்கள் விலகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். போக்குவரத்தில் கவனம் தேவை. பழையகடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மன சஞ்சலம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேரும். பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். வாயில்தேடி வாய்ப்பு வரும். காரிய தாமதம் ஏற்படும். எதிர்கால எண்ணம் உதயமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,4,1,3
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V




**மகரம்:** விறுவிறுப்பாக செயல்படும் வாரம். போட்டிகள் குறையும். பெற்றோர்களின் ஆசி கிட்டும். நல்லோர்கள் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். சுபச்செலவு அதிகமாகும். பொறுப்புக்கள் கூடும். வேலை பளு அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதை நீங்கும். விவாக முயற்சி வெற்றி தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. வியாபாரத்தடை ஏற்படும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். சாதகமான காலம். கௌரவமான தருணம். கன்னிப் பெண்களுக்கு கவனம் தேவை. மேலதிகாரியிடம் பாராட்டு கிடைக்கும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். விரும்பிய பொருள் கிடைக்கும். பெருமைகள் உயரும். சிரமங்கள் குறையும். நிர்வாக அலைச்சல் கூடும். வியாபாரம் சுமாராக இருக்கும். போட்டிகள் கடுமையாகும். குடும்ப ஒற்றுமை குறையும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். மரத்தொழில் லாபம் தரும். நன்மையான விஷயங்களை தொடர்வீர்கள். முதுகில் வலி வந்து நீங்கும். மனபயம் நீங்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பிரகதீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,9,3,2
அதிர்ஷ்டநிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K





**கும்பம்:** நன்மைகள் நாடி வரும் வாரம். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். உடல் அசதி உண்டாகும். உடன்பிறப்பால் உதவி உண்டு. படிப்பில் கவனம் தேவை. திடீர் பயணம் உண்டு. சம்பள உயர்வு உண்டு. சக ஊழியர்கள் உதவி உண்டு. பொறுப்புக்கள் கூடும். வியாபாரம் செழிக்கும். சாதுர்யமான காலம். விருப்பங்கள் நிறைவேறும். வேலை வாய்ப்புக் கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். பணவரவு பெருகும். அற்புத வாய்ப்பு கிட்டும். குடும்ப பிரச்சனைகள் தீரும். தேவைகள் நிறைவேறும். உடல் வலியிலிருந்து விடுதலை அடைவீர். எதிர்ப்புகள் விலகும். மெத்தனப்போக்கு விலகும். பயணம் வெற்றி தரும். சுறுசுறுப்புடன் செயல்படுவீர்கள். இனிதான செய்திகள் தேடி வரும். நினைத்த விஷயங்களில் வெற்றி நிகழும். பொன்னான நேரம் உங்களை வந்தடையும். பிள்ளைகளிடத்தில் உங்கள் அன்பு அதிகரிக்கும். மனதில் சந்தோஷம் அதிகரிக்கும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். புதிய எண்ணங்கள் உருவாகும். தொழில் வளம் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,3,9,7
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,I




**மீனம்:** உயர்வு பெறும் வாரம். புதிய முதலீடு லாபம் தரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவிற்கு வரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். பாதகமான சூழ்நிலை அகலும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். கலைத்தொழிலில் கவனம் தேவை. தாய்வழி உறவில் கவனம் தேவை. நட்டமில்லாத நன்மை தரும். சீரான வாழ்வமையும். சேமிப்பு அதிகமாகும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். செயல் விவேகம் கூடும். குளிர்பானத் தொழில் கவனம் தேவை. மனமகிழ்ச்சி அதிகரிக்கும். முயற்சிகள் பலிதமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். குடும்ப உறவு பலப்படும். குடும்ப வளர்ச்சி பெருகும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷம் கூடும். மன அமைதி உண்டாகும். பொருளாதார வாய்ப்பு தேடி வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம தேவதை, அதிர்ஷ்ட எண்: 1,5,4,9
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H

# மாமனிதர் ம.கா ஈழவேந்தன் அவர்களின் துயர் பகிர்வு அறிவித்தல்




தாயின் மடியில்
14
09
1932

ஈழத்தாயின் மடியில்
28
04
2024

# மாமனிதர் ம.கா ஈழவேந்தன்

யாழ் கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும், கனடா ரொரன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் கனகசபாபதி கனகேந்திரன் என்ற இயற்பெயர் கொண்ட மா மனிதர் மா.க.ஈழவேந்தன் அவர்கள் 28.04.2024 ஞாயிற்றுக் கிழமை அன்று ரொரன்ரோவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் கனகசபாபதி-சிவயோகம் இணையரின் அன்பு மகனும அருளாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும் யாழினி (தமிழ்நாடு), எழிலினி (தமிழ்நாடு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அரசேந்திரன் (தமிழ்நாடு), சம்பத்குமார் (தமிழ்நாடு) ஆகியோரின் பேரன்புமிக்க மாமனாரும் காலஞ்சென்ற யோகேந்திரன், இந்திராணி மற்றும் பாலேந்திரா (கொழும்பு), விஜயேந்திரராணி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சிவானந்தன் (ஈழநாடு), சண்முகசாமி (கொழும்பு, இலங்கை மத்திய வங்கி), மகேஷ், நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் புனிதவதி, மகேஸ்வரி, கணபதிப்பிள்ளை, கணேசமூர்த்தி, விக்னேஸ்வரன்(இலங்கை வங்கி) ஆகியோரின் அன்பு அத்தானும் இளங்கோ, சேரன், மோகன், தயாளன் ஆகியோரின் பாசமுள்ள பெரியப்பாவும் பாலக்கண்ணன், பாலமுரளி, மீரா, யசோதை, இராதை, ஆரூரன், குமரன், கோகிலா ஆகியோரின் அன்புத் தாய் மாமனும் இரா.உத்தமசோழன், மருத்துவர் இரா.தமிழ்க்காவிரி, தமிழழகன், பொழிலன் ஆகியோரின் பாசமுள்ள பாட்டனாரும், திகழ்மாறனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

**அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு விபரம்:**

பார்வைக்கு: Ajax Crematorium & Visitation Center

384 Finley Ave

Ajax, Ontario

L1S 2E3.

04 /05/ 2024, சனிக்கிழமை மாலை 5.00 - இரவு 9.00 வரை பார்வைக்கு வைக்கப்பட்டு 05/05/2024 ஞாயிறுக்கிழமை மதியம் 12.00 - மாலை 4.00 வரை இறுதி நிகழ்வும் தகனமும் இடம் பெறும்.

**தொடர்புகட்கு:**

கண்ணன்

647-657-8566

விஜிதரன்

647-783-3466

பாலகண்ணன்(மருமகன்)

416-884-8797

**குறிப்பு : மாமனிதர் ஈழவேந்தன் அவர்கட்கு அனைத்து தேசிய மரியாதையுடன் இறுதி வணக்க நிகழ்வு சனிக்கிழமை அன்று நடைபெறும். இதில் அனைத்து தமிழ் மாந்தர்களும் வேற்றுமைகள் களைந்து ஒன்றுபட்டு விடை கொடுத்து வணக்கம் செலுத்த வேண்டப்படுகின்றீர்கள்.**

# MORTGAGE
# FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- CONSTRUCTION
- COMMERCIAL
- VACANT LAND
- INDUSTRIAL

Providing the best future for your best living Without risks

Our Service




## RESIDENTIAL- COMMERCIAL

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

**NESAN**
*Subramaniam*

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RightBroker=RightMortgage
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

உதயன் சர்வதேச விருது விழா-2024
Uthayan International Awards Festival – 2024
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
Dance, Music and Awards Presentation
இசை, நடனம் அத்துடன் விருதுகள் வழங்கும் நிகழ்வு
மண்டபம்:-
The Estate Banquet & Event Centre
430 Nugget Ave,
Scarborough, ON M1S 4A4
26th May, 2024
Sunday,
at 6.00 PM

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record


PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
உதயம் 1465 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 3, 2024

# "கனடிய தேர்தல்களில் போட்டியிடும் தமிழ் பேசும் வேட்பாளர்களுக்காக ஆதரவு தேடும் செயற்பாடுகளிலிருந்து கனடிய தமிழர் பேரவை விலகி நிற்க வேண்டும்"

## "மக்கள் கூட்டமைப்பு" என்னும் பெயரில் நிறுவப்பட்ட பொது அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்து

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

"இனிவரும் காலங்களில் கனடாவில் நடைபெறவுள்ள மத்திய, மாகாண மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடும் தமிழ் பேசும் வேட்பாளர்களுக்காக பல அமைப்புக்களும் தனிநபர்களும் ஆதரவு தேடும் பங்களிப்பினைச் செய்து வருகின்றார்கள். குறிப்பாக தமிழ் பேசும் மூத்தோர் சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தாங்கள் விரும்பும் வேட்பாளர்களுக்கு ஆதரவைத் தேடும் செயற்பாடு தீவிரமாக செயற்பட்டு வருகின்றார்கள். இதேவேளை இலங்கை அரசோடும் பௌத்த பிக்குகளோடும் இணைந்து "இமாலயப் பிரகடனம்" என்னும் தமிழர் விரோத செயற்பாட்டை கையிலெடுத்ததன் காரணமாக கனடாவில் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியும் மக்கள் ஆதரவை இழந்தும் பின் தள்ளப்பட்டுள்ள கனடியத் தமிழர் பேரவையின் முக்கிய உறுப்பினர்களும் சில தொகுதிகளில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்களுக்கு ஆதரவைத் தேடும் செயற்பாடுகளிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

# "உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தோடு தன்னை இதயசுத்தியோடு இணைத்துப் பயணித்தவர் அண்ணல் ஈழவேந்தன் அவர்கள்"

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தி

உலகெங்கும் பரந்து வாழும் எமது தமிழ் பேசும் உறவுகள் மத்தியில் ஒரு நேர்மையான அரசியல்வாதியாகவும் தமிழ்ப் பற்றும் மன உறுதியும் கொண்டவராகவும் அச்சம் தவிர்த்து வெளிப்படையாக தனது கருத்துக்களை பொது மேடைகளில் பகிர்ந்து கொள்ளும் துணிச்சல் கொண்டவராகவும் விளங்கிய ஈழவேந்தன் ஐயா அவர்கள் கனடாவில் காலமானார் என்ற செய்தி அறிந்து அதிர்ச்சியடைந்தோம். அவரது கடந்த கால செய்ற்பாடுகள் அனைத்தும். தமிழ்ப் பற்றும் தமிழ்த் தேசிய உணர்வும் கொண்டவர்களால் நன்கு கவனிக்கப்பெற்று. அனைவராலும் நேசிக்கப்பெற்றவராக விளங்கினார்.

அத்துடன், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தோடும் தன்னை இதயசுத்தியோடு இணைத்துப் பயணித்தவர் அண்ணல் ஈழவேந்தன் அவர்கள். உலகில் பல நாடுகளில் நடைபெற்ற இயக்கத்தின் மாநாடுகளில் எவ்வித சோர்வும் இன்றி உற்சாகமாகக் கலந்து கொண்டு பயனுள்ள உரைகளை ஆற்றி உலகத் தமிழ் அறிஞர்களின் பாராட்டுக்களைப் பெற்றவர் ஈழவேந்தன் ஐயா என்றால் அது மிகையாகாது"

இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மொன்றியாலில் சிறப்பாக நடைபெற்ற TamilBee விளம்பர வலைத்தளத்தின் இரவு விருந்து 2024



மொன்றியலில் **TamilBee** விளம்பர வலைத்தளத்தின் விழா கடந்த சனிக்கிழமை 27 ஏப்பிரல் 2024 அன்று மிக சிறப்பாக ஏற்பாடு செய்யப்பெற்று இறுதிவரை எவ்வித தடங்கலோ தாமதமோ இன்றி நடைபெற்றது.

**TamilBee** (தமிழ் தேனீ) என்பது மொன்றியல், ரொரோன்ரோ பெருநகரங்களில் வர்த்தக நிறுவனங்கள், பொது அமைப்புக்களின் விபரங்கள், நிகழ்வுகள் மற்றும் சலுகைகள் என்பவற்றை தொகுத்து தரும் வலைத்தளமும் அலைபேசி செயலியும் ஆகும். இந்த செயலி மக்களின் ஆதரவைப் பெற்று பல இடங்களிலும் பேசப்படும் விடயமாக உள்ளது குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி 14ம் பக்கம்)



# தான் பிறந்து வளர்ந்த பிரதேச மாணவர்களுக்கு கற்றல் தொடர்பான உதவிகளை வழங்கிவரும் கனடா வாழ் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை

தான் பிறந்து வளர்ந்த இலங்கையின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கிராமப் பிரதேசங்களில் கற்றுவரும் மாணவச் செல்வங்களுக்கு தொடர்ச்சியாக கற்றல் தொடர்பான உதவிகளை கனடா வாழ் சமூகப் பணியாளர் விசுவலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களை கனடாவிலும் தாயகத்திலும் வாழும் கல்விச் சமூகம் சார்ந்த பெரியோர்களும் ஆசிரியப் பெருந்தகைகளும் மாணவச் செல்வங்களும் அவர்தம் பெற்றோர்களும் பாராட்டி மகிழ்கின்றார்கள். (தொடர்ச்சி 14ம் பக்கம்)




# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL-2024
# Announcing three Award Recipients from abroad.
# கனடாவில் "உதயன் சர்வதேச விருது விழா – 2024

வெளிநாடுகளிலிருந்து சிறப்பு விருதுகளைப் பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மூன்று விருதாளர்கள்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்


Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H. Selvanayagam
Broker